# திருக்கோயில்

பிப்ரவரி 1981 ரூ. 1-25





வடார்க்காடு மாவட்டம் இரத்தினகிரி மலைமீது, விருது நகர் வி.பி.எஸ்.ஏ. இரத்தின நாடார் அவர்கள் நினைவாகக் கட்டப்பெற்ற பெரிய குடிநீர்த் தேக்கத் தொட்டியினை, அறநில்லய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்து உரை நிகழ்த்துதல். விழாவில் முன்னாள் எம்.எல்.ஏ. திரு. ஏ. கே. அரங்கநாதன், திரு. ஏ.எம். சேதுராமன், எம்.எல்.ஏ., துணை ஆணையர் திரு. வி. செள. கோதண்டபாணி, பிஎஸ்.சி., பி.எல். ஆகிய பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முகப்பு:

அருள்மிகு தென்முகக் கடவுளின் அழகிய திருவுருவச் சிற்பம்

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 | திருவள்ளுவர் ஆண்டு 2012, இரவுத்திரி ஆண்டு-மாசி (பிப்ரவரி 1981) | மணி: 5

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

**திருக்கோயில்** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் "சந்தாதாரர்" ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

இறையுண்மையும் இற்றை அறிவியலும்
—'மொழி ஞாயிறு' திரு. ஞா. தேவநேயப் பாவாணர்

ஞானநெறி
—சிவத்திரு குருகுலம் அழகரடிகளார்

பழந்தமிழ் நாடகச் சிறப்பு
—டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்

திருமங்கையாழ்வார் அருளிய
திருவெழு கூற்றிருக்கை (உரை விளக்கம்)
—ஆசிரியர்

காப்பியங்களின் கலைநயம்
—பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன், M.A., Ph.D.

சதரத்தின சங்கிரகம்
—பேராசிரியர் திரு. பெ. திருஞான சம்பந்தம், M.A., L.T.

துறவிகளும் போற்றிய தமிழ்
—'கலைமாமணி' திரு. நாரண துரைக்கண்ணன்

நற்றமிழ்ப் பெரியரும்,
கொற்றவேற் கலியனும்
—திரு. தி.அ. அனந்தாழ்வான்

திருஞானசம்பந்தர் அருளிய
திருவெழு கூற்றிருக்கை (உரை விளக்கம்)
—ஆசிரியர்

அருட்பெருங்காப்பியம்
—மகாவித்துவான் திரு. சி. அருணை வடிவேல் முதலியார்

எம்பெருமானும் யானையும்
—மகாவித்துவான் திரு. பி.ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்

சிற்பக்கலை மாட்சி
—திரு. செ. வைத்தியலிங்கன், M.A., M.Litt.

கம்பரின் காவிய ஓவியம்
-'முத்தமிழ்செல்வர்' திரு. ரெ. இராமசாமி

தெய்வ இசைப்பனுவல்கள்
—பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# இறையுண்மையும், இற்றை அறிவியலும்

''பேரறிஞர்'' ''மொழிஞர்யிறு''

திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள்

கடவுள் உண்டென்பாரும் இல்லையென்பாரும், தொன்றுதொட்டு உலகில் இருந்து வருகின்றனர். உண்டென்போரே இன்றும் பெரும்பாலரேனும், இல்லை என்பார் தொகை வரவர, வளர்ந்து வருகின்றது.

## இறையுண்மைக்குச் சான்றுகள் :

(1) கதிரவக் குடும்பத்தைச் சேர்ந்த கோள்கள் எல்லாம், இடையறாது ஓர் ஒழுங்காக இயங்கி வருகின்றன.

ஓர் ஊரில் ஊர்காவலோ அரசியலாட்சியோ சிறிது நேரம் இல்லாவிடின் கலகமுங் கொள்ளையும் கொலையும் நேர்கின்றன. உயிரற்ற நாளும் கோளும், பாவையாட்டுப்போல் ஒழுங்காக ஆடிவரின், அவற்றை ஆட்டும் ஓர் ஆற்றல் இருத்தல் வேண்டும். அவ்வாற்றல் அறிவற்றதாயிருக்க முடியாது. அவ்வறிவே இறைவன்.

(2) இவ்வுலகம் முழுவதற்கும், கதிரவன் பகல் விளக்காகவும், திங்கள் இரா விளக்காகவும் எண்ணிற்கும் எட்டாத காலத்திலிருந்து விளங்கி வருகின்றன.

ஒரு வீட்டில் விளக்கேற்றி வைப்பது அதிற் குடியிருக்கும் மக்கட்கே. மக்களில்லாத வீட்டில் விளக்குத் தானாகத் தோன்றி எரியாது. பல வுலகங்கட்கும் இரு சுடரையும் விளக்காக ஏற்படுத்தியவன் ஒருவன் இருத்தல் வேண்டும். வேலை செய்யாத தூக்க வேளையாகிய இராக் காலத்திற்கு, வெப்பமான நெருப்பொளி விளக்காகாமல், குளிர்ந்த நிலா ஒளி விளக்காக இருப்பதும், கவனிக்கத் தக்கது.

(3) பிற கோள்களைப்போற் சுற்றாது ஒரேயிடத்திலிருக்கும் கதிரவன், பத்துத் திசையும் ஒளி சமமாகப் பரவுமாறு உருண்டையா யிருப்பதும், அளவிடப் படாத நீள் பெருங்காலம் எரிந்து வரினும் அதன் எரியாவி குன்றியணையாதிருப்பதும், இயற்கைக்கு மாறான இறும்பூதுச் செய்தியாதலால், அதை யியக்கியாளும் ஒரு பரம்பொருள் இருத்தல் வேண்டும்.

(4) கோள்கள் ஒன்றோடொன்று முட்டாது தன் தன்பாதை வட்டத்தில் இயங்குமாறும், இவை சுழலுங்கால் அவற்றின் மேலுள்ள பொருள்கள் நீங்காவாறும் ஒவ்வொன்றையுஞ் சூழ ஒரு கவர்ச்சி மண்டலம் அமைந்திருப்பதும், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றலின் அமைப்பே.

(5) காலமும் இடமும் தொடக்கமும் ஈறும் இல்லாதவையாதலால், இற்றை மக்களுலகந் தோன்றுமுன், எண்ணிக்கை யற்ற உயிருலகங்கள் தோன்றி யழிந்திருத்தல் வேண்டும். இதைத்தான்,

''படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்
அன்னோன் இறைவ னாகும்என் றுரைத்தனன்''

என்று மணிமேகலைக்கு அறிவுறுத்திய சிவனியத்தருக்கி (சைவ வாதி), கூறுகின்றார்.

(6) மாந்தன் தோன்றி ஐம்பதினாயிரம் ஆண்டாயிற்றென வைத்துக் கொள்ளினும், நூற்றுக்கணக்கான தலைமுறைகள் கழிந்திருத்தல் வேண்டும். பத்துக் கணக்காகத் தொடங்கிய மக்கள் தொகை இன்று நூறு கோடிக் கணக்காகப் பெருகியுள்ளது. ஒவ்வொரு தலைமுறையிலும் எத்தனையராயினும், அத்தனையரும் அடையாளங் காணுமாறு வெவ்வேறு முகவடிவிலுள்ளனர். கைவரையும் வேறுபட்டுள்ளது. இது அறிவு நிரம்பிய ஒரு பேராற்றலின் செயலேயாகும்.

(7) ''கடவுளை நம்பினோர் கைவிடப் படார்'' என்பது, இன்றும் பலர் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்படுகின்றது.

(8) உடல்நலம், மனநலம், மதிநலம் முதலிய நலங்கள் உள்ளாரும் இல்லாரும் படைக்கப்பட்டிருத்தல்.

(9) பஞ்சம், கொள்ளைநோய், பெரு வெள்ளம், நிலநடுக்கம் முதலிய இயற்கை அழிவு நிகழ்ச்சிகள் நேர்தல்.

## இறையின்மைக்குக் கூறப்படும் சான்றுகள் :

(1) கடவுள் புறக்கண்ணிற்குப் புலனாவதில்லை.

(2) ஒன்றோடொன்று முரண்பட்ட பல்வேறு மதங்கள் உலகில் வழங்கி வருகின்றன.

(3) நல்லோர் பலர், வறுமை, நோய், பிறரால் துன்பம், முதலியவற்றால் வருந்திக் குறுவாழ்க்கையராய்ச் சாக, தீயோர் பலர் எல்லா வகையிலும் இன்புற்று நீடு வாழ்கின்றனர்.

(4) பல அஃறிணை உயிரினங்கள் பிறவற்றைக் கொன்று தின்பனவாகவே படைக்கப்பட்டுள்ளன.

(5) சிலர் எத்துணை உருக்கமாய் இறைவனை வேண்டினும், தாம் விரும்பியதைப் பெறுவதில்லை.

இங்ஙனம், கடவுள் உண்டென்பதற்கும் இல்லையென்பதற்கும் காட்டப்படும் சான்றுகளுள், உண்டென்பதற்குரியவையே மிகுந்தும் வலிமையுள்ளனவாகவும் இருக்கின்றன. காட்சியளவை போன்றே கருத்தளவையும் உண்மையறியும் வழியாகும்.

கடவுள் எங்கும் நிறைந்து ஆவி வடிவிலிருப்பதால், அவரை ஒருவனும் புறக்கண்ணாற் காண முடியாது. முரண்பட்ட மதங்கள் மாந்தர் படைப்பு. நல்லோர்க்கு மறுமையில் நல்வாழ்விருக்கலாம். பல் பிறவி நம்பிக்கையாளர், நல்லோர்களின் துன்பத்தைப் பழவினைப் பயன் என்பர்.

மாந்தனின் மதியாற்றல் மிகக் குறுகிய அளவுக்குட்பட்டதாதலின், இறைவன் ஆட்சியிலுள்ள எல்லாவற்றையும் அறிய முடியாது.

''ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில்
நாழி முகவாது நானாழி'' (மூதுரை)

நல்லோர்க்கு நேரும் தீங்குகட்கு, அவர் பழம்பிறப்பிற் செய்த தீவினைகளைக் கரணியமாகக் காட்டுவர் கொண்முடிபாளர்.

எங்ஙனமிருப்பினும், இரு சாராரும் தத்தம் கொள்கையை எதிர்க் கொள்கையார் நம்புமாறு நாட்ட முடியாதிருப்பதால், கருத்து வேறுபாட்டிற்கு இடந்தந்து, ஒருசாராரை யொருசாரார் பழிக்காதும் பகைக்காதும் இருப்பதே, உண்மையான பகுத்தறிவாகும்.

மேலும் கடவுள் உண்மையாக இல்லையெனின், நம்பாதவனுக்குக் கேடில்லை. ஒருகால், உள்ளாரெனின் அவனுக்குக் கேடுண்டாம். ஆதலால், நம்பா மதத்தினரும், நம்பும் மதத்தைக் கடைப்பிடிப்பதே சாலச் சிறந்ததாகும்.

## மதத்தை அழிக்க முடியுமா ?

கடவுள் நம்பிக்கையில்லாத தற்பெருமை வேந்தரும், நெறிதப்பிய அறிவியலாராய்ச்சியாளரும், பொதுவுடைமைக் கொள்கையினரும், கடவுட் கொள்கையை ஒழிக்கத் தம்மால் இயன்றவரை முயன்று வந்திருக்கின்றனர். மதவியல் முற்றும் மனத்தைப் பொறுத்ததாதலின், அதை எவரும் அழிக்கவியலாது. சாக்கிய நாயனார் பகைவர் போன்று சிவப் படிமையைக் கல்லாலடித்தே, சிவனடியாராயினார் எனின், வேறு என்ன சொல்லவிருக்கின்றது!

மேலும், பொதுவுடைமை இறைவனுக்கேற்றதே. மக்களெல்லார்க்கும் உணவெனின், தந்தை மகிழத்தானே செய்வான்! அங்ஙனமே பரமத் தந்தையும்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக வுலகியற்றி யான்''

என்றார் திருவள்ளுவர். கிறித்தவர் எதிர்நோக்கும் ஆயிரவாண்டு அரசாட்சியும் பொதுவுடைமை வகையில்தான் இயலும்.

கனவு காணாது உறங்கும் நேரம் தவிர, மற்ற எல்லா நேரத்திலும் இருப்பினும், நடப்பினும், வேலைசெய்யினும், உரையாடினும் உண்ணினும், இறைவனை நினைக்கவும் வழுத்தவும் வேண்டவும் இயலுமாதலின், மனம் உள்ளவரை மதத்தை ஒருவராலும் அழிக்க முடியாதென அறிக.

## நம்பா மதமும் ஒரு மதமே :

கடவுளும் மறுமையும் இல்லையெனும் கொள்கையும் ஒரு மதமாதலால், மதத்தை ஒழிக்க வேண்டுமென்பது, செருக்கையடக்க வேண்டும் என்றே பொருள்படுவதாகும். உள்மதம் (ஆஸ்திகம்), இல்மதம் (நாஸ்திகம்) என்னும் வழக்கையும் நோக்குக.

மதவெறியும் அதனாலேற்படும் போருமே, மக்கள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கும், அமைதியாய் முன்னேறுவதற்கும் தடையாய் நிற்கின்றன. மதம் தன்னளவில் மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையன்று. தமிழர் எல்லாத் துறையிலும் தலை சிறந்து சீருஞ் சிறப்புமாக வாழ்ந்தது, குமரி நாட்டு மத வாழ்க்கைக் காலமே. இன்றும் அறிவியல் கம்மியத் துறைகளில் தலைசிறந்து, திங்களை

அடைந்த அமெரிக்கர், கடவுள் நம்பிக்கையுள்ளவரே.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் உண்மையை யுணர்ந்து, மாந்தரெல்லாரும் கடவுளின் மக்களான உடன் பிறப்பென்று கருதி; ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்று அன்பொடு கூடி வாழ்வதற்கே மதம் ஏற்பட்டது. ஆயின், மாந்தர் தம் மனம் போன வாறு மதத்தைத் திரித்து, தம்மொடு மாறுபட்ட கருத்தினரைப் பகைத்து அவரினின்று பிரிந்து போவதும் அவரோடு பொருவதும், வெறியான மதத்தின் விளைவேயன்றி, நெறியான மதத்தின் விளைவன்று.

மாந்தனின் புற நாகரிகத்தினும் சிறந்தது அகநாகரிகம். அதன் விளைவே பல்வேறு பண்பாட்டறிவியல்கள். அவற்றுள் தலைமையானது மதவியல் அல்லது மெய்ப்பொருளியல் என்றே, மேலையராலும் கருதப்பெறுகின்றது.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''

என்பது திருக்குறள் மறை.

''அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்பது திருமந்திர மறை. இங்ஙனம் உயர்ந்த தேவிக அறத்தை வலியுறுத்தும் மதவியல், பகுத்தறிவிற்கு மாறானதென்று எந்தப் பகுத்தறிவாளன் சொல்ல முடியும்?

கத்தரிக்காயறுக்க வாங்கிய கத்தி, கழுத்தறுக்குங் கருவியாயிருப்பின், அது கழுத்தறுத்தான் குற்றமா? கத்தியின் குற்றமா? மாந்தரையெல்லாம் கடவுளின் மக்களாக்கி உடன் பிறப்பன்பால் ஒன்றுபட்டு, இன்புற்று வாழச் செய்யும் உயர்ந்த மதவியலை, ஒரு தன்னலக் கொள்ளைக் கூட்டம் தாம் வாழவும், பிறர் தாழவும் பயன்படுத்தின், அக்குற்றம் எங்ஙன் மதவியலைச் சாரும்?

இன்று கடவுளில்லை யென்று சொல்வாரும் கொள்வாரும், தமக்குச் சமமானவரும், தம்முடன் உண்ணும் தகுதியுடையவருமான வகுப்பாருடனும் மணவுறவு கலவாது, பண்டை நாள் வழியிலேயே நின்று, என்றும் தம் பிறவிக் குலத்துள்ளேயே கொள்வன கொடுப்பன செய்து கொள்வது, எங்ஙனம் பகுத்தறிவுச் செயலாகும்? இதனாலும், மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யன்றென்பது பெறப்படுகின்ற தன்றோ? ''பழியோரிடம் பாவமோரிடம்''

மிகத் தொன்மை வாய்ந்த குமரி நாட்டிலும், கடவுள் நம்பிக்கையில்லாதவர் சில இருந்தனர். தற்போதைய நம் நாட்டிலும், பிறநாடுகளிலும், கடவுள் நம்பிக்கையில்லாத பலரிருக்கின்றனர். இது பிறவிக் குணங்களுள் ஒன்று.

கடவுளும் மறுமையும் இல்லையென்று கூறும் உலகியம் (லோகாயதம்) என்னும் மதம், கடைக் கழகக் காலத்தில் தமிழகத்திலிருந்தமை, ''பாங்குறும் உலோகாயதமே பௌத்தம்'' என்னும் மணிமேகலை யடியால் அறியப்படும். இம் மதவியலை நூலாக விரித்துரைத்தவன் சார்வாகன் (Charvaka).

''அச்சமே கீழ்கள தாசாரம், எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது''

என்பது உண்மையாதலால், ஓரளவு நல்லொழுக்கத்திற்குத் தூண்டுகோலாக இருக்கும் வகையிலேனும், மதத்தால் நன்மையுண்டென்று கருதி, மதத்தின் பெயரால் உண்மையில் தீங்கு செய்யும் பிறவிக் குலப்பிரிவினையையே, அறவே ஒழித்தல்வேண்டும்.

இறைவனின்றி எல்லாம் இயற்கையாகத் தோன்றிய தென்பதையே அறிவியற் பொது அடிப்படையாக இக்காலத்துப் புதுப் புனைவாராய்ச்சியாளர் பலர் கொண்டுள்ளனர். தார்வின் (Darwin) கொள்பும் (Theory), இதற்குத் துணையெனக் கருதுகின்றனர். ஆயின் தார்வினே இறுதிக் காலத்தில் தம் இளமைக் காலக் கொள்பு பற்றி வருந்தினதாகத் தெரிகின்றது. தாழ்ந்த இனத்தினின்று உயர்ந்த இனம் படிமுறையாகத் தோன்றிற்று என வைத்துக் கொள்ளினும், அடிப்படை யுயிரியான ஒற்றைப் புரையன் (Unicellular being) எங்ஙனம் தானே தோன்றும்? சடத்தினின்று சித்துப் பொருள் தோன்றுமோ? தோன்றாதே! ஆதலால், திரிபாக்கக் கொள்பு (Evolution theory) தவறென்றே கொள்ள வேண்டியுள்ளது. இனி, கதிரவனி னின்று ஞாலம் வீழ்ந்த தெனின், கதிரவன் எதினின்று வீழ்ந்தது? இக்கொள்பாளர் கணக்கற்ற கதிரவக் குடும்பங்கள் பெரு விசும்பில் (Grand Universe) உள்ளதை அறிந்தாரா? அறிவியலாராய்ச்சியாளர் இயற்கையிலுள்ள, இறும்பூதுகளைக் கண்டு இறைவனின் பெருமையை உணர்ந்து வியப்பதற்கு மாறாக, திறவுகோல் பெற்ற வேலைக்காரன் திருடனாக மாறிவிடுவது போல், தனக்கு நுண்மதியளித்த இறைவனையே இல்லையென மறுப்பது, விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது போன்ற தன்றோ!

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே''

(திருமந்திரம்)

காணப்பட்ட பொருள்களைப் பற்றியே கருத்து வேறுபாடிருக்கும்போது, காணப்படாத கடவுளையும் மறுமையையும் பற்றிக் கருத்து வேறுபாட்டிற்கு மிகுந்த இடமிருப்பதால், கடவுளை நம்புகிறவரும் நம்பாதவரும் ஒருவரையொருவர் குறைகூறாதும் வெறுக்காதும், உயர்திணைக்குரிய உடன் பிறப்பன்பு பூண்டொழுகுதல் வேண்டும்.

கடவுள் ஒருவரேயாதலால், கடவுள் மதத்தாரும் தம்முள்ளே பல்வேறு கொள்கைகளைக் கொண்டிருப்பினும், பொது வாழ்வில் ஒரு தந்தையின் மக்கள்போல் ஒன்று படல் வேண்டும்.

## ஆண்டாள்

திருவில்லிபுத்தூரில். திருவாடிப்பூரத்தில், பூமிப்பிராட்டியார் அம்சமாகத் தோன்றியருளினார். தம்முடைய திருநந்தவனத்தில் திருத்துழாய்ச் செடியின் கீழ்க் குழந்தையாகக் கிடந்த இவரை, விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் எடுத்துக், கோதை என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தார். பெரியாழ்வார் வடபெருங்கோயில் உடையானுக்காகத் தொடுக்கும் மலர்மாலைகளைத், தான் முதலில் சூடி மகிழ்ந்து, பிறகு எம்பெருமானுக்குக் கொடுத்தவள் ஆதலின், இவருக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் ஒரு பெயர் உண்டு. தம் அன்பின் மிகுதியாலும், காதல் உணர்வின் சிறப்பாலும், ஆண்டவனைத் தன்பால் ஏற்று ஆண்டு கொண்டவள் ஆதலின், ஆண்டாள் என்றே இவர் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுவார். ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று அணியரங்கத்து அம்மானுக்கே அற்றுத் தீர்ந்த காதலை உடையவளாய் இருந்து, அப்பெருமானுக்கே மணவாட்டியாகும் பேறு பெற்று, அவனோடு ஒன்றிக் கலந்தவள். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டாகும்.

## குலசேகராழ்வார்

இவர் சேரநாட்டில், திருவஞ்சைக்களம் என்னும் நகரத்தில், திடவிரதன் என்னும் அரசனுக்குக் கௌஸ்துப அம்சமாக, மாசி மாதத்தில் புனர்வசு நட்சத்திரத்தில் திருவவதாரம் செய்தார். தமது குலமரபுக்கு ஏற்ப அரசராய் முடிசூடப் பெற்றுக் குடிமக்களை நன்கு பாதுகாத்து வந்தார். "பெருமாள்" என்பது சேர அரசர்களுக்குரிய பட்டப்பெயர். ஆதலின் இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும் குறிப்பிடுவர். இராமபிரானிடத்தும், இராமாயணத்திலும் இவர் மிகவும் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். "ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்'' என்னும் நிலையிற் பக்தியுணர்வில் திளைத்தவர். ''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல், அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'' என்று அருளிச் செய்தவர் இவர்.

—ஆசிரியர்

# ஞான நெறி

"சங்கநூற் பெரும்புலவர்"
சிவத்திரு. குருகுலம் அழகரடிகளார்,
மதுராந்தகம்.

**சீலமும் நோன்பும் (சரியை, கிரியை) :**

உலகில் சமயம், மதம், மார்க்கம், ஆசாரம் முதலியன, மக்கள் வாழ்க்கை உயரும் முறையிலேயே ஏற்பட்டன. இக் கோட்பாடுகள் தேவையே என்றாலும், அவற்றில் பற்று அற்றிருக்க வேண்டும். தாமரை மேல் தண்ணீர்போல் தொடர்பு கொண்டும், தொடர்பு இல்லாமலும் நடந்து கொள்ள வேண்டும். சாதி முதலிய வற்றில் அபிமானித்து உழலக்கூடாது, என்றுதான் வள்ளலாரும் தெளிவித்தார்; இவற்றில் தடுமாறக்கூடாது என்றுதான் மாணிக்கவாசகரும் விளக்கினார்.

உலகியலில், தேவையான எல்லாப் பொருள்களோடும் இருந்து கொண்டே அவற்றுள் பற்று வைக்காமல் இருப்பது, அறிவு நெறி. சமயம் முதலிய வேறுபாடுகள் அடிமரம் போலவும், கிளைகள், இலைகள் மலர்கள், காய்கள், கனிகள் போலவும் படி முறையாய் ஒன்றுக்கொன்று உதவியும் துணையுமாய் இருக்கின்றன.

பற்று நீங்குதல் என்றால், பயன் படுத்துதல் என்று பொருள். பற்று இருக் கும் வரையில் எதையும் பயன்படுத்த முடி யாது. கரும்பைச் சக்கையாக்கியபோது தான், அதன் பயனாகிய சாற்றைப் பெற முடிகிறது. சமயம், மதம் என்று பெருமைப் படுத்திக்கொண்டு இருப்பதைவிட, அவற் றைப் பயன்படுத்திக்கொண்டு பற்றற் றிருப்பதே சிறப்பு. பெரியோர்கள் எல் லாம் இவ்வாறுதான் நடந்து கொண் டார்கள்.

**செறிவும் அறிவும் (யோகம், ஞானம்):**

சாதியைவிடச் சமயங்களும், சமயங் களைவிட மதங்களும், மதங்களைவிட மார்க்கங்களும் மேன்மேல் உயர்ந்தவை; மார்க்கங்களிலும், சத்மார்க்கம் என்னும் அறிவு நெறி தலையானது. 'மார்க்கங்கள்' ஆண்டவனை உறவு முறையில் நெருங்கு கின்றன. உறவுகளால் அன்பு என்னும் உணர்வு மலர்கிறது. அந்த அன்பு, அருள் கொண்டு உயர்ந்தால் பயன் சிறக்கும்.

''உறவுகோல் நட்டு, உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே'' என்றார், அப்பர் அடிகள். இப்படி அன்பு சிறப்பது அறிவு நெறி, இதில் செறிவும் அடங்கியிருக்கிறது.

அன்பிலும் உயர்ந்த உணர்வு உண்டு; அது கணவன் மனைவியர் உணர்வு; உறவு முறையில் இதுவே சிறந்தது; மிகவும் அணுக்கமானது; இரண்டற்றது; இந்த உறவு முறையால் இறைவனிடம்தொடர்பு கொண்டு அணுகிச் செல்லச் செல்ல அப் பெருமானின் இணக்கம் உயிர்கட்கு மிகுந்து வரும். அறிவு இங்ஙனம் நெறி கொண்டு செல்லுகிறது.

இத்தகைய உண்மையான அறிவு நெறியிலும், சில படிமுறைகள் காணலாம். உண்மை என்றால் உண்முகம் நினைவுக்கு வரும். அகம் என்பது அது. கணவன் மனைவியர் உறவு இத்தகைய அகமார்க்க மாகும். ஆகவே உண்மை நெறியில் சன் மார்க்கம், இல்வாழ்க்கையிற் கற்பு மேம் பட்ட உறவாய்த் தொடங்கி, மலரக்கூடியன எல்லாம் மலர்ந்து, இறைத் தொடர்பில் ஓங்கி முழுமை அடைகிறது.

**இயற்கையுண்மை, விளக்கம், இன்பம் :**

உள்ள பொருள்களிலும் எக்காலத்தி லும் ஒரே சீராய் மங்காமல் உள்ளதும் உண்டு. அதுதான் கடவுள் என்பது. மற்ற உள்பொருள்களெல்லாம் ஒரே சீராய் உள் ளனவல்ல. ஆன்மாவும் உள்பொருளே யாயினும், அது வளர்ச்சிக்குரியது. உலகம் உள்ள பொருளே; ஆனால், தேய்வுக் குரியது. ஆதலால் கடவுள் ஒருவரே ஒரே சீராய் இருக்கும் உள்பொருள்.

இத்தகைய உள்பொருள்களின் இறை வனே தலையானவன். அவன் உள்ளவ னாய் இருப்பதோடு, விளங்குவோனாகவும் இருக்கிறான். அறிஞன் ஆதலால், அவ னுக்கு விளக்கம் இருக்கிறது. உள் பொரு ளைப் பற்றினால் உள் ஒழுக்கம் சிறக்கும். அது நிறைவடைகிறபொழுது வெளிமுகத் தில் விளக்கம் காட்டும்.

இல்பொருளாய் இருந்தால் வெளி வந்து விளங்க வாயில் இல்லை. காய்களில் சாறு நிறையும்பொழுது கனிகளாய் நிறங் கொண்டு, வெளி முகத்தில் விளக்கம் காட்டுகிறது. ''காயெலாம் கனியெனக் கனிவிக்கும் ஒரு பெருங் கருணை அமுதே'' என்னும் வள்ளலார் பாடல் இங்கே நினைக்கத்தக்கது.

இப்படி உள்ளே இருப்பது வெளியே முன்வந்து விளங்குவதே, 'முல்லையொழுக் கம்' எனப்படும். இதை 'இருத்தல் ஒழுக் கம்' என்றும் சொல்வார்கள். 'உள்முக மான இருத்தல் ஒழுக்கம்' என்பது அதன் பொருள். உள்முகத்தில் இருத்தல் சிறந் தால் வெளி விளக்கம் மிகுதியாகும். கற்பு ஒழுக்கம் என்று சொல்வதும், ஒருமை கொண்டு, இங்ஙனம் உள்பொருள் பற்றித் தவம் இருக்கும் ஒழுக்கமேயாம்.

கடவுள் உள்பொருளா யிருப்பதோடு சூரியனைப்போல, விளங்கும் பொருளாக வும் மிளிர்கிறார். இருளை நாம் விரும்புவ தில்லை. காரணம், அது விளக்கமில்லா தது. ஆதலால் உள்பொருள் என்றால், அது விளக்கமுடையதாயும் இருந்தால் மட்டுந்தான் போற்றுதற்குரியதாகும்.

இனி, உள்பொருள் என்பது, விளங்கு வதாய் இருப்பதோடு, பயன் தருவதாயும் மேம்பட வேண்டும். பயன்படுவதிலே தான் தூய இன்பம் இருக்கிறது. இவ் வளர்ச்சிதான் 'சத்' நெறியின் உயர்நிலை. இறைவன் இவ்வாறுதான் இருக்கிறான். அவன் சத்தாகவும்(உள்ள பொருளாகவும்), சித்தாகவும் (விளங்கும் பொருளாகவும்), ஆனந்தமாகவும் (பயன்படும் பொருளாக வும்), சச்சிதானந்தமாக அதாவது சத்து சித்து ஆனந்தமாக இருக்கிறான். ஆன்மா கூடிய வரையில் உலகத்தில் இவ்வளர்ச்சி யைப் பெறுவதுதான் அறிவு நெறி (ஞான மார்க்கம்) எனப்படும்.

ஆன்மா, சிற்றறிவுடையது; உள் பொருளே; அது சீலத்திற் பழகினால் அந் நிலையில் இயன்றவரையில் நிலை தாழா மல் உயர்ந்து கொண்டு ஒரே சீராய், (சத் தாய்) உள்ளதாகும். நோன்பைப் பின் பற்றினால் அந்நிலையிலிருந்து, விளங்கும் 'சித்' நிலைக்கு உயரும்; சீலம் நோன்பு களோடு செறிவையும் பின்பற்றினால்'சித்' நிலையில் ஆழ்ந்த ஒருமையிற் சிறக்கும்; சீலம் நோன்பு செறிவுகளோடு முற்றும் பற்றற்ற அறிவை (ஞானத்தை)யும் பின் பற்றினால், பயன்படும் பெருநிலை (ஆனந் தம்) பெருக்கெடுக்கும்.

அறிவுக் கூட்டம் :

சச்சிதானந்தப் பொருளை, இங்ஙனம் அதன் இயல்பிற் பழகிப் பின்பற்றுகிற வர்கள், தமக்குள் வேற்றுமை கொள்ளா மல் எப்பொழுதும் ஒற்றுமையாய்க் கூடி இருந்து வருவார்கள். இறைவன் என்னும் ஒரு பொருளினிடத்தில் தொடர்பு இருப்ப தனால் அவர்கட்குள் இவ்வொற்றுமை சிறக்கிறது. நிலைத்திருக்கிறது. ''சித் தத்தை ஒன்ற வைத்தார் சிவமதே நினைய வைத்தார்'' என்னும் அப்பரடிகள் வாய் மொழியில் இக் கருத்து மிளிர்கின்றது.

'ஒற்றுமை' என்னும் சொல்லுக்கு ஒன்றில் ஒன்றுதல் என்பது பொருள். ஒன்றோடு ஒன்றினால் ஒற்றுமை வரும்; பலவற்றோடு ஒன்றவும் முடியாது; அத னால் ஒற்றுமையும் வளராது.

உலகத்தில் ஒரு பொருளாய் இருப் பது இறைவன் ஒருவனே. 'ஒருவன் என் னும் ஒருவன் காண்க' என்றார் மாணிக்க வாசகர். மொழி, நாடு, சாதி முதலியவற் றால் அமையும் ஒற்றுமை, ஓர் அளவு தான் கூடும். ஏனென்றால் அவை பன்மை. ஒவ்வொன்றும் பல்மொழி, பலநாடு, பல சாதி முதலியவாகப் பன்மைகளாயுள்ளன. அறிந்த ஒரே பொருளாய் உண்மை விளக்க இன்பப் பொருளாய்த் திகழும் இறை யோடு ஒன்றுதலை வளர்த்தால், நாடெங் கும் ஒற்றுமை உண்டாகி, வேற்றுமைகள் தலையெடுக்காமல், சிக்கல்கள் தீர முடி யும். ஆன்ம நேய ஒருமைப்பாடு என்று வள்ளலார் குறிப்பிட்ட பரந்த ஒற்றுமை, இப்படி உண்டாவதுதான்! இச்சிறப்பை உடையது திருக்கூட்டம் என்பது!

அறிவு நெறி நாட்டில் ஓங்கினால் இத் திருக்கூட்டத்தைக் காணலாம். திருக் கூட்டம் உலகத்தில் தொடர்ந்து இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது; கூடித் தொடர்ந்து இயங்கும் இயல்பு, அஃதாவது வாழையடி வாழையாய் வருவது, திருக் கூட்டத்துக்கே உரியது. அக்கூட்டத்திற்கு இறைவனே தலைவன். தலைவர் பலராக இருக்க முடியாது. ஒருவர்தாம் இருக்க முடியும். ஆன்மாக்கள் தம் தலைவர் இன் னார் என்பதை அறிந்து தம்முள் ஒற் றுமை கொண்டு, நலம் பெற வேண்டும்.

ஒன்றாக உயர்ந்தது :

உலகத்தில் எந்தப் பொருளும் இயற் கையில் ஒன்றுக்கொன்று சமம் இல்லை. கைவிரல்களே இதற்குச் சான்று; ஏற்றத் தாழ்வு இருக்கவே செய்யும். ஆதலால், இறைவன் ஒருவனே உயர்ந்தவன். அவ னுக்குச் சமம் வேறொன்றில்லை. மற்ற வர்கள் யாரும் அவன் தயவைப் பெறும் அடியவர்களே!

இவைகளை அடையும் நெறிகளிலும், ஒன்றுதான் சிறந்ததாய் இருக்க முடியும். எல்லா நெறிகளும் ஒன்றுதான் என்னும் பேச்சு மழுப்பிப் பேசுவதாகும். ஒரு நெறி, மற்றொரு நெறியிற் சென்று முடியும்; துறை வரையிற் செல்லாது. ஓர் ஊருக்கு வழிகள் பல இருந்தாலும், எல்லா வழி களும் அங்கங்கும் ஒரு முக்கிய வழியிற் சேர்ந்து அதன் மூலமாக மாளிகையை அடைவதே இயல்பு. இன்ன நெறி இன்ன காரணத்தால் இத்தகையது என அதன் இயல்பை உணர்ந்திருந்தால் மட்டுந்தான், தக்க நெறியில் நன்றாக ஈடுபடவும், ஈடு பட்டுச் சிறந்த பயனை அடையவும் இய லும்; வாழ்க்கைக்கு இது முதன்மையானது, இல்லாவிட்டால் அலைவு மிகுந்து விடும்.

**முறைமுறை நெறிகள் :**

மெத்தைப் படிகளைப் போன்றவை சமய நெறிகள்; அவை மேன்மேல் இடங் களாய் ஒரு முறைமையில் இருந்தால் மட்டுமே, மாடியை ஏற முடியும். "முத்தியை முற்ற வைத்தார் முறை முறை நெறிகள் வைத்தார்" என்பது அப்பர் தேவாரம். அத்தகைய படிகளில், கடைசி யாக உயர்ந்த நிலையில், மேடையைஒட்டி அமைந்திருப்பது ஒன்றுதான். அது, படிக் குப் படியாகவும், அதுவே ஏறி நடக்கக் கூடிய மேடையாகவும் திகழ்கிறது. சமயங் களிலும் ஒன்றுதான், அப்படி உயர்ந்த நிலையில், சமயத்துக்குச் சமயமாகவும் சமயங்கடந்து சேரும் துறையாகவும் (சமயாதீதம்) விளங்கும். "மிகு சைவத் துறை விளங்க" என்னும் சேக்கிழார் திரு மொழி இங்கே சிந்திக்கத்தக்கது. இம் முறையில், மார்க்கங்களிலும் உயர்ந்த மார்க்கமாய்ச் சன்மார்க்கம் திகழ்கிறது.

**சன்மார்க்கம் :**

மாணிக்கவாசகர் இம்மார்க்கத்தில் சென்றார். அவர்க்கு முன் திருவள்ளுவர். திருமூலர் முதலியோர் சென்றனர். அவர்கள் வழியில் அடியார் பலரும் வள் ளற் பெருமானும் சென்றிருக்கிறார்கள்.

மரங்களில் உயர்ந்தது வாழை மரம்; நூன்முறையில் சிறந்தது திருக்குறள்; சன் மார்க்கசாதியில்மேம்பட்டது அந்தண்மை. சமயத்தில் சைவம்; மதத்தில் சித்தாந்தம்; மார்க்கத்தில் சன்மார்க்கம் மேம்பட்டவை. அவரவர் விருப்பமும், அன்பும், தகுதியும் எதில் இருந்தாலும், உண்மையைக் கூறும் பொழுது இப்படித் தெரிவிக்க வேண்டி யிருக்கிறது.

நான் சைவன்; திருமுறைகளில் ஈடு பாடுடையவன் என்றாலும், நூல்களிலும் நூன்முறைகளிலும் திருக்குறள் சிறந்தது என்று கூற வேண்டியிருக்கிறது. இதனால் திருவாசகம் போன்றவை சிறந்தவையல்ல என்பது கருத்தாகாது. திருவாசகம் பழம் போன்றது. பழம், மரத்தின் ஒரு பகுதி; திருக்குறள் மரத்தில், திருவாசகப் பழம் தொங்குகிறது. மரம் என்றால் அது பழத்தையும் உள்ளடக்கி இருக்கும்; வெளிப்படையில் பழம் என்றால் மரமும் உள்ளடங்கியதாகாது. திருக்குறள் அத் தகைய பழு மரம்! அதுவும் வாழைப் பழு மரம்!

**வாழையடி வாழை :**

வாழை ஓர் உள்பொருள். மற்ற மரங்களைவிட ஒளி விளக்கமாகவும் இருக் கிறது. முழுப்பயன் தருவதாகவும் உள் ளது. மேலும் அதன் மரபு, இடையீடின் றித் திருக்கூட்டம்போல் வளர்ந்து கொண்டு இருக்கிறது. திருவடித்தொடர்பு போல ஒன்றின் அடியில் மற்றொன்று தோன்றித் தொடர்கிறது. திருக்கூட்ட மும் அப்படியே திருவடித் தொடர்பால் நல்லோர் பலரைத் தோற்றுவிக்கும்.

வாழை மரத்திலுள்ள சிறப்பு வேறு எதிலும் இல்லை. மரம் என்னும் ஒரு பொருளாய் இருப்பதோடு, ஒளி விளக்கத் தால் இன்பம் விளைப்பதாயும், அறம் என்னும் ஒழுங்கு முறையைப் பட்டை, இலை, பூ, காய் என எல்லாவற்றிலும் புலப்படுத்துவதாயும், 'பொருள்' 'இன்பம்' 'அறம்' என்னும் முப்பால் பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது. முப்பால் மரமாய் இருப்பதோடு, தன்னையே பிறருக்கு உதவிவிடக் கூடிய பற்றற்ற பான்மை யாகிய வீடும் கொண்டு, முப்பாலில் நாற் பால் மரமாயும் வளர்கிறது. குலையை உலகுக்குக் கொடுத்துவிட்டுத் தான் உயி ரையே விட்டுவிடுகிறது. தான் இருக்கும் பொழுதே தன்னைப் போல் உலகுக்கு உதவும்படி தன் இனத்தையும் வளர்த்து விடுகிறது; இப்படிப் பிறர்க்கென வாழ்வது வாழை!

**திருக்கூட்டம் :**

திருவள்ளுவர், திருமூலர், மாணிக்க வாசகர், போன்ற முன்வாழையின் பின் வாழைதாம் பட்டினத்தடிகள், தாயு மானார், இராமலிங்க அடிகள் முதலி யோர். இதை 'வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அலனோ' என்னும் அருட்பா மெய்ப்பிக் கும்.

அறிவு நெறிப்பாடு உடைய இத்திருக் கூட்ட மரபு, மேலும் வளமாகத் தொடர்ந்து செல்ல ஆண்டவன் அருள் நாளும் உதவி வருக! ***

# பழந்தமிழ் நாடகச் சிறப்பு

" முத்தமிழ்க் காவலர் "—" கலைமாமணி "

டாக்டர். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி.

*1. ஆடல்:*

இஃது இருவகை. இவை : சாந்தி, விநோதம் என்பன. அகக்கூத்து, புறக் கூத்து எனவும் ஆகும். இவ்விரண்டுவகைக் கூத்தும் பதினொரு தொழில்பெறும்.

(அ) 'சொக்கம்'—இது சுத்தநிருத்தம். அஃதாவது தாள லயத்தை ஆதாரமாக உடையது. (ஆ) 'மெய்த் தொழில்'—இது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப் படும். இஃது உள்ளக் குறிப்பை ஆதார மாக உடையது. (இ) 'அபிநயம்'—இது கதை தழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்பக் கை காட்டி உணர்த்துவது. (ஈ) 'நாடகம்'—இது கதை தழுவி வருகின்ற கூத்து.

இவை நான்கும் நாயகன் சாந்தமாக ஆடும் கூத்தாதலின் 'சாந்திக் கூத்து' எனப் பெயர் பெறும். பின்வரும் ஏழும் 'விநோதக்கூத்து'களாம். (உ) இது காம மும், வென்றியும், பொருளாகக் கொண் டும் குரவைச் செய்யுளைப் பாட்டாகக் கொண்டும் ஏழு அல்லது ஒன்பது பேர் கை பிணைந்தாடுவது. (ஊ) 'கலிநடம்' இது கழாய்க் கூத்து எனப் பெறும். (எ) 'குடக்கூத்து' தலையில் கும்பம் வைத்து ஆடுவது. (ஏ) 'கரணம்' வீழ்ந்து ஆடுதல். (ஐ) 'நோக்கு' பாரமும், நுண்மையும் மாயமும் ஆகும். (ஒ) 'தோற்பாவை' தோலால் பாவை செய்து ஆட்டுவது. இது பொம்மையாட்டம் எனப் பெறும். (ஓ) 'நகைக்கூத்து' நகைப்பிற்குரிய வேடிக்கைக் கூத்துக்களாம்.

*2. பலவகைக் கூத்து :*

இது வென்றி, வசை என இருவகைப் படும். மாற்றான் ஒடுக்கமும் மன்னன் உயர்ச்சியும் வென்றியாகும். பலவகை உருவமும் பழித்துக் காட்டுவது 'வசை' யாகும்.

*3. கூத்தின் இலக்கணம்:*

இது நிலை, பாதம், அங்கம், வருத் தனை, நிருத்தக்கை என ஐவகைப்படும். இதில் நிலை அறுவகை; பாதம் ஐவகை ; அங்கம் பதினாறுவகை; வருத்தனை நான்கு வகை ; நிருத்தக்கை முப்பது வகை. ஆக வகை 61.

*4. விலக்கு உறுப்பு :*

இது வேந்து விலக்கு, படைவிலக்கு, ஊர்விலக்கு என்னும் விலக்குகளாகிய பாட்டுகளுக்கு உறுப்பாய் வருவது. இது 14 வகையாகும். 1. பொருள், 2. சாதி, 3. யோனி, 4. விருத்தி-இந்நான்கும் ஒரு வகை. 5. அவ்வை, 6. குறிப்பு, 7. சத்துவம் 8. அபிநயம்-இந்நான்கும் மற்றொரு வகை. 9. சொல், 10. சொல்வகை, 11. வண்ணம், 12. வரி-இந்நான்கும் வேறொரு வகை. 13. சந்தி, 14. சேதம் -இவ்விரண் டும் பிறிதொரு வகை.

இப்பதினான்கு துறைகளுக்கும் விளக் கங்கள் உள. நான்காவதாக உள்ள விருத் திக்கு ஒரு விளக்கத்தை இதன் அடியிற் காண்க. 'விருத்தி' என்பது நாடகத்தின் இயல்பு என்பதாகும். இவ்வியல்பு நால் வகைப்படும். (அ) 'சாத்துவதி' அறம் பொருளாகக் கொண்டு தெய்வ மானிடர் தலைவராக வருவது. (ஆ) 'ஆரபடி' பொருளைப் பொருளாகக் கொண்டு வீரமகன் தலைவனாக வருவது. (இ) 'கைசிகை' இன்பம் பொருளாகக்காமுக ராகிய மக்கள் தலைவராக வருவது. (ஈ) 'பாரதி' என்பது கூத்தன் தலைவனாக நடன், நடிபொருளாகக் காட்டியும் உரைத் தும் வருவது என்றாகும்.

*5. சுவை :*

சுவை ஒன்பது வகைப்படும். அவை வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, இன்பம், துன்பம், வெகுளி, நகை, சமநிலை என்பன. இதனை நவரசம் என வடமொழியாளர் கூறுவர்.

*6. நடிப்பு :*

இது 24 வகைப்படும். இதனை அபி நயம் எனக் கூறுவதும் உண்டு.

1. வெகுண்டோன், 2. ஐயமுற்றோன், 3. சோம்பினோன், 4. குடித்தோன், 5.

மகிழ்ந்தோன், 6. அழுக்காறுடையோன், 7. இன்பமுற்றோன். 8. தெய்வமுற்றோன் 9. மயக்கமுற்றோன். 10. உடன்பட்டோன். 11. உறங்கினோன், 12. உறங்கி விழித்தோன், 13. செத்தோன், 14. மழையில் நனைந்தோன், 15. பனியில் நனைந்தோன், 16. வெயிலில் காய்ந்தோன், 17. வெட்கமுற்றோன், 18. வருத்தமுற்றோன் 19. கண்ணோவுற்றோன். 20. தலை நோவுற்றோன், 21. நெருப்புப் பட்டோன் 22. சீதமுற்றோன், 23. வெப்பமுற்றோன் 24. நஞ்சு உண்டோன் என்பனவாம்.

இவை 24-க்கும், சுவை 9-க்கும் சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்றுகாதைக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டிய பாடல்கள் 33ம் நல் விளக்கமாகும். அவை ஒவ்வொன்றும் நடிப்புக் கலையின் திறத்தைக் கூறிநம்மை வியப்படையச் செய்கின்றன. இன்றைய நடிப்புப் புலவர்களும் நடிப்பைச் சுவைப்பவர்களும் இக்கலையின் திறத்தை அறிய வேண்டுமென்பது எனது ஆசை.

இவற்றுள் 24-ஆவதாகிய நஞ்சுண்டோன் நடிப்புக்கு உரிய இலக்கணப் பாடலை மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறேன்.

''கொஞ்சிய மொழியும் கூரெயிறு மடித்தலும் பஞ்சின் வாயிற் பனிநுரை கூம்பலும் தஞ்ச மாந்தர் தம் முகம் நோக்கி ஓர் இன்சொல் இயம்புவான்போல் இயம்பாமையும் நஞ்சுண்டோன் தன் அபிநயம் என்ப''. பிறவற்றிற்கும் இவ்வாறு இலக்கணங்கள் உள.

7. *சொல்:*

சொல் என்பது ஓர் உறுப்பு. அஃது உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் என மூவகைப்படும். (அ) உட்சொல் என்பது நெஞ்சோடு கூறுவது. (ஆ) புறச்சொல் என்பது கேட்போர்க்கு உரைப்பது (இ) ஆகாயச்சொல் என்பது தானே கூறுவது என்பனவாம்.

8. *சொல்வகை:*

சொல் வகையாவது சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம், என நால் வகைப்படும். (அ) சுண்ணம் நான்கடியால் வருவது. (ஆ) சுரிதகம் எட்டடியால் வருவது. (இ) வண்ணம் பதினாறு அடியால் வருவது. (ஈ) வரிதகம் முப்பத்திரண்டு அடிகளால் வருவது. இந்நான்கின் விளக்கமும் விரியும் ஆதலின் வண்ணத்தின் விளக்கத்தை மட்டும் அடியிற் காண்க. (அ) பெருவண்ணம். இது 6 வகை. (ஆ) இடைவண்ணம் இது 21 வகை. (இ) வனப்பு வண்ணம். இது 41 வகை. ஆக வகை 3க்கும் வண்ணம் 68 ஆம். தொல்காப்பியர் 20 வண்ணம் கூறியுள்ளார். 100 வண்ணம் கூறினாரும் உளர்.

9. *வரி:*

வரி என்பது வரிக்கூத்துக்கு உரிய பாடல். இது பண், திறம், செயல், பாணி கடஎன நால்வகைப்படும். வரிப்பாடல் திணை நிலைவரி, கிணை நிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி, எனப் பலபடப் பாகுபாடு எய்தும். இவற்றின் இயல்புகள் அனைத்தையும் சிலப்பதிகாரத்திற் கானல் வரியுள்ளும், வேனிற் காதையுள்ளும் விளங்கக் காணுங்கள்.

---

# நிர்வாக அதிகாரிகள் நியமனம்

**(1) தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், மேனாங்குடி அருள்மிகு நாகநாதசுவாமி கோயில், தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருமீயச்சூர் அருள்மிகு மேகநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (ந. க. எண். 84076/-பி6/30-12-80**

**(2) தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பி. கொந்தகை, அருள்மிகு பஞ்சவனாதர் மற்றும் இராமசாமிப் பெருமாள் கோயில், தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருமருகல், அருள்மிகு இரத்தினகிரீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார். (ந. க. எண். 84079/80-பி6 நாள் 30–1–81).**

**(3) கோயம்புத்தூர் மாவட்டம், வட்டம், இடையார்பாளையம் அருள்மிகு மாகாளியம்மன் கோயில், கோவை நகரம், காந்திபுரம் அருள்மிகு சித்தி விநாயகர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். ((ந. க. எண். 70/86/80-பி6/3-2-81).**

**(4) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தாளி அருள்மிகு மங்காத்தம்மன் கோயில், கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தாளி அருள்மிகு அமணலிங்கேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (ந. க. எண். 70184/80-பி6 நாள் 3-2-81).**

திருமங்கையாழ்வார் அருளிய

# திருவெழு கூற்றிருக்கை

(மூலமும் - உரையும்)

சைவத் திருமுறைகளுள் 'திருவெழு கூற்றிருக்கை' என்னும் சித்திர கவியினைத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்திருப்பது போன்று, வைணவத்தில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின்கண் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார். இவர்க்குக் கலியன், கலிகன்றி, பரகாலன், ஆலிநாடன், மங்கைவேந்தன் எனப் பலபெயர்கள் வழங்கும். இவர் திருவாலித் திருநகரியைச் சேர்ந்த திருக்குறையலூரில், கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னாளில் அவதரித்தார். இவர் அருளிச் செய்துள்ள பிரபந்தங்கள் ஆறு. அவை முறையே பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்பனவாம்.

''மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கம் கூற அவதரித்தார்''

என்று மணவாள மாமுனிகள், இப்பிரபந்தங்களின் சிறப்பினைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

திருமங்கையாழ்வார் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்குவகையான கவிகளிலும் வல்லவர். இவர்தம் கவித்திறம் ''சதுஷ்கவி ப்ரதாநாய பரகாலாய மங்களம்'' என்பதனால் இனிது விளங்கும். இங்ஙனம் நால்வகைக் கவிகளிலும் வல்லவரான பரகாலர் என்னும் திருமங்கையாழ்வார் பாடிய ''திருவெழுகூற்றிருக்கை'' என்னும் சித்திரக் கவியின் பொருளை, இயன்றவரை இங்கு ஆராய்வோம்.

ஒருபேர் உந்தி இருமலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை; ஒருமுறை
இருசுடர் மீதினில் இயங்கா, மும்மதிள்
இலங்கை இருகால் வளைய, ஒருசிலை

ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய் வாளியில்
அட்டனை; மூவடி நானிலம் வேண்டி,
முப்புரி நூலோடு மான்உரி இலங்கும்
மார்வினில், இருபிறப்பு ஒருமாண் ஆகி,
ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை;

நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி, நால்வாய் மும்மதத்து இருசெவி
ஒருதனி வேழத்து அரந்தையை, ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை; முத்தி
நான்மறை ஐவகை வேள்வி, அறுதொழில்

அந்தணர் வணங்கும் தன்மையை; ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து, நான்குடன் அடக்கி
முக்குணத்து இரண்டவை அகற்றி, ஒன்றினில்
ஒன்றி நின்றுஆங்கு, இருபிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை; முக்கண் நாற்றோள்

ஐவாய் அரவோடு, ஆறுபொதி சடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை;
எழுலகு எயிற்றினில் கொண்டனை; கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை; சுடர்விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை; சுந்தர

நாற்றோள் முந்நீர் வண்ண! நின் ஈரடி
ஒன்றிய மனத்தால் ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும் மலர்அன அங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை;
நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை;

மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே!
அறுபதம் முரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடை அடங்கச் செற்றனை; அறுவகைச்
சமயமும் அறிவரும் நிலையினை; ஐம்பால்
ஓதியை ஆகத்து இருத்தினை; அறமுதல்

நான்கு அவையாய், மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனாய், ஒன்றாய் விரிந்து
நின்றனை; குன்றா மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை, வருபுனற் பொன்னி
மாமணி அலைக்கும், செந்நெல்ஒண் கழனித்

திகழ்வனம் உடுத்த, கற்போர் புரிசைக்
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும், செல்வம் மல்குதென்
திருக்குடந்தை, அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க, ஆடரவு அமளியில் அறிதுயில்

அமர்ந்த பரம! நின் அடியிணை பணிவன்
வரும்இடர் அகல, மாற்றோ வினையே!

(உரை விளக்கம்)

ஒருபேர்-ஒப்பற்ற பெரிய
உந்தி-திருநாபியில் தோன்றிய
இருமலர்த் தவிசில்-பெரிய தாமரைப்பூ ஆகிய ஆசனத்தில்
ஒருமுறை அயனை ஈன்றனை-ஒருகாலத்தில் பிரமனைப் படைத்தருளினாய். (1)

ஒருமுறை-முன்னொரு காலத்தில்
இருசுடர்-சந்திரனும் சூரியனும் ஆகிய இரண்டு சுடர்களும்
மீதினில் இயங்கா-மேலே உலவ முடியாத
மும்மதில்-நீர்அரண், மலையரண், காட்டரண் என்னும் மூன்று மதில்களையுடைய
இலங்கை-இலங்கைமா நகரினை
இருகால் வளைய-இரண்டு நுனிகளும் வளையும்படி
ஒருசிலை-ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்லில் (2)

ஒன்றிய ஈர் எயிற்று-பொருந்திய இரண்டு பற்களையுடைய
அழல்வாய்-நெருப்பைக் கக்குகின்ற வாயையுடைய
வாளியின் அட்டனை-அம்பினால் அழித்தருளினாய்;
மூஅடி-மூன்று அடியளவு
நானிலம் வேண்டி-பூமியை விரும்பி
முப்புரி நூலொடு-மூன்று புரிகளாக அமைந்த பூணூலுடன்
மான்உரி இலங்கும்-மானின் தோல் விளங்குகின்ற
மார்பினின்-திருமார்பினையுடைய
இருபிறப்புஒருமாண் ஆகி-ஒப்பற்ற பிராமணப் பிரம்மசாரியாக வடிவெடுத்து (3)

ஒருமுறை-ஒருகாலத்தில்
ஈர்அடி-இரண்டு திருவடிகளாலே
மூவுலகு அளந்தனை-மூன்று உலகங்களையும் அளந்து கொண்டாய்;
நாற்றிசை நடுங்க-நான்கு திசையிலும் உள்ளவர்கள் நடுங்கும்படி
அஞ்சிறைப் பறவை ஏறி-அழகிய சிறகையுடைய கருடன்மேல் ஏறிக்கொண்டுவந்து
மும்மதம்-கன்னமதம் கபோலமதம் பீஜமதம் என்னும் மூன்று மதங்களையும்
இருசெவி-முறம் போன்ற இரண்டு செவிகளையும் உடைய
ஒருதனி வேழத்து-ஒப்பற்ற சிறந்த யானையாகிய கஜேந்திரனின்
அரந்தையை-துன்பத்தை (4)

ஒருநாள்-முன்னொரு காலத்தில்
இருநீர் மடுவுள் தீர்த்தனை-பெரிய நீரையுடைய மடுவின்கண் போக்கியருளினாய்;
முத்தீ-ஆகவநீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று நெருப்புகளையும்
நான்மறை-இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்குவேதங்களையும்
ஐவகை வேள்வி-பிரமவேள்வி தேவவேள்வி பூதவேள்வி பிதிர்வேள்வி மனிதவேள்வி என்னும் ஐந்து வகையான வேள்விகளையும்
அறுதொழில்-ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுவகையான தொழில்களையும் உடைய
அந்தணர் வணங்கும் தன்மையை-அழகிய தன்மை வாய்ந்த சான்றோர்கள் வணங்குகின்ற சிறப்பினைப் பெற்றுள்ளாய்;
ஐம்புலன்-மெய்வாய் கண்மூக்குசெவி என்னும் ஐந்துபொறிகளையும்
அகத்தே செறுத்து-வெளியே செல்லவிடாமல் இறைவனையே நினைந்து உள்ளே அடக்கிவைத்து
நான்கு உடன் அடக்கி-உண்ணுதல் உறங்குதல் அஞ்சுதல் நுகர்தல் என்னும் நான்கு தொழில்களையும் ஒரு பொருட்டாக மதியாமல் விலக்கித்தள்ளி
முக்குணத்து-சத்துவம் இராசதம் தாமதம் என்றும் மூன்று குணங்களிலே
இரண்டு அவை அகற்றி-இராசதம் தாமதம் என்னும் இருகுணங்களையும் நீக்கி
ஒன்றினில்-சத்துவம் ஆகிய ஒரு குணத்திலேயே (5)

ஒன்றி நின்று-பொருந்தியிருந்து
ஆங்கு-அத்தகைய நிலையின் பயனாக
இருபிறப்பு அறுப்போர்-நல்வினை தீவினை என்னும் இரண்டினாலும் வரும் உலகியல் வாழ்வு ஆகிய பற்றினை அறுத்துக்கொள்ளுகின்ற பெரியோர்களாலே மட்டும்
அறியும் தன்மையை-அறிந்து கொள்ளத்தக்க பெருமையினைக் கொண்டுள்ளாய்;
முக்கண்-மூன்று கண்களையும்
நால்தோள்-நான்கு தோள்களையும் உடையவனுய்
ஐவாய் அரவோடு-ஐந்து தலைகளையுடைய பாம்பையும்
ஆறு பொதி சடையோன்-கங்கையாறு தங்கியுள்ள சடையினையும் உடைய சிவபெருமான்
அறிவு அரும்-அறிவதற்கு அரிய
தன்மைப் பெருமையுள் நின்றனை-இயல்புடைமை ஆகிய பெருமையிலே விளங்குகின்றாய்;
ஏழ் உலகு-நாவலந்தீவு இறலித்தீவு குசத்தீவு கிரவுஞ்சத்தீவு சான்மலித்தீவு தெங்கின் தீவு புட்கரத்தீவு என்னும் எல்லா உலகங்களையும்
எயிற்றில் கொண்டனை-வராக அவதார காலத்தில் பற்களாகிய கோட்டின்கண் எடுத்துக் கொண்டு காப்பாற்றினாய்:
கூறிய-புகழ்ந்து சொல்லப்பெற்ற
அறுசுவைப் பயனும் ஆயினை-உவர்ப்பு புளிப்பு துவர்ப்பு இனிப்பு கார்ப்பு கைப்பு என்னும் ஆறுசுவைகள் ஆகிய பயன் ஆகவும் திகழ்கின்றாய்:
சுடர்விடும்-ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற
ஐம்படை-சங்கு சக்கரம் கதை வில் வாள் என்னும் ஐந்து ஆயுதங்களையும்
அமர்ந்தனை-விரும்பி ஏந்தியிருக்கின்றாய்:
சுந்தர நால்தோள்-அழகு மிக்க நான்கு தோள்களையும்
மூந்நீர் வண்ண-ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று நீர்களைக் கொண்ட கடல்போன்ற நீலநிறத்தையும் உடையவனே!
நின் ஈர் அடி-நின்னுடைய இரண்டு திருவடிகளையும்
ஒன்றிய மனத்தால்-ஒருமைப்பட்டு நிற்கும் மனத்துடன் (6)

ஒரு மதிமுகத்து-ஒப்பற்ற சந்திரனைப் போன்ற அழகிய முகத்தினையுடைய
மங்கையர்-இருவரும்-திருமகள் நிலமகள் ஆகிய இருவரும்
மலர் அன அங்கையின்-பூப்போன்று மெல்லிய அழகிய கைகளாலே
முப்பொழுதும்-காலை மாலை நடுப்போது என்னும் மூன்றுவேளைகளிலும்
வருட-இசைவாகப் பிடித்துத் தைவருதல் செய்ய
அறிதுயில் அமர்ந்தனை-இன்பமாக யோக நித்திரை புரிகின்றாய்;
நெறிமுறை-உலகியல் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப
நால்வகை வருணமும் ஆயினை-அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்கு வகையான பாகுபாடுகளையும் அமைத்துவைத்து நடத்துகின்றாய்;
மேதகும்-மேன்மை பொருந்திய
ஐம்பெரும் பூதமும் நீயே-நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்து பெரிய முதற் பொருள்களையும் நீயே இயக்குகின்றாய்;
அறுபதம் முரலும்—ஆறு கால்களையுடைய வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற
கூந்தல் காரணம்-அழகிய கூந்தலையுடைய நப்பின்னையின் காரணமாக

ஏழ்விடை-ஏழு காளை மாடுகளையும்
அடங்கச் செற்றனை-அடங்கும்படி செய்து வலிமைகெடுமாறு நெரித்தருளினாய்;
அறுவகைச் சமயமும்-நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாஞ்சை வேதாந்தம் என்று பலவாறாகச் சொல்லப்படும் ஆறுவகையான சமயங்கள் எல்லாம்
அறிவு அரும் நிலையினை-அறிந்து கொள்ளுதற்கு இயலாத அரிய நிலையில் வைகித் திகழ்கின்றாய்;
ஐம்பால் ஓதியை-மென்மை தண்மை நறுமை கருமை நீட்சி (குழல் அளகம் கொண்டை பனிச்சை துஞ்சை) என்னும் ஐந்து வகையான இயல்புகளும் அமைந்த கூந்தலையுடைய திருமகளை
ஆகத்து இருத்தினை-மார்பின்கண் தரித்துக் கொண்டு இருக்கின்றாய்:
அறம் முதல் நான்கு அவையாய்-அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் வழங்குபவனாய்
மூன்று மூர்த்தியாய்-படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் செய்கின்ற மும்மூர்த்திகளின் வடிவமாய்
இருவகைப் பயனாய்-இன்பம் துன்பம் என்னும் இருவகையான பயன்களையும் அவரவர் வினைகளுக்கு ஏற்பத் தருபவனாய்
ஒன்றாய் விரிந்து நின்றனை-ஒரே முழுமுதற் பரம்பொருளாக இருந்தும் உலகம் முழுவதிலும் பரவி நீக்கமற நிறைந்து நிற்கின்றாய்; (7)

குன்றா மதுமலர்ச் சோலை-குறையாத தேன்துளிகளையுடைய பூக்கள் நிறைந்த சோலைகளையும்
வண் கொடிப் படப்பை-வளப்பம் நிறைந்த பலவகைக் கொடிகளையுடைய தோட்டங்களையும்,
வருபுனற் பொன்னி-பெருகி வருகின்ற நீரையுடைய காவிரியாறானது
மாமணி அலைக்கும்-சிறந்த மாணிக்கங்களை அலையெறிந்து கரையிற் கொழிக்கப் பெறுகின்ற
செந்நெல் ஒண்கழனி-செந்நெற் பயிர்களாலே சிறப்புப் பெற்ற வயல்களையும் உடையதாய்,
திகழ்வனம் உடுத்த-விளங்குகின்ற அழகிய தோப்புக்களை நாற்புறமும் உடைபோல அணிந்திருக்கின்ற,
கற்போர் புரிசெய்-கற்றுவல்ல புலவர்களுடைய நகரமாகச் செய்து அமைக்கப் பெற்றதும்
கனக மாளிகை நிமிர் கொடி-பொன்மயம் ஆகிய மாட மாளிகைகளில் மேலே நிமிர்ந்து ஓங்கியுயர்ந்துள்ள கொடிகள்
விசும்பில் இளம்பிறை துவக்கும்-வானத்தின்கண் உள்ள மூன்றாம் பிறைச் சந்திரனைத் தொட்டுக் கொண்டிருப்பதும் ஆகிய
செல்வம் மல்கு தென் திருக்குடந்தை-நீர்வளம் நிலவளம் முதலியசெல்வங்கள் பலவும் நிறைந்து தெற்கேயுள்ள அழகிய திருக்குடந்தை என்னும் தலத்தின்கண்
அந்தணர்-பிராம்மணர்கள்
மந்திர மொழியுடன்-வேத மந்திரங்களைக் கூறிக்கொண்டு
வணங்க-வழிபட்டு மகிழும்படி
ஆடு அரவு அமளியில் -படம் எடுத்து ஆடுகின்ற ஆதிசேடன் ஆகிய படுக்கையில்
அறிதுயில் அமர்ந்த-யோகநித்திரை செய்தலை விரும்பிய
பரம-மேலான முழுமுதற் பொருளே!
வரும் இடர் அகல-இவ்வுலகியல் வாழ்வில் நேரக்கூடிய எல்லாத் துன்பங்களும் நீங்கும்படி
நின் அடி இணை பணிவன்-நினது திருவடிகள் இரண்டையும் பணிந்து வணங்குகின்றேன்;
வினை மாற்று-என்னுடைய தீவினைகளைப் போக்கியருள்க.

—ஆசிரியர்

சீரார் திருவெழு கூற்றிருக்கை என்னும் செந்தமிழால்
ஆரா அமுதன் குடந்தைப் பிரான்றன் அடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே

—உடையவர் அருளிய தனியன்.

—oOo—

# காப்பியங்களின் கலைநயம்

பேராசிரியர்-டாக்டர் ரா. சீனிவாசன், M.A., Ph.D.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

காப்பியங்களின் கலைநலம் என்ற தலைப்பைப் பற்றிப் பேசுமுன் காப்பியம் என்பது யாது என்பதை அறிதல் வேண்டும். காப்பியம் என்பதன் வடிவம் உள்ளடக்கம் இரண்டையும் அறிதல் வேண்டும்.

வடிவம் என்பது அது தனிநிலைச் செய்யுளினின்று மாறுபடுவது ஆகும். காப்பியம் தொடர்நிலைச் செய்யுள்களால் ஆனது. இதுவே காப்பியத்திற்கும் ஏனைய பழைய பாடல்களுக்கும் உள்ள வேறுபாடு ஆகும். தனிநிலைப் பாடல்களில் உணர்வு தலையோங்கி நிற்கிறது. காப்பியங்களின் உணர்வைவிட உணர்த்தும் செய்தி மேலோங்கி நிற்கிறது. இதுவும் ஒரு வேறுபாடாகும்.

மற்றும் அது சந்த இசைகள் பெற்று ஓசை நலம் கனிந்து செவிநுகர் கனிகளாக மாற்றப்பட்டது. கம்பன் இயற்றிய காவியம் செவிநுகர் கனி எனச் சிறப்பிக்கப்படுகிறது. காப்பியங்களில் ஓசை நயம் புகுந்து அவற்றை அழகு படுத்தின; இந்தச் சந்த இன்பம் இல்லாமலும் காப்பியம் இயங்கலாம். ஓசை நயம் அடிப்படை என்று கூற முடியாது.

காப்பியங்களின் இயக்கத்திற்குச் சமயப் பின்னணி, கதை நிகழ்ச்சிகள், கதைப் பின்னல் இன்றியமையாதன என்று கூற முடியாது. அவை வெறும் கருவிகளே எனத் தகும். அவற்றைத் துணையாகக் கொண்டு வெளிப்படுவன. அவை உணர்த்தும் செய்திகளும் படைத்துத் தரும் பாத்திரங்களுமே அடிப்படையாகும். இவையே காப்பியங்களின் உள்ளடக்கத்தின் தனிச் சிறப்பாகும்.

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பது கம்பர் உணர்த்தும் காப்பியச் செய்தியாகும். அறம் இன்னது என்று சுட்டிக் காட்டுவது ஒவ்வொரு காப்பியத்தின் தனிப் போக்காகும். எது அறம் என்று வற்புறுத்துவது அந்த அந்தக் காப்பியத்தின் தனிப் போக்குகளாகும்.

பிறன்மனை நோக்காத பேராண்மையே அறம் என்று கம்பர் காட்டுகின்றார். இராவணனின் செய்கையால் அதன் தீமையைச் சுட்டியும் இராமனின் உயர்பண்பால் அதன் நன்மையைக் காட்டியும் அறம் வலியுறுத்தப்படுகிறது.

சிலப்பதிகாரம் மூன்று செய்திகளை உணர்த்துகிறது. தனிமனித அறமாகிய கற்பின் பெருமையையும், நாட்டுப்பொது அறமாகிய அரசியல் திருத்தத்தையும், உலக நியதியாகிய ஊழ்வினையின் ஆற்றலையும் அது சுட்டிக்காட்டுகிறது. இவற்றுள் எது அறம் என்று வற்புறுத்தக் கூடாது. அரசியலில் பிழை நேரக்கூடாது என்பதே இது சுட்டும் அறம் ஆகும். கற்புப் பாராட்டப்படுகிறது; ஊழ்வினை அதன் ஆற்றல் காட்டப்படுகிறது. ஊழ்வினைக்கு முதலிடம் தருவதால் மனித முயற்சி பின்னிலை அடைகிறது. அரசன் தவறு செய்ததும் ஊழ்வினை, கோவலன் கொலையுண்டதும் ஊழ்வினை என்று காட்டப்படுகின்றன. தீமைகளே ஊழ்வினையின் செயல் என்று வற்புறுத்தப்படுகின்றன. ஒருவருக்கு ஏற்படுகின்ற நன்மைகள் ஊழ்வினையின் ஆற்றல் என்று சுட்டப்படுவது இல்லை. இந்த ஊழ்வினையைச் சிலம்பு மட்டும் சுட்டவில்லை. அதேபோலக் கற்பின் பெருமையை ஏனைய காவியங்களும் உணர்த்துகின்றன. ''அரசியலில் தவறு செய்யாமை''-இதுவே சிலம்பு உணர்த்தும் அறச் செய்தியாகும்.

இவ்வாறே ஒவ்வொரு நூலும் ஒருசில அறங்களை வற்புறுத்திச் செல்கிறது. மணிமேகலை தனிமனித அறத்தை வற்புறுத்தாமல் சமுதாயப் பொது அறங்களையே வற்புறுத்துகிறது.

''பசியும் பிணியும் நீங்கி,
வசியும் வளனும் சுரக்க''

என வாழ்த்துகிறது. இந்த நாட்டில் பசி நீங்க வேண்டும் என்று பேசிய முதல் காவியம் அதுதான். அதற்கு வழி காணுவதே இந்தக் காவியத்தின் போக்காக உள்ளது.

பாத்திரங்கள் கதையின் இயக்கத்துக்குத் துணை செய்கின்றன என்பது பொது நியதி. கண்ணகி ஒரு முழுநிலைப் பாத்திரம். அவள் படைப்பும் செயலும் காப்பியத்தின் இயக்கத்திற்கு மையமாக அமைகின்றன. தனிமனித வாழ்வின் சித்திரத்தில் தொடங்கிச் சமுதாயப் பின்னல் அதில் இடம் பெறுகிறது. இதற்கு மாறுபட்ட நிலையில் மணிமேகலையின் படைப்பு அமைந்துள்ளது. இதில் சமுதாய வாழ்வு முதலிடம் பெறுகிறது. அதன் அங்கமாக மணிமேகலை பாத்திரமாக இயங்குகிறது. இது பிரச்சினைகளால் உருவாக்கப்பட்ட பாத்திரம். பசிப்பிணி மருத்துவராக அவள் படைக்கப்படுகிறாள். இது படைக்கப்

பட்ட சூழ்நிலை அப்பாத்திரத்திற்குப் பின்னணியாக அமைந்துள்ளது. சமுதாயம் முதலிடம் பெறுகிறது. தனிமனித வாழ்வு பின்னிடம் பெறுகிறது.

காவியம் கலைநலம் பெறுவதற்குக் காரணம் அது படைத்துத் தரும் உருவகங்கள் எனலாம். உருவகப் படைப்பே கலை வடிவம் அமைவதற்குக் காரணம் ஆகிறது.

மணிமேகலை ஒரு தனிப்பட்ட பாத்திரம் என்பதைவிட அதனை ஒரு உருவகமாகக் கொள்ளும்பொழுது அதன் சிறப்பு உயர்கிறது. கலை இதுவரை உயர்நிலை மாந்தரின் இன்பப் பொருளாக அமைந்து கிடந்தது. மாதவி வணிகன் மகனின் இன்பப் பொருளாய்க் கிடந்தாள். கலைஉயர்வு பெறவில்லை. மணிமேகலையை அரச மகன் அடைய விரும்பினான். அவனுக்கு அவள் எட்டாத கனியானாள். கலை பொதுமக்களின் பணிக்குத் திருப்பப்பட்டது. இது தெய்வமாக் கதையாக அமையாமல், மனிதமாக் கதையாக மாறியது. இது ஓர் உருவகமாக அமைந்து கிடக்கிறது.

மற்றும் இதன் மாந்தர்கள் வழக்கமான படைப்புகள் அல்ல. பிரச்சினைகளின் தீர்வுகளுக்காக அமைந்தவர்கள். சுதமதி மணிமேகலையின் தோழி. அவள் வித்தியாதரன் ஒருவனால் கற்பழிக்கப்பட்டு வாழ்வில் சிதைவினைக் கண்டவள். மணிமேகலையின் கற்பினைக் களங்கப்படுத்த மன்னன் மகன் முயன்றான்; தேர் ஊர்ந்து வந்த அவன் தோல்வியைக் கண்டான். அது மட்டுமல்ல. அவன் வித்தியாதரனின் வாளால் வெட்டுண்கிறான். இது ஒரு சமுதாயப் பிரச்சினை. அதற்குத் தீர்வு காண்கிறது இந்தக் கதை.

மணிமேகலை முற்போக்கு இலக்கியங்களுக்கு ஒருவழி காட்டியாக விளங்குகிறது.

சாலினி என்பவள் கற்பில் தவறியவள். அதனால் பெறும் புதல்வன் ஆபுத்திரன், குப்பைத் தொட்டியில் வீசப்படும் வேண்டாத குழந்தை. அவன். சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ள இடம்பெறாது தவறிய வாழ்வின் தேவைப்படாத மகன். அவன் அந்தணரோடு வாதிடுகிறான். அவர்கள் அவனைச் சீரழிவு செய்கின்றனர். சாதியின் ஆதிக்கத்திற்கு அவன் ஒரு எதிர்ப்பாக இருக்கிறான். பசு முட்ட அந்தப் பார்ப்பனத் தலைவன் உயிர் இழக்கிறான். சாதிக்காரர்களை எதிர்த்துப் பேசும் புரட்சி மிக்க பேச்சுக்கள் சமுதாய மாற்றத்திற்கு வழி கோலுகின்றன. ஒதுக்கப்பட்டவர்கள் இந்தக் கதையின் முக்கியமான மாந்தர்கள் ஆகின்றனர்.

இது உணர்த்தும் செய்தி யாது? பிரச்சினைகளின் தீர்வு யாது? பசியும் பிணியும் வாழ்வின் நியதியாகிவிட்ட நிலையில் அதைப் போக்கும் மருந்து யாது? அறிஞர்களை வினவுகின்றான். புரட்சித் தலைவனாகிய ஆபுத்திரன் அந்த அறிஞர்களை உருவகப்படுத்திக் காட்டுகின்றான். 'சிந்தாதேவி' என்ற வடிவில் அத் தெய்வம் தரும் செய்தி யாது? புரட்சித் தலைவனைப் பார்த்துச் சொல்கிறது. பொதுமை அறம், அதாவது பொது உடைமைதான் இதற்கு வழி. அதுவே 'அமுத சுரபி' என்று உருவகித்துத் தரப்பட்டுள்ளது.

இது ஒரு முற்போக்கு இலக்கியம் என்பதற்கு மற்றோர் சான்றும் காட்டலாம். சிறைக் கோட்டத்தை அறக் கோட்டம் ஆக்க வேண்டும் என்ற கருத்து இதில் இடம் பெற்றுள்ளது. மற்றும் பால் உணர்வை வைத்து அதுதான் வாழ்வியல் என்று காட்டும் விஷ வித்துகள் நிரம்பிய நச்சு இலக்கியங்களினின்று இது மாறுபடுகிறது. பாலியல் சித்திரங்கள்தாம் இலக்கியங்கள் என்ற கருத்தை மாற்றி வாழ்வியலுக்கு இது முதலிடம் தருகிறது.

''இதுவோ அன்னாய் காமத்தியற்கை'' என்று கூறி,

''இதுவேயாயின் கெடுக அதன் திறம்'' என்று பேச வைத்துப் பாலுணர்வு விவரங்களை இன்றியே கதையை இயக்கி இருக்கிறது. இது, ஒரு முற்போக்கு இலக்கியம் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

கலைநலம் என்பது அணிநலத்தால் மட்டும் அமைவது அன்று. அழகுக்கு அழகு செய்யத் தேவை இல்லை. செய்தி நலமே அழகு தரும் ஆற்றல் பெற்றுள்ளது. செய்தியே அழகுடையதாக இருக்கும்பொழுது அணிநலம் அதற்கு மிகையாகும். அணி நலம் குறைந்து வருணனைகள் இடம் பெறாமல் செய்தியால் சிறப்புப் பெற்று இது விளங்குகிறது.

பசி என்பதும் ஒரு உருவகமாகும். அது வயிற்றுப் பசியை மட்டும் உணர்த்துவது அன்று. வாழ்வுப்பசிகளை உணர்த்துகிறது. பற்றாக்குறை என்பதன் உருவகம் அது. 'பசி' என்ற திரைப்படம், அதில் நடித்தவர், பசியின் உருவகம். அதைத் தீர்க்கும் பணியில் பசிப்பிணி மருத்துவராகப் படைக்கப்பட்டவள் மணிமேகலை.

வாழ்வின் பற்றாக்குறைகள், பிரச்சினைகள். அவை உள்ள வரையும் அப்பிணிகளுக்கு மருந்து காணும் மருத்துவர்கள் தேவை. அந்த மருத்துவராக விளங்கும் மணிமேகலை ஒரு உருவகப் படைப்பு.

பசி இருக்கும்வரை மணிமேகலைப் பாத்திரம் இடம்பெறும். இது பிரச்சினைப் பாத்திரம். இதைப் பாராட்டிக் கொண்டிருக்க முடியாது. அதனால்தான் மணிமேகலைக்குச் சிலை எடுக்கப்படவில்லை. சிலம்பு படைத்த கண்ணகி முழுநிலைப் பாத்திரம். அதுபாராட்டத்தக்க பெருமை பெற்று விளங்குவது. அது உருவகம் அல்ல. பெண்மையின் முழுநிலைக்கு உயர்வுக்கு வடிவம் தரப்பட்ட பாத்திரம். அது நிலைபேறு உடையது. கண்ணகிக்குச் சிலை எடுக்கப்படுகிறது. மணிமேகலைக்குச் சிலை தேவை இல்லை. வாழ்வின் பிரச்சினையைச் சந்திக்கும் ஆண்மையை உணர்த்துவது இப்பாத்திரமாகும். ***

## உமாபதி சிவாசாரியரின்

# சதரத்தின சங்கிரகம்

*'மும்மொழிக் கொண்டல்'*

பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந்தம், M.A.,L.T.

வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்தைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் வாழும் மக்கள் கற்றறிந்து உய்தற்பொருட்டு, தமிழில் எழுந்த சாத்திர நூல்கள் பதினான்கு. அவற்றுள் எட்டு நூல்களின் ஆசிரியர் என்ற பெருமைக் குரியவர், தில்லையம்பதியின் எல்லையில், கொற்ற வன்குடியில் வாழ்ந்த சிவநெறிச் செல்வர் உமாபதிசிவாசாரியார் என்பதைச் சைவ உலகம் அறியும். தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் பொதுவாகலான், தமிழ் பயிலாத பிற பகுதிகளில் வாழும் பிற மக்கள் உய்தற்பொருட்டும், தமிழ் பேசப்படாத பிற பகுதிகளில் வாழும் பிற சமயசாத்திர அறிஞர்கள் தெளிதற்பொருட்டும், உமாபதி சிவாசாரியார் பல்வேறு ஆகமங்களின் பிழிவாக நூற்றுக்கு மேற்பட்ட ஆகம வாக்கியங்களைத்தொகுத்து, சைவ சமயத்தில் கூறப்படும் மூலப்பொருள் உண்மைக்கு விளக்கம் தரும்வகையில், சம்ஸ்கிருதமொழியில் அவ்வாக்கியங்களுக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். தெரிவுசெய்து எடுக்கப்பட்ட மணி (ரத்தினம்) போன்ற நூறு (சதம்) ஆகமவாக்கியங்களைக் கொண்டுள்ளதால், இந்நூலுக்குச் சதரத்தின சங்கிரகம் என்ற பெயர் வழங்கி வருகிறது. ஒளி பொருந்திய மணி இருளைப்போக்குவது போல, இம்மணிக்கோவை நமது அகவிருளைப் போக்கி உள்ளொளி பெருக்கும் இயல்பினைக் கொண்டதாகும். இந்நூலாசிரியர் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்வாழ்ந்தார் என்று, சமய வரலாற்று அறிஞர் கூறுவர்.

இந்நூலில் எடுத்தாளப்படும் ஆகமங்களுள் சுவாயம்புவம், நிசுவாசம், மாதங்கம், தேவியாமளம், மிருகேந்திரம், கிரணம், பராக்யம், தேவீ காலோத்தரம், விசுவசாரம், ஞானோத்தரம் முதலானவை இடம் பெற்றுள்ளன. ஞானம், தீக்கை இரண்டுமே இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன.

பதி, பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அழகுற அளவைநூல் முறைப்படி விளக்கிச் செல்கிறார் ஆசிரியர். வாக்கிறந்த பூரணமாய் விளங்கும் பரம்பொருள், பிரம்மம் என்பர் வேதாந்திகள். அப்பரம்பொருள் சிவனே என்பது சைவசித்தாந்திகளின் துணிபு. அச் சிவன் மனோவாக்குகளுக்கு மட்டுமின்றிச் சாந்தி நிலைக்கும் அப்பாற்பட்டவன் என்று, ஒருபடி மேலே நம்மை இட்டுச் செல்கிறது சைவ சித்தாந்தம்.

அத்வைதிகள் பிரமமே இவ்வுலகத் தோற்றத்திற்கு உபாதான (மூலப்பொருள்) காரணமாயும் இருக்கிறது என்று கூறுவர். சித்தாந்தத்தை நிறுவுவதற்கு முற்பட்டுள்ள ஆசிரியர் இக்கூற்றை மறுக்கிறார். ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய மூலப்பொருள், அதைத் தோற்றுவிக்கும் முதற்பொருள், அதைத் தோற்றுவிக்கும் முதல்வன், அவனுக்குத் துணைபுரியும் கருவிகள் ஆகியவை, ஒன்றாதல் இயலாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். குடத்திற்கு முதற்பொருளான மண்ணும், அதை உண்டு பண்ணும் குயவனும், அவனுக்குத் துணைபுரியும் சக்கரம் முதலானவையும் வெவ்வேறாதல் போல, இவையும் வெவ்வேறாக இருத்தல்தானே இயல்பு. கடவுளே மூலப்பொருள். ஆனால் அதனினின்றும் விளைந்த உலகப் பொருள்கள் யாவும் முற்றறிவல்லவோ பெற்றிருத்தல் வேண்டும்? ஒரு சில சிற்றறிவு பெற்றவையும், பிற சடமாதலும் எங்ஙனம்? காரணத்தின் தன்மை காரியத்திலும் காணப்படுதல் தானே நியதி? ஆதலின் சிவன் நிமித்தகாரணன், அவனது சக்திகள் துணைக் காரணங்கள், மாயை மூலப்பொருளாம் காரணம் என்பதே ஏற்புடையது.

பகுக்கப்படும் பொருள் அனைத்துமே அநித்தியமானவை, காரிய நிலையில் உள்ளவை. ஒவ்வொரு காரியத்திற்கும் அதைத் தோற்றுவிக்கும் முதல்வன் இருந்தே ஆக வேண்டும். குடத்திற்குக் குயவன் இருப்பதுபோல, அம் முதல்வனும் மூலப்பொருளின் தன்மையையும் செயல்முறைகளையும் அறிந்தவனாகவும், செயலாற்றுதற்குத் தேவையான கருவிகளைப் பெற்றிருப்பவனாகவும் இருத்தல் இயல்பு; அத்தகைய முதல்வன்தான் உலகெலாம் உணர்ந்த முழு முதற்பொருளான சிவன்.

பிரம்மத்தை நிலைநிறுத்த ''ஜன்மாத்யஸ்யயத'' என்ற பிரம்ம சூத்திரத்தினால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முச்செயல்களையும் புரிபவன் அம்முதற்பொருள் என்று கூறுகிறது. பிரம்ம சூத்திரம் குறிப்பிட்ட முச்செயல்களுக்கும் மேலாகத் திரோபவம், விமுத்தி என்றஇரு

நிலைகளுக்கும் அவனே முதல்வன் என்று கூறும் சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தைச் சுட்டுகிறார் நமது ஆசிரியர். இப்பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பதுதான் நடராசப் பெருமானின் தாண்டவ நிலையின்குறிப்பு என்பதைச் சைவப் பெருமக்கள் அறிவர்.

பிரம்மம் வேறு ஆத்மாவேறு என்பதை மறுப்பவர் அத்வைதிகள். பசுவையும் பாசத்தையும் பதியுடன் ஒருங்குவைத்து எண்ணுகின்ற அத்வைதிகள் 'பசுபாசேசு வரவாதிகள்' என்றும், 'கர்மமே' முதற் காரணம் என்று கூறும் மீமாம்சகர் 'பாசே சுவரவாதிகள்' என்றும் குறிப்பிடுகிறார். உண்மை நிலையை உள்ளவாறு உணர்ந்து போற்றும் சைவசித்தாந்திகள் சிவனையே பரம்பொருளாக ஏற்றுக் கொண்ட போதிலும் பசுபாசங்களையும் உண்மைப் பொருளாகவே ஏற்றுக் கொள்கின்றனர் என்பது, பிரமாணங்களுக்கு ஒத்தது என்னும் சிறப்பினை உடையது.

உயிரின் இலக்கணத்தைப் பராக்யாகமத்திலிருந்து மேற்கோள் காட்டி, சுருங்கக் கூறி விளங்கவைக்கிறார் ஆசிரியர்.

"தேஹாந்ய: அநச்வர: வ்யாபீ
விபின்ன; ஸமல; அஜட;
ஸ்வகர்மபலபுக் கர்த்தா கிஞ்சிக்ஞ:
ஸேச்வர; பசு"

'ஆன்மா உடம்பினின்றும் வேறானது, அழிவற்றது, எங்கும் நிறைந்திருப்பது, வெவ்வேறானது, மும்மலங்களோடு கூடியது, சடமல்லாதது, தன் வினைப்பயனை நுகர்வது, வினைபுரிவது, சிற்றறிவினது, இறைவனைத் துணையாகக்கொண்டது.

அத்வைதிகள் கூறுவது போல ஆத்மா ஒன்றேயானால், ஒருயிருக்கு முத்திகிடைக்கும்போது அனைவருமே முத்தியின்பத்தைப் பெறும் படியாகுமே, இப்பொருந்தா நிலையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மும்மலங்களின் தொடர்பு தொடர் பின்மை காரணமாக ஆத்மா, சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்ற மூவகையினர் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அத்வைதிகள் கூறுவதுபோல ஆத்மா நிரஞ்சனம் (அழுக்கற்றது) ஆனால், சுகதுக்கங்களில் அதற்கு நாட்டம் எப்படி ஏற்படக் கூடும் என்று யுக்திபூர்வமாகக் கேட்கிறார். ஆகவே ஆத்மாவுடன் மலச் சேர்க்கை ஒப்புக்கொள்ள வேண்டியதாகிறது.

இன்பத்திலும் துன்பத்திலும் மோகத்தி லும் உழலும் ஆன்மா, துய்த்தலின் பயனாக வினை நீங்கப்பெற்றுப் பக்குவம் பெற்ற நிலையில் சிவபெருமானின் அநுக்கிரகசக்திக்கு ஆட்படும் விதத்தையும், குருவருள்பெறும் வண்ணம் அவன் திருவருள் புரிவதையும் 'சத்திநிபாதம்' என்னும் அருட்செயலை விளக்கும்போது கூறிச் செல்கிறார். குருவினால் தீட்சை செய்யப்பெற்ற ஆன்மா விரைவில் முத்தியைப் பெறும் நிலையை அடைகிறது. 'தீட்சைஒன்றே முத்தியைப்பெறும் வழி' என்று வலியுறுத்துகிற பௌஷ்கராகமம்- 'தீட்சைவ மோட்சதா பும்ஸாம் சிதபி வியக் திகாரணீ.'

வகுப்பில் தூங்கும் மாணவனைப் பிரம்பினால் தட்டி எழுப்பி அறிவுறுத்தும் ஆசிரியரைப் போல, சிவபெருமான் மோகத்தில் ஆழ்ந்திருக்கும் உயிரைத் தனது அநுக்கிரக சக்தியால் தட்டி உண்மையை உணரச்செய்து சிவசாயுச்சியத்தை வழங்குகிறார். சிவமாம் தன்மையைப் பெற்றவருக்குக் கிரியைகள் தேவையற்றவை. முத்தியடைதல் என்பது ஓரிடத்தைவிட்டுப் பிறிதோர் இடத்தை அடைவதில்லை. ஆன்மா எங்கும் வியாபித்திருக்கும் இயல்பினதாகலின் இடமாற்றம் பொருந்தாது. தன்னைத்தான் அறியும் நிலையே முத்திநிலை.

மலங்கள் மூன்றெனக் கூறுவாருளர். உமாபதிசிவம் ஐந்து மலங்களைக் குறிப்பிடுகின்றார். அவை மலம் (ஆணவம்), திரோதானம், மகாமாயை, மாயை, கர்மம் என்பன. விரிவஞ்சி இவற்றின் விளக்கம் விடப்பட்டுள்ளது.

ஆன்மாவிற்கு இயல்பாகவே உள்ள ஞான சக்தியையும் கிரியாசக்தியையும் மறைப்பதே மலம் எனப்படுவது. மலம் ஒன்றே ஆயினும் அதன் சக்திகள் எண்ணிறந்தவை, பலதரப்பட்டவை. ஒவ்வொரு உயிரிலும் ஒவ்வொரு சக்தி பல் வேறு நிலைகளில் காணப்படுகின்றது. ஆதலின் ஒருயிர் முக்தி பெறும்போது மலத்தின் ஒரு சக்தியே அழிக்கப்படுகிறது. மலத்தின் பிற எண்ணிறந்த சக்திகள் பிற உயிர்களைப்பற்றி நிற்பதால் எல்லா உயிர்களுக்கும் ஒரே காலத்தில் முத்தி ஏற்படுவதில்லை. இச்சக்திகளையெல்லாம் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு, தனுகரணபுவனாதிகளின் மூலம் நெறிப்படுத்தும் சக்திதான் இறைவனின் 'திரோத சக்தி'. பசு ஞானமும், பாச ஞானமும் தளையை வலுப்படுத்துவன. சிவஞானம் தளையை நெகிழ்விப்பது என்று கூறுவதன் மூலம் நாம் எந்த ஞானத்தில் நாட்டம் செலுத்த வேண்டும் என்பதை உய்த்துணர வைக்கிறார் ஆசிரியர்.

கர்மம் என்பது வினைப்பயன், தருமம் என்றும் அதருமம் என்றும் கூறப்படுவது. நல்வினை தீவினைப்பயனாக ஒவ்வோருயிரும் தக்க உடலும் பொறிகளும் வாய்க்கப் பெறுகின்றன. இன்ப துன்ப மோகங்களைத் துய்க்கின்றன. துய்ப்பதன் மூலம் வினைப்பயன் தேய்கிறது. உயிர் ஞான விளக்கம் பெறுகிறது. இறுதியில் சிவமாம் தன்மையைப் பெறுகிறது.

இன்னோரன்ன சித்தாந்தக் கருத்துக்கள் ஆகமமேற்கோள், யுக்தி ஆகியவற்றால் இந்நூலில் ஆசிரியரால் தெளிவுற நிலை நிறுத்தப்படுகின்றன.

# துறவிகளும் போற்றிய தமிழ்

'கலைமாமணி' திரு. நாரண துரைக்கண்ணன்

உலக மொழிகளில்-உலக மக்களிடையே வழங்கி வரும் முந்நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாக விளங்கி வருவது, நம் தாய்மொழியாகிய தீந்தமிழ் மொழியேயாம். இது நாம் மட்டும் சொல்லுங் கருத்து அன்று; மொழியியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் வியந்து கூறும் உண்மையாகும்.

தலைசிறந்த உண்மைப் பொருள்களைத் தக்க சொற்களால் நன்கு விரித்து உரைக்க வல்ல மொழிகளே உலகில் பெருமை பெற்று விளங்குகின்றன. மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் பலவற்றிலும் உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் மொழிவன்மையே இறைவன் அருளிய பெரும் பேறாகும்.

அறிவும் நாகரிகமும் செல்வ வளமும் முதிர்ந்த தமிழ்நாட்டில் பல்வகை நலங்களும் கொண்டு என்றும் பசுமையாக மக்களால் வழங்கப்பட்டு வரும் மொழி தமிழ் ஒன்றேயாம். இத்தகைய தீந்தமிழ் மொழி பலவகையிலும் சீர்குலைந்து முதன்மையிழந்ததற்குக் காரணம், தமிழைத் தங்கள் இன்னுயிரினும் மேலாகக் கருதிப் போற்றி வளர்த்து வந்த தமிழ் மாமன்னர்களின் ஆட்சிக்குப் பின், அடுத்தடுத்து வந்த அந்நியர்களின் ஆதிக்கத்தினால் அவர்களுடைய மொழிகள் நம் மக்களிடையே பரவி வேரூன்றியதுதான் என்பது எல்லார்க்கும் தெரியும்.

விடுதலை வேட்கை மிக்க பெருமக்கள் புரிந்த அரும்பெருந் தியாகங்களால் அந்நிய ஆட்சி அகன்று நம் நாட்டுக்குச் சுதந்திரங் கிடைத்த பின்னும், நம் தாய்மொழிக்கு முழு உரிமை கிடைக்கவில்லை. ஆங்கிலம், போன்ற பிற அயல் மொழிகளின் மேலாதிக்கத்தால் தமிழ் தனக்குரிய தகுதியை இன்னமும் பெறாமல் தவித்துக் கொண்டிருக்கிறது.

ஒருகாலத்தில் பலப்பல அயல் மொழிகள் நம் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தன. அம்மொழிக்குரியவர்கள் தமிழுக்கு நியாயமாகத் தர வேண்டிய உரிமையைக் கூடத் தராமல் மிகவும் பின்னுக்குத் தள்ளி விட்டார்கள். 'தமிழ் அயல்மொழிகளின் கூட்டுறவுடன்தான் வளரமுடியுமே யொழிய, தனித்து இயங்குந் தகுதி அதற்குக் கிடையாது. பிற அயல்மொழிகளிலுள்ள புராணங்கள், இதிகாசங்கள், காவியங்களைத் தழுவித்தான் வழி நூல்கள், சார்பு நூல்கள் இருக்கின்றன' என்று அயலவர்கள் வலியுறுத்திக் கூறிவந்தனர். இதனால் நம் தமிழுக்கு இரண்டாம் இடமே கிடைத்து வந்தது.

இவ்வித அவல நிலையை மாற்றுவதற்குப் பேரறிஞர்கள் பலர் பல காலமாக முயன்று வந்திருக்கின்றனர். அவர்களில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் வேதாந்த தேசிகர் என்னும் வைணவப் பெரியாராவார்.

1269-ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் தூப்புல் என்னும் கிராமத்தில் அனந்தசூரி தோதாரம்மை ஆகிய தம்பதியர்க்குத் திருமகனாகப் பிறந்து 20 வயதுக்குள் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் மகா பண்டிதராக விளங்கிய வேங்கடநாதரை, திருமங்கையாழ்வார் பாடி மங்களாசாசனம் பெற்றிருக்கும் திருவயிந்திரபுரம் வேதாந்த தேசிகர் என்றால்தான், வைணவ உலகம் அவரை அறிந்து கொள்ளும்.

இவர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியிருக்கிறார். திருவயிந்திரபுரம் திருமால்மீது தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பலப்பல பாடல்கள் பாடியிருக்கிறார். 'இவரது சமஸ்கிருத நூல்கள் வால்மீகி, காளிதாசன் போன்றவர்களின் இதிகாச, காவியங்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்தனவாயிருக்கின்றன' என்று சமஸ்கிருதப் பெரும்புலவர்கள் வியந்து பாராட்டுகின்றனர். அதுபோலவே 'இவரது தமிழ் நூல்களும் திவ்வியப் பிரபந்தங்களுக்குச் சமமாக மதிக்கத் தக்கனவாய் அமைந்திருக்கின்றன' என்று தமிழ் அறிஞர்கள் போற்றிப் புகழ்கின்றனர்.

வேதாந்த தேசிகர் தமிழில் சிறந்த நூல்களைப் படைத்து மக்களுக்கு வழங்கியதுடன் நிற்கவில்லை. இவர் நம் தமிழ் மொழியின் தனிச் சிறப்பை அனைவரும் அறியச் செய்திருக்கிறார். தாய்மொழிப் பற்று மிகுந்தவரான இவர், 'சமஸ்கிருதம்

ஒன்றே சிறந்தமொழி; தமிழ் அதன் நிழலில்தான் வளர முடியும்' என்று வலியுறுத்தி வந்த வடமொழி வல்லாளர்களுக்கு அறைகூவல் விடுக்கும் முறையில், 'தமிழ் மொழி சமஸ்கிருதத்துக்குச் சரிசமமாக மதிக்கத்தக்க சிறப்பு வாய்ந்தது. இருக்கு, எசுர், சாம வேதங்களுக்கு இணையானவை பன்னிரண்டாழ்வார்கள் அருளியுள்ள நாலாயிரப் பிரபந்தங்கள். பரம்பொருளைப் போற்றித் துதிக்கும் பிரபந்தப் பாடல்களில் பொதிந்துள்ள சமய தத்துவப் பேருண்மைகளும், வடமொழி வேதங்களில் உள்ளதைப் போலவே இருந்திருக்கின்றன' என்று சமயம் வாய்க்கையில் எல்லாம் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்.

இவர் வாழ்ந்த காலத்தில் திருமால் திருக்கோயில்களில் நித்திய நைமித்திகப் பூசைகள் நடக்கையிலும் பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் அருச்சனை செய்கையிலும் சமஸ்கிருதத்தில்தான் மந்திரங்கள் சொல்லப்பட்டு வந்தன. இந்நிலைகண்டு, நமது வேதாந்த தேசிகர், பெருமாள் திருமுன்னர்ப்பூசை வேளைகளில் திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும் கட்டாயம் பாராயணம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி அது நடைமுறையில் வருவதற்குப் பெரிதும் ஏற்பாடு செய்தார்.

இதன் பயனாக, வைணவத் தலங்களில்-கோயில்களில் திவ்வியப் பிரபந்தம் படனஞ் செய்யப்பட்டு வருகிறது. உற்சவ காலங்களில் பெருமாள் ஊர்வலம் வருகையில் உற்சவமூர்த்திக்கு முன்னர் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பக்தர்கள் பாடிக் கொண்டு போகும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. வேதபாராயணம் சுவாமிக்குப் பின்னர்தான் நடந்து வருகிறது.

'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்று குமரகுருபர சுவாமிகள் திருமாலைத் துதிக்கையில்பாடுகின்ற சிறந்த நிலை, வேதாந்த தேசிகர் போன்ற ஆன்றோர்களால்தான் ஏற்பட்டிருக்கிறது. தமிழர்க்கே உரியதான தமிழ்த் திருவேங்கடம் எனப்படும் திருப்பதி, இன்று ஆந்திர அரசின் ஆளுகைக்குள் இருந்தாலும், திருவேங்கடநாதன் திருமுன் இன்றும் திவ்வியப் பிரபந்தமே பாராயணஞ் செய்யப்பட்டு வருகிறது. பக்தர்கள் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைத் தெலுங்கு எழுத்தில் எழுதி வைத்துக் கொண்டு பாராயணஞ் செய்து வருகின்றனர்.

வேதாந்ததேசிகர், தாம் கொண்டிருந்த சீரிய கொள்கைகளையும் தத்துவப் பேருண்மைகளையும் பாரத தேசம் முழுதும் சுற்றுப் பயணஞ் செய்து பரப்பியிருக்கிறார்.

நூறாண்டுக் காலம் உயிர் வாழ்ந்திருந்த வேதாந்த தேசிகர் இறுதிவரை இல்லறத்திலேயே இருந்தாலும் உலகப் பற்றுச் சிறிதுமில்லாத உண்மைத் துறவியாக இருந்தார். முற்றுந் துறந்த முனி புங்கவர்போல் வேதாந்த தேசிகர் வாழ்ந்தாலும், தாய்மொழிப் பற்றை மட்டும் விடாமல் கடைசிவரை அவர் அதன் ஆக்கத்துக்காகப் பாடுபட்டு வந்தார். அக்காலத்திலிருந்த வடமொழியாளர் பலர் இவரை ஒரு 'தமிழ் வெறியர்' என்று கூறி இன்னல் பல புரிந்தனர். இவர் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டார்.

வேதாந்த தேசிகர் இளமையில் சமஸ்கிருதத்தைப் போலவே, தமிழ் இலக்கியங்களை ஆவத்துடன் படித்தாலும், திவ்வியப் பிரபந்தத்தை ஆழ்ந்து கற்றுணர்ந்த பின்னர்தான் அப்பாடல்களில் நான்மறைகளின் பொருளெல்லாம் நிரம்பப் பொதிந்து இருப்பதையும், தூய தமிழ் மணம் வீசுவதையும், இனிமை ததும்புவதையும், பன்னீராழ்வார்களும் தமிழைத் தெய்வமாகப் போற்றுவதையும் அறிந்து தமிழ் மொழி மீது ஆராக் காதல் கொண்டு அதற்கு உரிய சிறப்பை ஏற்படுத்துவதற்கு அரும்பாடு பட்டார்.

நம் செந்தமிழ் மொழியில் வேத விழுப்பொருளை மட்டுமல்லாமல் தெய்வத்தையும் கண்டமையால் 'ஞானத்தமிழ்' 'ஒண்தமிழ்', தூய தமிழ்' 'சங்கத்தமிழ்', 'நல்லிசைத்தமிழ்', 'இன்தமிழ்', 'சீரார்ந்த தமிழ்' 'சீர்மலி செந்தமிழ்' என்றெல்லாம் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், பூதத்தாழ்வார் முதலியோர் தமிழ்மொழியை வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர். நம்மாழ்வார்., 'பண்ணில் இனிதான தமிழ்' 'செந்தமிழ் வேதம் தரிக்கும்' என்று தமிழையும், 'பால்ஏய் தமிழர் இசைகாரர்' என்று தமிழரையும் பாராட்டியிருக்கிறார். அதுமட்டுமா! அவர் தம்மைத் 'தமிழ்மாறன்' என்றே பல பாடல்களில் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்.

நம்மாழ்வாரைப் போலவே, சைவ சமயத்தின் பரமாசாரியாரான திருஞான சம்பந்தர், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்', 'தமிழ்விரகன் ஞானசம்பந்தன்' என்று பெருமிதத்தோடு தம் பெயரைப் பல பாடல்களில் முத்திரையிட்டிருக்கிறார்.

இம் மெய்ஞ்ஞானிகள் மட்டுமோ? திருநாவுக்கரசர், சுந்தரர், காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதர், தாயுமானவர், பட்டினத்தார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், இராமலிங்கவள்ளலார் முதலிய அருளாளர்கள் இறைவனைத் தோத்திரிப்பது போலவே, இறைத்தன்மை வாய்ந்த தமிழையும் பலபடப் போற்றியிருக்கின்றனர்.

'' என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்று திருமூலர் கூறியிருப்பதன் உட்பொருளை உணர வேண்டும். இறைவனைப் போலவே என்றும் நிலைபெற்றிருப்பது தென்தமிழ் என்ற பேருண்மையைக் கம்பர், 'என்றும் உள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று அகத்தியரைக் குறிப்பிடுகையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தெய்வத்தையே தமிழ்மொழி வடிவாகத் தெரிவித்திருக்கிறார் திருமங்கையாழ்வார். வள்ளலார், 'தமிழ் மொழியே மிக எளிதாகச் சுத்த சிவாநுபூதியைக் கொடுக்கும்' என்று விளக்கியிருக்கிறார். 'தமிழ்' என்பதற்கு அவர் தனி உரையே கூறியிருக்கிறார்.

வள்ளலார் காலத்தில் இருந்த வடமொழியறிஞர் ஒருவர் இவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தபோது 'சமஸ்கிருதமே மாத்ரு பாஷை' என்று சொன்னாராம். உடனே வள்ளலார், 'அப்படியானால் தமிழ் பித்ரு பாஷை என்று சொல்லலாம்' என்று பதிலளித்துத் தமிழின் மேன்மையை நிலைநாட்டியிருக்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகள். 'தமிழ் மொழியே தரணியில் வழங்கிவரும்மொழிகளில் தலை சிறந்து விளங்குவது' என்று உயர்வாகக் கூறி, நூறு பாடல்கள் பாடியிருக்கிறார். தமிழ்மொழியின் பெருமை உணராது வாதிட்ட வம்பர் ஒருவருக்குத் தெளிவையுண்டாக்கவே அப்பாடல்களைப் பாடினாராம். தொழிலுக்காகத் தமிழைப் படித்துவிட்டு, உண்மையில் மொழிப் பற்றில்லாத போலிப் புலவர்களைக்கருத்திற் கொண்டு,

"தமிழ் மொழிக்கு உயர்மொழி
தரணியிலே உளதெனில்
வெகுளியற் றிருப்போன்
வெறும்புல வோனே!''

என்று அவர் சாடியிருக்கிறார். கல்லாடனர் பாடியிருப்பது போலத் தமிழ்ச்சுவையைத் திரட்டி மற்றவர்க்குத் தெளிதரக் கொடுத்தவன் தென்தமிழ்க் கடவுள். ஆதலால்தான் 'உன் பற்றொழிய வேறு ஒரு பற்றுமில்லை உடையவனே' என்று பரம்பொருளின் திருவடிகளைப் பற்றுவதே பெரும்பற்றாக எண்ணிக் காலங்கழித்து வந்த துறவிகள்கூடத், தெய்வத் தமிழ்மீது பற்றுமிகக் கொண்டிருந்தார்கள் போலும்.

அகத்தியர், தொல்காப்பியரிலிருந்து அதாவது சங்ககாலப் புலவர்களிலிருந்து குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்ற பிரபந்தங்கள் இயற்றியவர்கள் வரை, தமிழ் இலக்கிய இலக்கணங்கள் செய்தவர்களெல்லாம் துறவிகளாகத்தானே இருக்கிறார்கள்.

தாம் இன்னார் என்று அறிவிக்காமலே, மதுரைச்சொக்கேசப் பெருமான்மீது தமிழைத் தூதுவிடுத்துப் பாடியிருக்கிறார் ஒருவர். 'மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது' என்ற அந்நூலில் அவர்,

''இருந்தமிழே! உன்னால் இருந்தேன்;
இமையோர்
விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்று கூறித் தமிழ்மீது தமக்குள்ளபற்றை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த மாபெருங் கவிஞர் சுப்பிரமணிய பாரதி, ''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று அறுதியிட்டு உறுதியாகப் பாடியவர். 'தமிழ்மொழியைவிட உயர்ந்த மொழியொன்று உலகில் உண்டு என்று யாரேனும் சொல்வார்களேயானால் அதைக் கேட்டு என் உள்ளங் கொதிக்கிறது' என்று ஆராமையோடு தெரிவித்திருக்கிறார். பாரதி வழிபந்த பாரதிதாசனும்,

''தமிழுக்கு அமுது என்றுபேர்—இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''

என்று உணர்த்திப் பாடியிருக்கிறார்.

முற்றுந் துறந்த முனிவர்களும் மற்றும் ஆன்றோர்களும் வெளிப்படுத்தியுள்ள தமிழ்ப் பற்றானது இன்றைய தலைமுறையினருக்குத் தாய்மொழிப்பற்றையும் தமிழிலக்கியப் பற்றையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.

# நற்றமிழ்ப் பெரியரும், கொற்றவேற் கலியனும்

திரு. தி. அ. அனந்தாழ்வான்,
காஞ்சிபுரம்

திருமாலுவந்து எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளுள் திருக்கோவலூர் தனிச் சிறப்புடைத்தாம். நற்றமிழ் போற்றும்ஆழ்வார்கள் தம் அருளிச் செயலே, வைணவத்தின் அடிப்படை என்பது கற்றுணர்ந்தார் தந்துணிபு. இத்தகு அருளிச்செயல் முதன் முன்னம் விளைந்த தலம் திருக்கோவலூராம். வில்லிபுத்தூராழ்வார் இத்திருத் தலத்தைப் போற்றுவான்,

பாவருந் தமிழாற் பேர்பெறு
பனுவற் பாவலர் பாதிநா ளிரவின்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுத நன்னாடு''

என்று பாடினர். இப்பாடலின்கண் இடம் பெற்ற வரலாறு யாவருமறிந்ததே எனினும், ஈண்டுச் சுருங்க உரைக்கின்றோம்:

சீராரும் மாடத் திருக்கோவலூரின் கண்ணே, காரார்கருமுகில் பெருமழை பொழிந்ததொரு நாள் இரவிலே, கவிஞர் போரேறு, பெருந்தமிழர், தமிழ்த் தலைவர் ஆகிய முதலாழ்வார்கள், மாமுனியொருவர்தம் இல்லத்தின் இடைகழியில் ஒருங்குற்றனர். அதுபோது கோவல் மாயன் இருளில் நெருக்கப் பொய்கைப் பிரானும், பூதத் திருவடிகளும் கதிர்ஞான நல்விளக்கேற்றப், பேயர் மாமலராள் தன்னொடும் மாயனைக் கண்டுகளித்து அந்தாதி பாடியருளினர். இம்மூவரும் அருளிச் செய்தவையே 'நற்றமிழ்' என்று நாம் நயந்தினிது போற்றத் தக்க முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என முறையே வழங்கப் படுவனவாம்.

இங்ஙன் இவர்கள் அருளிச்செய்த திருவந்தாதிகளே, திவ்வியப்பிரபந்தத்துள் முன்னம் தோன்றியவை. ''மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து நற்றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த-பெற்றிமையோர் என்று முதலாழ்வார்கள் என்னும் பெரியவர்க்குநின்ற வுலகத்தே நிகழ்ந்தது'' என்று தணவாத சொல் மணவாள மாமுனிகளும், இவர்கள்தம் பெருமையைத் தெரிவித்தருள்கின்றார். இதனால் இவர்களுடைய பாடலின் சீர்மையும் உரைக்கப் பட்டது. இத்தன்மைத்தாய இத் தொன்மைத் தமிழ்ப் பாடலின் தோற்றம், கொற்றவேற் கலியன்றன் பாடலின்கண் உய்த்துணரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. என்னை? பன்னிரு ஆழ்வார்களுள் பன்னருஞ்சீர்க்கலியன் பின்னிட்டவதரித்தவர் என்பது நாம் அறிவோம். ஆதலின் திருமங்கையாழ்வார் இவ்வரிய நிகழ்ச்சியைத் தமது பாடலில் உணர்த்தியிருப்பதாகக் கூறுதலினால் குற்றமொன்று மின்றாம்.

திருமங்கைமன்னன் மன்னுபுகழ்த் திருக்கோவலூரை, ''மஞ்சாடு வரையேழும்'' பதிகத்தால் மங்களாசாசனம் செய்தருளுகின்றார். இப்பதிகத்தின் நான்காம் பாடலில் முற்கூறிய வரலாறு கூறப்பட்டுள்ளது. அப்பாடல் வருமாறு:

''தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை
யானை
ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந் தன்பு கூரும்
அடியவர்கட் காரமுதம் ஆனான் றன்னைக்
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டு
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே''

திருக்கோவலூரின் வளத்தை வருணிக்கும் இப்பாடலில், ''நற்றமிழாம் திவ்வியப் பிரபந்தம் பாடியருளிய பெரியோர்களாகிய முதலாழ்வார்களின் சிறப்பியல்புகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளமை இனி உணர்த்தப்படும். ''ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரும் அடியவர்'' என்பதை

முதலில் நோக்குவோம். முதலாழ்வார்களை உணர்த்தும் இவ்வடியில், கண்ணீர் சோர்பவர் ஒருவர், அன்பு கூர்பவர் ஒருவர், அடியவர் ஒருவர். ஆக மூவரும் கூறப்பட்டனர். இவ்வாழ்வார்களை இங்ஙனம் குறிப்பிட்டமை எது கொண்டு? முதலாழ்வார்களுள் முதலாய பொய்கையாழ்வார், ''கண்ணீர் சோர நிற்பவர்'' என்பதை, அவர்தம் திருவாக்கினின்றும் இனி துணரலாம். ''பழுதே பலபகலும் போயின வென்று அஞ்சி அழுதேன்'' என்று அவர் தாமே தெரிவிக்கின்றாரிதனை. ஆனந்தக் கண்ணீர் பெருகநிற்பவர் என்றும் கொள்ளலாம்.

இனி ''அன்புகூர்பவர்'' ஆகப் பூதத்தாழ்வார் கூறப்பட்டதை ஆய்வோம். இவ்வாழ்வார் பாடத் தொடங்கும்போதே ''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தையிடு திரியா, நன்புருகி ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு, ஞானத் தமிழ் புரிந்த நான்'' என்று,''அன்பு'' என்று அருளிச் செய்தார். ''அன்பாக்கி யேத்தி அடிமைப்பட்டேனுனக்கு'' என்பர். மேலும் தமது அந்தாதியைத் தலைக்கட்டும் போது ''என்றன் அளவன்றால் யானுடைய அன்பு'' என்று மீண்டும் 'அன்பு' என்னும் சொல்லைக் கையாண்டார். ஆதலின் அன்புருவான இவரை 'அன்புகூர்பவர்' என்றே குறிப்பிட்டனர் போலும் குறையலாளி.

இனி, பேயாழ்வார் 'அடியவர்' என்று ஈண்டுக் கூறப்படுதலைக் காண்போம். மற்ற இரண்டு ஆழ்வார்கள் விளக்கேற்ற எம்பெருமானைக் கண்டனர் பேயாழ்வார். உடன் தாம் கண்டவதனைப் பாடலுற்றார். ''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்'' என்று தொடங்கினாரிவர். பின்பு 'இன்றே கழல் கண்டேன்' என்று எம்பெருமான்றன் அடியை (திருவடி) க்கூறி, ஈற்றயற் பாசுரத்திலும், ''தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான் அட்டபுய கரத்தான் அஞ்ஞான்று, குட்டத்துக்கோன் கோண்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் தாள்முதலே நங்கட்குச் சார்வு'' என்று 'அடி'யினை நினைந்தவர். ஆதலின் பேயாழ்வாரை அடியவர்என்றனர்போலும் அரட்டமுக்கி! பூங்கோவல் மாயன், பொய்கை முதலிய ஆழ்வார்களிருந்த இடம் வந்து, அவர்கட்கு அமுது போல் அனுபவிக்கும் வண்ணம் நின்றதனை 'ஆரமுதம் ஆனான் றன்னை' என்பது தெளிவிக்கின்றது.

இனிப் பின்னடிகளால் இதனையே விவரித்தருள்வர், அருள்மாரி. ''குழாவரி வண்டிசைபாடும் பாடல் கேட்டுத் தீங்கரும்பு கண்வளரும் கழனிசூழ்ந்த திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே''. இங்கு 'வண்டிசைபாடும்' எனாது ''குழாவரிவண்டிசைபாடும்'' என்றமையின் முதலாழ்வார் பாடாது ''குழாங்களாயடியீருடன் கூடி நின்றாடுமினே'' என்றாற் போன்று, மூவரும் ஒன்று கூடிக் குழாமாகத் திருமாலைப் பாடினர் என்பது உணர்த்தப்பட்டது.

இனி முதலாழ்வார்களை வண்டுகளாகக் கொள்ளுதல் யாங்ஙனெனின், கூறுவோம். வண்டுகள் தேனொன்றையே உணவாகக் கொண்டவை. முதலாழ்வார்களோ ''உளங்கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத்துள் ஊறிய தேன்'' எனப்பட்ட எம்பெருமானையே அனுபவிப்பவர். வண்டு ''மதுவிரதம்'' என்றே வழங்கப்படும். தூமது வாய்கள் கொண்டவை வண்டுகள். இவ்வாழ்வார்களும் ''அமுதன்ன சொன்மாலையேத்தித் தொழுதேன்'' என்றவாறு அமுதனைய வாய்மொழிகளை இனிமையாக இசைப்பவராம்.

வரிவண்டு தேதென வென்றிசைபாடும். அதுபோன்று இவர்களும் ''தே, தே'' (உனக்கே நாம்) என்பவர் களாம். 'மிக வாய்ந்த அன்பாக்கி யேத்தி அடிமைப் பட்டே னுனக்கு' என்றனரன்றோ மல்லைச் செல்வர்? வண்டுகள் மலரிற்பொருந்தியிருப்பது போன்று இவர்களும் எம்பெருமான்றன்றிருவடி மலரிற் பொருந்திய நெஞ்சினராவர். ஆக இவற்றான் முதலாழ்வார்களை வண்டுகளாகக் கோடல் ஏற்புடைத்தென்க.

இனி, ''தீங்கரும்பு கண்வளரும்'' என்பதை, ஆய்வாம். ''வண்டிசை கேட்டுக் கரும்பு கண்கவரும் (உறங்கும்) என்பது, மேல் நோக்கிற் பெறும் பொருள். ஆயின் திருமாலே இங்குக் கரும்பாகக் கூறப்பட்டனர் என்று உணர்க. திருமங்கையாழ்வார் திருமாலைக் 'கரும்பே' என்றும் விளிப்பர். ''கள்வர் கடன் மல்லைக் கிடந்த கரும்பே'' என்றது காண்க.மேலும் ''பெரும்புறக் கடலை'' என்னும் பதிகத்தில் முதற்பாசுரத்தில் ''கரும்பினைக் கனியைச் சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே'' என்றருளிச் செய்தனர். திருக்குறுந்தாண்டகத்திலும்,

''கரும்புஅமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டென்
கண்ணிணை களிக்குமாறே''

என்றருளிச் செய்தார். ஆதலின் இங்கும் 'கரும்பு' என்று கோவற் பெருமானாம் அடையார் கமலத் தலர்மகள் கேள்வனையே, அடையார்சீயம் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஆழ்வார்தம் பாடல் கேட்டு மகிழ்ந்தவன் கோவல்நகரான் என்பது பெறப்படும். எம்பெருமான் கண்வளர்தல் அறிதுயிலாய், உலகுய்யும் வண்ணம் எண்ணிச் செய்வதாய் நிற்றலின் முதலாழ்வார்களால் இவ்வுலகிருள் நீங்கப் பெறுமாறு எண்ணியதைஉணர்த்துமாதலின் ''தீங்கரும்பு கண்வளரும்'' என்றார். இனி கண்வளர்தல் என்பது கரும்பின் கணு

வளர்தலையும் குறிக்குமாதலின், முதலாழ்வார் பாடலால் பெருமை மிகப் பெற்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். குழாவரி வண்டிசைபாடும் பாடலாகிய மூன்று திருவந்தாதிகளால், எம்பெருமான் பெருமையில் உயர்ந்து நின்றான் என்பதும் பொருத்தமுடைத்தே.

திருக்கோவலூரில் நிகழ்ந்த இவ்வரலாற்றைத் திருவரங்கத்தமுதனார், வில்லிப்புத்தூராழ்வார் முதலாயோர் தமது பிரபந்தத்துள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். வேதாந்த தேசிகன் தமது ''தேஹளீசஸ்துதி''யின்கண், இவ்வரலாற்றைக் குறித்து, ''பொய்கை முதலான ஆழ்வார்களின் நெருக்கத்தால் எம்பெருமானிடமிருந்து இன்சுவை வெளிப்பட்டது. அச்சுவை பெண்ணைக்கரையில் விளங்கும் வளங்கொள் கரும்பின் சுவையனைத்து. எம்பெருமான்றன் றிருவடித் தாமரையினின்றும் பெருகும் தேன் வெள்ளத்தைப் பேரன்பர்தாம் சுவைத்துப் பருகுவர். அத்தேன் வெள்ளத்திற்கு இக்கருப்பஞ்சாறு ஒப்பில்லாததோர் சருக்கரையாம் தன்மையை அடைகிறது'' என்று அழகுறக் கூறியுள்ளார். இங்குக் கோவலூரான் கரும்பாகக் கூறப்பட்டனன்.

இதுகாறும் விளக்கியவாற்றால், கலிகன்றி யொலி செய்த இவ்வின்பப் பாடலில், தமிழ் மறை தோன்றிய வரலாறும், அதனை அருளிச் செய்த முதலாழ்வார்கள் ஆகிய பெரியோர்களின் இயல்பும் உய்த்துணரும் வண்ணம் அமைந்திருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

# அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

## அழகர்கோயில், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

சித்திரைத் திருவிழாவில் அருள்மிகு சுந்தரராசப்பெருமாள், ஞாயிறு 19.4.81ஆம் தேதியன்று, காலை 7.25 மணிக்கு மதுரை வைகையாற்றில் எழுந்தருளி, பக்தர்களுக்குக் காட்சி அளிப்பார். பக்தர்கள் வைகை ஆற்றுக்குக் குறித்த நேரத்திற்குள் வந்து, பெருமாள் அருளைப் பெற்று உண்டியல்களில் காணிக்கைகளைச் செலுத்துமாறு, கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத் திருக்கோயிலின் சிறப்பினைக் அரசவைக் கவிஞர் கவியரசு கண்ணதாசன் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்: ''திருமலை வேங்கடேசனுக்கு முந்தியவர் அழகர்மலைப் பெருமாள். சிலப்பதிகாரத்தில் காணும் அந்த அழகர்மலையை, இன்னும் அழகுபடுத்த வேண்டும். அந்த உண்டியலில் எல்லோரும் பணம் போட்டு நிரப்பவேண்டும். ஆம். அழகர்மலை, காலத்தால் முந்தியது. காஞ்சனம் என்னும் பொன்னால் செய்யப்பட்டது அந்தப் படிமம், இப்போது அத்தகைய பொன்னே கிடையாது. மூவேந்தர்களில் அழகர்மலையைத் தரிசிக்காத மன்னர்களே இல்லை. அந்த மலையின்மீதுதான், எத்தனை தீர்த்தங்கள். தண்ணீருக்குச் சுவையிருப்பது அங்கேதான். ஒருவார காலம் தொடர்ந்து அழகர்மலையில் ஏறிக் குளித்து விட்டு இறங்கினால், ஆயுளில் பத்தாண்டு அதிகமாகும். மனிதர்கள் குளத்தில் மூழ்கி நோய் தீரப்பெற்றது மதுரையிலும், அழகர்மலையிலும் தானே! (குமுதல் 5.2.81)''

108 திவ்விய தேசங்களில் ஒன்றாகியதும், ஆறு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டதுமான, தென் திருப்பதி என்று அழைக்கப்படும் இத் திருக்கோயிலிற்கு வந்து, வேண்டுவார்க்கு வேண்டும் வரம் கொடுக்கும் எம்பெருமாள் அருளைப் பெறுவீர்களாக! மதுரையிலிருந்து 21 கிலோமீட்டர் தூரம், நகரப் பேருந்து வசதி உண்டு.

**திரு. எம். வெள்ளைச்சாமி,**
*அறங்காவலர் குழுத்தலைவர்*

**பெ. புலியூர்உடையான்**
உதவிஆணையர்-செயல் அலுவலர்

(2) திரு. இ. பெ. அ. பெரியபுலியன்,
(3) திரு. கே. எம். செல்லம் என்ற மலையாண்டிக்கோன்,
(4) திரு. அ. சித்திரன் அம்பலம்,
(5) திரு. எஸ். ராசு
} அறங்காவலர்கள்

# திருஞானசம்பந்தர் அருளிய
# திருவெழு கூற்றிருக்கை

## (மூலமும் — உரையும்)

முன்னுரை :

திருவெழு கூற்றிருக்கை என்பது, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரத் திருப்பதிகங்களுள் ஒன்று. இஃது இணைக்குறள் ஆசிரியப்பாவால் இயன்ற ஒரே பாடல். ஆயினும் மரபு பற்றிப் பதிகம் என வழங்கப்படும்.

''பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் தானே''

என்னும் நூற்பாவிற்கேற்ப, இதன்கண் சிவபிரானின் பல்வகைப் பண்புகளும்சிறப்புகளும் இனிது தொகுக்கப்பெற்று, முன்னிலைப்படுத்திப் போற்றப்பட்டுள்ளன.

''பிரமபுரம் வேணுபுரம்
புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம்
பூந்தராய் சிரபுரம்முன்
வருபுறவம் சண்பைநகர்
வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம்
பன்னிரண்டு திருப்பெயர்த்தால்''

எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுமாறு போல, சீர்காழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களும், இதன்கண் வரிசையாகச் சிறந்தினிதெடுத்து மொழியப் பட்டுள்ளது.

சித்திரகவி வகைகளைச் சேர்ந்த திருவெழு கூற்றிருக்கை என்னும் இவ்வழகிய இனிய திருப்பதிகம், எண்ணலங்காரம் அமையும்படி, ஒன்று முதல் ஏழு ஈறாகப் படிமுறையே ஏறியும் இறங்கியும் மாறி மாறி இனிது பாடப் பெற்றிருத்தலினால் ''எழு கூறு இருக்கை'' எனப் பெயர்பெறுவதாயிற்று. இங்ஙனமே பதினொன்றாம் திருமுறையில் நக்கீரதேவ நாயனாரும், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரும், திருவெழு கூற்றிருக்கைச் செய்யுட்கள் பாடியிருக்கின்றனர். யாப்பருங்கல விருத்தி, மாறன் அலங்காரம் முதலிய நூல்களில், இச் சித்திரகவிக்குரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் அருளிச் செய்து வந்த தேவாரத் திருப்பதிகங்களையெல்லாம் அவ்வப்பொழுதே குறித்துவைத்துத் தொகுத்துக்கொண்டு, அவற்றை நாடோறும் அவர்தம் தந்தையார் ஆகிய சிவபாத இருதயர் பக்தியுடன் ஓதிப் பாராயணம் செய்து வந்தார். திருப்பதிகங்கள் நாள்தோறும் பெருகிக்கொண்டு வந்தமையின் அவற்றை முற்றிலும் ஓதி மகிழ முடியாமையாற் சிவபாத இருதயர் ஆகிய தம் தந்தையார் வருந்துதலைக் கண்ட திருஞான சம்பந்தப்பெருமான், இத் திருவெழுகூற்றிருக்கைத் திருப்பதிகத்தினைத் திருவாய் மலர்ந்தருளி, இஃதொன்றையே விதிப்படி ஓதினால் ஏனையெல்லாப் பதிகங்களையும் ஓதிய பயன்கிடைக்கும் என்று அருளிச் செய்தனர் எனப் பெரியோர்கள் கூறுவர். ''எந்தைக்கு எழுகூற்றிருக்கை'' (2174) எனவரும் பெரிய புராணப் பாடற்பகுதி, இக்குறிப்பினை உட்கொண்டு நிற்பதாகச் சிறந்த அறிஞர்கள் கருதுகின்றனர்.

சித்திரகவி வகையினைச் சேர்ந்த இத்தனித் திருப்பாடற்கண்ணும், ஏனைய எல்லாத் திருப்பதிகங்களிலும் தாம் வழக்கமாக விடாமற் கூறிவரும் இராவணனை அடர்த்தமை-அயன் மால் அருள்பெற்றமை-சமண பௌத்தர்நிலை- பதிகப் பயன் (திருக்கடைக்காப்பு) ஆகிய செய்திகளைத் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருள்கின்றார். ஏகபாதம், மாலைமாற்று, கோமூத்திரி, கூடசதுக்கம் என்னும் வேறு பிற சித்திரகவி வகைகளையும், திருஞானசம்பந்தர் அருளிச் செய்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

ஓருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாய்ஒரு விண்முதற் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை ;

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை; நாட்டம்மூன் றாகக் கோட்டினை;

இருநதி ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை; காய்ந்த நால்வராய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை ;
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்

கொன்று தலத்துறு அவுணரை அறுத்தனை ;
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து, ஆறங்க முதல்எழுத் தோதி,
வரன்முறை பயின்றுஎழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை ;

அறுபதம் முரலம் வேணுபுரம் விரும்பினை;

இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை ;
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை; தொலையா
இருநிதி

வாய்த்த பூந்தராய் ஏய்ந்தனை;

ஒருபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை ;
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை; புறவம்புரிந்தனை ;
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை; சண்பை அமர்ந்தனை;

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை ;
எச்சன் ஏழிசையோன் கொச்சையை
மெச்சினை;
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும் மூன்று காலமும்

தோன்ற நின்றனை ;
இருமையின் ஒருமையும் ஒருமையின்
பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை,

கழுமல முதுபதிக் கவுணியன் அறியும் ;

அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை, நீள்நிலத்தே.

குறிப்புரைகள் :

1. மான்-சத்தி; ஆங்காரம்-எழுச்சி; 4. நாட்டம்-கண்; 9. இரு(ம்) நதி-பெரிய கங்கையாறு: 12. நால்வாய்-தொங்குகின்ற வாய்: துதிக்கை. 23. எழு வான்தனை வளர்க்கும்-எழுந்து பொழியும் மழையினைப் பெய்விக்கும்; 25. அறுபதம்-வண்டுகள்; 26. இகலிய-பகைத்த; மைந்து-வலிமை; 21 பாணி-நீர்; 28. இருநிதி-பெரிய செல்வம், சங்கநிதி, பதுமநிதிகள்; 34.முந்நீர்-கடல், ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் ஆகிய மூன்றும் நிறைந்தது; 38. எச்சன் (எக்ஞன்)-வேள்விகளின் தலைவன் 40. இருமையின் ஒருமை-அத்துவிதம், பொருளால் இரண்டாகியும் கலப்பினால் ஒன்றாக விளங்கும் தன்மை; 42. ஒருமை-ஒப்புயர்வற்று விளங்கும் பரசிவ நிலை; 44. கழுமல முதுபதிக் கவுணியன்-மலங் கழுவப்பெற்று, அநாதி நித்திய சிவத்தன்மையை அடைந்த, கவுணியர் கோத்திரத்தில் தோன்றிய திருஞான சம்பந்தர்; கட்டுரை-பதிகம்; 45. கழுமல முதுபதி-திருக்கழுமலம் என்னும் பழைய சிறந்த தலத்தில் உள்ள; கவுணியன் (கம் உணியன்)-பிரமகபாலத்தில் உண்ணும் சிவபிரான்; அறியும்-அறிந்து அருள்புரிவார்; 46. அனைய-அப்படிப்பட்ட; 47. இல்லை-பிறவி இல்லையாகும்.

பதப்பொழிப்புரை:

1. ஓர் உரு ஆயினை - (எல்லாத் தத்துவங்களையும் கடந்து நிற்கும் பரசிவம் ஆகிய தாங்கள், உயிர்கள் உய்யும் வண்ணம் ஐந்தொழில்களையும் செய்தற்பொருட்டு நும் விருப்பத்தினாலேயே)ஒரு திருமேனியை எடுத்துக்கொண்டீர்.

2. மான் ஆங்காரத்து ஈர் இயல்பாய்-சத்தியை எழுச்சியுறச்செய்து, சத்தி சிவம் என்னும் இரண்டு நிலைகளாய்;

3. ஒருவிண் முதற் பூதலம்-ஒப்பற்ற ஆகாயம் முதல் நிலம் ஈறாக உள்ள ஐம்பெரும் பூதங்களையும்; ஒன்றிய இருசுடர்-பொருந்திய ஞாயிறு திங்கள் என்னும் இரண்டு பெரிய ஒளிகளையும்; உம்பர்கள் பிறவும்-வானுலகத்தில் வாழும் தேவர்களையும், மற்றும் பிற உயிர்களையும் பொருள்களையும் எல்லாம்;

4. படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை- தோற்றுவித்தற்குப் பிரமன், காத்தற்குத் திருமால், அழித்தற்கு உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளாகவும் நிற்கின்றீர்.

5. இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை-பிரம விட்டுணுக்களைத் தங்கள் திருமேனியின் வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் தோற்றுவித்தும் ஒடுக்கிக்கொண்டும், அவ்விருவரோடு ஏகபாதர் என்னும் திருவுருவம்கொண்டு திகழ்கின்றீர்.

6.7. ஓர் ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும் - ஒப்பற்ற கல்லால மரத்தின் நிழலில் தங்களின் இரண்டு திருவடிகளையும்; முப்பொழுது ஏத்திய -காலை நண்பகல்மாலை என்னும் மூன்று காலங்களிலும் வழிபட்டு வணங்கிய; நால்வர்க்கு - சனகர் சனாதனர் சனற்குமாரர் சனந்தனர் என்னும் நான்கு முனிவர்களுக்கும்; ஒளிநெறி காட்

டினை- சிவஞான நெறியை உணர்த்தியருளினீர்.

8. நாட்டம் மூன்றாகக் கோட்டினை- ஞாயிறு திங்கள் தீ என்னும் சுடர்கள் மூன்றையும் மூன்று திருக்கண்களாகக் கொண்டு, உலகம் இன்புற இருளைஅகற்றியருளுவீர். (நாட்டம்-கண்.)

இருநதி அரவமோடு ஒருமதி சூடினை- பெரிய கங்கையாற்றையும் பாம்பினையும் ஒப்பற்ற பிறைச்சந்திரனையும் தலையிற் சூடியருளினீர்.

10-11. ஒருதாள் ஈர் அயில் மூவிலைச் சூலம் - ஓர் அடிப்பகுதியினையும், ஈருகின்ற கூர்மையையும், மூன்று இலை போன்ற அமைப்பையும் உடைய சூலத்தையும்; நாற்கால் மான்மாறி ஐந்தலை அரவம் ஏந்தினை - நான்கு கால்களையுடைய மான்கன்றினையும், ஐந்து தலைகளையுடைய பெரிய பாம்பினையும், திருக்கைகளில் ஏற்று ஏந்திக் கொண்டிருக்கின்றீர்.

13-14. காய்ந்த நால்வாய் - கோபம் மிக்க தொங்குகின்ற வாயையும்; மும்மதத்து - கன்னமதம் கபோலமதம் பீசமதம் என்னும் மூன்று மதங்களையும்; இருகோட்டு - இரண்டு தந்தங்களையும் உடைய; ஒரு கரி ஈடு அழித்து உரித்தனை - கஜாசுரன் என்னும் அவுணன் ஆகிய ஒரு யானையினுடைய வலிமையை அழியும்படி செய்து, அதன்தோலை உரித்துப் போர்த்துக்கொண்டு அருளினீர்.

14-16. ஒருதனு இருகால் வளைய வாங்கி - ஒப்பற்ற மேருமலையாகிய வில்லை, இரண்டு முனைகளும் வளையும்படி வளைத்து; முப்புரத்தோடு தலத்துறு அவுணரை - முப்புரங்களையும் அவற்றில் வாழ்ந்த அவுணர்களையும், நானிலம் அஞ்சக் கொன்று அறுத்தனை - பெரிய பூமியிலுள்ள யாவரும் அஞ்சுமாறு கொன்று ஒருங்கே ஒழித்தருளினீர்.

17-18. ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து புலன்களையும், மனம்புத்தி சித்தம் அகங்காரம் என்னும் உட்கருவிகள் நான்கினையும்; முக்குணம் இருவளி - சத்துவம் இராசதம் தாமதம் என்னும்மூன்று குணங்களையும், பிராணன் அபானன் என்னும் இரண்டு வாயுக்களையும்; ஒருங்கிய வானோர் - ஒடுக்கி ஒருமைப்பட்ட உள்ளமுடைய தேவர்கள்; ஏத்த நின்றனை - போற்றுமாறு எழுந்தருளியிருக்கின்றீர்.

19-21. ஒருங்கிய மனத்தோடு - ஒருமைப்பட்ட உள்ளத்துடன்; இருபிறப்பு ஓர்த்து - உலகில் தோன்றியதனால் உண்டான பிறப்பும், உபநயனச் சடங்கினால் ஏற்பட்ட பிறப்பும் ஆகிய இரண்டினையும் ஆராய்ந்து; முப்பொழுது குறை முடித்து - காலை நண்பகல் மாலை என்னும் மூன்று வேளைகளிலும் செபம் தர்ப்பணம் அனுட்டானம் ஓமம் என்னும் நியமங்களைச் செய்து நிறைவேற்றி; நான்மறை ஓதி- நான்கு வேதங்களையும் பாராயணம் செய்து; ஐவகை வேள்வி அமைத்து- வேதம் ஓதுதலாகிய பிரமயாகம், ஓமம் வளர்த்தல் ஆகிய தேவயாகம், நீர்க்கடன் ஆற்றுதல் ஆகிய பிதிர்யாகம், விருந்தோம்புதல் ஆகிய மானுடயாகம், பலியீதல் ஆகிய பூதயாகம் (சிவபூசை குருபூசை மாகேசுரபூசை அந்தணர்பூசை அதிதிபூசை) என்னும் ஐந்து வகையான வேள்விகளையும் செய்து நிறைவேற்றி.

22-24. ஆறங்கம் முதலெழுத்து ஓதி- மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் நிருத்தம் சோதிடம் என்னும் வேத அங்கங்கள் ஆறினையும், வேதம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் முதலாக உள்ள பிரணவத்தையும் உச்சரித்து; வரன்முறை பயின்று - வேள்விகளையும் இயம நியமங்களையும் தொன்றுதொட்டுவரும் முறையின்படி இடைவிடாது செய்து; எழுவான் தனை வளர்க்கும் - எழுந்து பெய்கின்ற மழையினைக் காலந்தவறாது பெய்விக்கின்ற; பிரமபுரம் பேணினை; திருப்பிரமபுரத்தினை விரும்பித் தாங்கள் எழுந்தருளியிருக்கின்றீர்.

25. அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை - ஆறு கால்களையுடைய வண்டுகள் பண்பாடுகின்ற சோலைகள் சூழ்ந்த வேணுபுரத்தை விரும்பியிருக்கின்றீர்.

26. இகலிய மைந்து உணர்புகலி அமர்ந்தனை - (தேவர்கள் தம்மைப்) பகைத்த சூரபதுமனின் வலிமையை உணர்ந்து அடைக்கலம் புகுந்த புகலியில் அமர்ந்திருக்கின்றீர்.

27. பொங்கும் நாற்கடல் சூழ்வெங்குரு விளங்கினை - பொங்கிப் பெருகிவரும் பிரளய வெள்ளம் ஆகிய நான்கு கடல்களும் சூழ்ந்துகொண்ட வெங்குருவில் விளங்குகின்றீர்.

28-29. பாணி மூவுலகும் புதையமேல் மிதந்த தோணிபுரத்து உறைந்தனை- ஊழிநீர் வெள்ளத்தில் மூன்று உலகங்களும் அமிழ்ந்து போகவும், தான்மட்டும் அழியாமல் தோணியின் வடிவங்கொண்டு மிதந்த நகரத்தில் உறைகின்றீர்.

30. தொலையா இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை - ஒருகாலத்தும் அழியாத பெருஞ்செல்வம் பொருந்திய பூந்தராயில் ஏய்ந்து பொருந்தி வாழ்கின்றீர்.

31. ஒருபுரம் என்று உணர் சிரபுரத்து உறைந்தனை - ஒப்பற்ற தலம் என்று உணர்ந்து யாவரும் போற்றுகின்ற சிரபுரத்தில் தங்கி உறைந்து வருகின்றீர்.

32. ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன் விறல்கெடுத்து அருளினை - ஒப்புயர்வற்ற திருக்கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற மிக்க வலிமையுடைய இராவணனின் வெற்றியைக் கெடுத்துப் பின்னர் அருள்புரிந்தீர்.

33. புறவம் புரிந்தனை - திருப்புறவம் என்னும் இத்தலத்தில் விருப்பம் கொண்டு வீற்றிருக்கின்றீர்.

34-35. முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை- திருப்பாற் கடலில் அறிதுயில் புரிகின்ற திருமாலும் பிரமனும் அறிந்துகொள்ள இயலாத பெருமையுடன் திகழ்கின்றீர். 35 சண்பை அமர்ந்தனை - திருச்சண்பை என்னும் இந்தத் தலத்தில் விருப்பம் கொண்டு அமர்ந்திருக்கின்றீர்.

36-37. ஐயுறும் அமணரும் - கடவுளுண்மையில் ஐய உணர்வினையுடைய சமணர்களும்; அறுவகைத் தேரரும் - முடிவில் யாவும் அற்றொழிந்து சூனியம் ஆகிவிடும் என்னும் புத்தர்களும்; ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை-எக்காலத்தும் உணர்ந்து கொள்ளாத நிலையில் சீர்காழியில் நிலையாக வாழ்ந்து வருகின்றீர்.

38. எச்சன் - வேள்வித் தலைவனாயும்; ஏழ் இசையோன் - குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழிசைகளின் வடிவினனாயும்; கொச்சையை மெச்சினை-கொச்சைவயம் என்னும் தலத்தினை வியந்து இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

39-41. ஆறுபதமும் - பிரத்தி பிரத்தியாகாரம் துல்லியம் துல்லியாதீதம் வித்தை அவித்தை (பெயர் வினை இடை உரி திசை கிளை) என்னும் ஆறுவகைச் சொற்களும்; ஐந்து அமர் கல்வியும்-ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் விரையம் என்கிற ஐந்துவிதமான கவிபாடும் கல்வியும்; மறைமுதல் நான்கும்- முதன்மை வாய்ந்த இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும்; மூன்று காலமும் - இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் காலங்கள் மூன்றும்; தோன்ற நின்றனை - தோன்றுதற்கு ஏதுவாக நிற்கின்றீர்.

42. இருமையின் ஒருமையும் - உயிர்களோடு கலந்து ஒருமைப்பட்டு அத்துவிதம் ஆகியும்; ஒருமையின் பெருமையும்- எல்லாம் தன்னுள் அடக்கிய எல்லையற்ற ஒரு பரம்பொருள் ஆகிய சிவம் ஆகியும் திகழ்கின்றீர்.

43-45. மறுவிலா மறையோர் - குற்றம் இல்லாத வேதங்களையுணர்ந்த அந்தணர் குலத்தில் தோன்றி; கழுமலம்- மலம் கழுவப்பெற்ற நிலையில்; முதுபதி- அநாதி நித்தியமான சிவத்தன்மையடைந்த; கவுணியன் - கவுணிய கோத்திரத்திலே தோன்றியருளிய திருஞானசம்பந்தன் ஆகிய யான் கூறிய; கட்டுரை - திருவெழுகூற்றிருக்கை என்னும் இந்தத் திருப்பதிகத்தை:

46. கழுமல முதுபதி - கழுமலம் என்னும் பழம் பெருந் தலத்தில் எழுந்தருளியுள்ள; கவுணியன் அறியும் - பிரமனின் தலையாகிய கலத்தில் உண்கின்ற சிவபெருமான், அறிந்து உவந்து அருள் புரிவார்.

46-47. அனைய தன்மையை ஆதலின்- அத்தகைய சிறந்த பண்பை உடையவராகையால்; நின்னை-தேவரீரை; நினைய வல்லவர் - நினைந்து தியானிக்க வல்லவர்களுக்கு; நீள் நிலத்து இல்லை - நீண்ட பெரிய இவ்வுலகத்திற் பிறவி இல்லையாகும்.

பெயர்க் காரணங்கள் :

இத் திருப்பதிகத்தின்கண் தொகுத்துச் சுட்டப்பெற்ற பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருப்பெயர்கள் ஏற்பட்டமைக்குரிய காரணங்கள் வருமாறு:

1. பிரமபுரம்: பிரமதேவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். "ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்து ஏத்த அருள்செய்த பீடுடைய பிரமாபுரம்" என முதல் திருமுறையின் முதற்பாடலில் வருதல் காண்க.

2. வேணுபுரம்: சூரபதுமனுக்கு அஞ்சிய தேவேந்திரன் இங்குப் போந்து வழிபட்ட பொழுது, சிவபெருமான் வேணு (மூங்கில்) வடிவில் முளைத்து அருள்புரிந்த தலம். தேவேந்திரன் தன் இடுக்கண்கள் நீங்க வேணு வழியாய் இத்தலத்தை அடைந்து பூசித்தனன் என்றும் கூறுவர்.

3. புகலி: சூரபதுமனால் இடுக்கண் எய்திய தேவர்கள் சிவபிரானைப் புகல் அடைந்து (அடைக்கலம் புகுந்து) வணங்கிய தலம்.

4. வெங்குரு: அசுரர்களின் குருவாகிய சுக்கிரன் வழிபட்டுத் தேவகுருவாகிய பிருகற்பதிக்குச் சமத்துவம் பெற்ற தலம். எமதருமன் தன்னைக் கொடியவன் என்று உலகம் இகழாதவாறு இறைவனை வழிபட்டுய்ந்த தலம்.

5. தோணிபுரம்: ஊழிமுடிவிற் சிவபெருமான் உமாதேவியாரோடு பிரணவம்ஆகிய தோணியில் வீற்றிருப்பத், தான் அழியாமல், நிலைபேறு எய்தித் திகழும் தலம்.

6. பூந்தராய்: சங்கநிதி பதுமநிதி என்னும் இருநிதிகளும் பூவும் தாருமாய்ப் பூசித்து அழியாவரம் பெற்றதலம்.

7. சிரபுரம்: சயிங்கேயன் என்னும் அசுரன் வேற்று வடிவங்கொண்டு மறைந்து வந்து தேவர்களுடன் இருந்து அமிர்தம் உண்ணும் நிலையில், சூரியனால் கண்டு பிடிக்கப்பட்டு விட்டுணுவால் சிரம் வெட்டுண்ட தலம்.

8. புறவம்: சிபிச்சக்கரவர்த்தியைச் சோதித்தற்கு அக்கினிதேவன் புறா வடிவம் கொண்டுபோந்து, புறாவின் எடையளவுக்குத் தன் தசையை அரிந்து கொடுத்தும், அது போதாமைகண்டு, அவனே துலையேறித் தன் வள்ளன்மையினைப் புலப்படுத்திய நிலையில், புறா வடிவம் கொண்ட அக்கினிதேவன், அப்பாவம் அழியுமாறு வழிபட்டுய்ந்த தலம்.

9. சண்பை: கபில முனிவர் சாபத்தின் படி, தம் குலத்தினன் வயிற்றிற்பிறந்த இருப்புலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய துகள், சண்பைப் புல்லாக முளைத் திருந்ததை ஆயுதமாகக் கொண்டு போர் செய்து மடிந்த யாதவர்களின் கொலைப் பழி, தன்னை அணுகாதவண்ணம் கண்ணன் பூசித்த தலம்.

10. சீர்காழி: காளிதன் என்னும் நாகம் வணங்கிய தலம்; நடனத்தில் தோற்ற காளியம்மையார் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

11. கொச்சைவயம்: பராசரர் தாம் மச்சகந்தியை ஆற்றிடையிற் புணர்ந்து அடைந்த தீநாற்றமும், பழியும் போகும் வண்ணம் இறைஞ்சியுய்ந்த தலம்.

12. கழுமலம்: உரோமச முனிவர் இறைவனை வழுத்தி, ஞானோபதேசம் பெற்றுத் தம்முடைய மலங்களைக் கழுவப்பெற்ற தலம்.

முடிவுரை:

இத்தகைய பல சிறப்புகள் பொருந்திய இத்திருவெழு கூற்றிருக்கைப் பதிகத்தினை, நாம் நாடோறும் அன்புடன் ஓதிச் சம்பந்தரின் பதிகங்கள் அனைத்தையும் ஒதிய பயனைப்பெற்று, உய்ய முயலுவோமாக!

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

(1) 1959 - ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45(1) பிரிவின் கீழ், கோயிலின் நல்ல நிர்வாகம் குறித்து, திருச்சி மாவட்டம் டி. வளவனூர் அருள்மிகு **இலட்சுமி நாராயணப் பெருமாள்** கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயிலானது திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் மாந்துறை அருள்மிகு **ஆம்பிரவனேசுவரர்** கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (ந. க. எண். 55196/80 நாள் 7-12-1980).

(2) 1959 - ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45(1) பிரிவின் கீழ், கோயிலின் நல்ல நிர்வாகம் குறித்து, சென்னை வால்டாக்ஸ் ரோடு அருள்மிகு **கல்யாண வேங்கடேசப்** பெருமாள் கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இக்கோயிலானது, சென்னை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையிலுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (ந. க. எண். 59862/80 - பி 5, நாள் 13-12-1980)

(3) 1958 - ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் சட்டத்தின் 45(1) பிரிவின் கீழ், கோயிலின் நல்ல நிர்வாகம் குறித்து, பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூர் அருள்மிகு உத்**தண்ட வேலாயுதசுவாமி** கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், சிவன்மலை, அருள்மிகு **சுப்பிரமணியசுவாமி** கோயிலுடன், இக்கோயில் இணைக்கப்பட்டுள்ளது. (ந. க. எண். 81380/80 - பி6 நாள் 15-12-1980).

# அருட்பெருங் காப்பியம்

'சித்தாந்தக் கலைமணி'
மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழில் 'பெருங்காப்பியம்' எனப்படுவன, சிலப்பதிகாரம் மணிமேகலை சீவக சிந்தாமணி வளையாபதி குண்டலகேசி என்னும் ஐந்து என்பது பலரும் அறிந்தது. இவற்றை 'ஐம் பெருங்காப்பியம்' என்பர். இவற்றுள் வளையாபதி, குண்டலகேசி, என்பவற்றுள் சிற்சில பாடல்கள் அன்றி, நூல்கள் முழுமையாகக்' கிடைத்தில. ஏனைய மூன்றுள் இன்று சிலப்பதிகாரம் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. எனினும் சீவக சிந்தாமணி தோன்றிய காலத்தில் அதுவே மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதற்குக் காரணம், ஏனைச் சுவைகளைப் பார்க்கிலும் இன்பச்சுவை அதில் மிக்குத் தோன்றுதலே. அதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் இன்பச் சுவையோடு சிறிதும் தொடர்பில்லாத சமணத் துறவியராயினும், தமது புலமைத் திறம் ஒன்றானே அச்சுவை மிக்கு விளங்கப்பாட வல்லவர் என்பதனை நிறுவுதற்பொருட்டு அந்நூலை அவர் அத்தன்மைய தாகப் பாடினார் என்பது, அது பற்றிக் கூறப்படும் வரலாறு. சமணக் காப்பியமாகிய அதனை, அதன் இன்பச்சுவை காரணமாகச் சைவ மன்னனாகிய அநபாயச் சோழனும் விரும்பிக் கேட்டு அதில் ஈடுபட்டிருந்தான் என்பது சேக்கிழார் புராணத்தால் அறியப் படுவது.

சிந்தாமணிக் காப்பியத்தால் இன்பச் சுவையில் ஈடுபட்டிருந்த அநபாயச் சோழனைச் சேக்கிழார், தாம் அவனுக்கு முதல் அமைச்சராய் இருந்த வாய்ப்பினால், சிவனடியார்களாகிய அறுபான்மைமும்மை நாயன்மார்களது அருள் வரலாறு கொண்டு பத்திச் சுவையில் ஈடுபடச் செய்தார். அதன்பின் அம்மன்னனது வேண்டுகோளின்படியே அவர் 'பெரியபுராணம்' என வழங்கும் திருத்தொண்டர் புராணத்தை அருளிச் செய்தார் என்பதும் அப்புராணத் தாலே அறிய நிற்பது.

பெருங்காப்பியம், சிறுகாப்பியம், என்னும் இருவகைக் காப்பியங்களுக்கும் உரிய இலக்கணங்களை, தண்டியலங்கார நூல் கூறுகின்றது. அந்நூல் வடமொழிக் காவ்யாதர்சத்தின் மொழி பெயர்ப்பாயினும், அதற்கு இலக்கியமாகத் தமிழில் அமைந்த காப்பியங்களும் அந்நூற்கு முன்னரே தோன்றி விளங்கின. அதனால், சங்ககாலதிற்குப் பின்னர்த், தமிழ் மக்களும் இத்தகைய காப்பியச் சுவையில் ஈடுபட்டனர் என்பது புலனாகும். ஆகவே, புலவர்கள் தமிழில் இத்தகைய காப்பியங்கள் பல வற்றை இயற்றலாயினர்.

புலவர்கள் தம் புலமைத் திறத்தால் மக்களைச் செய்யுள் இன்பத்தில்-தமிழ்ச் சுவையில்-திளைக்கச் செய்தற்குக் காப்பியங்களை இயற்றினர். அவ்வாறு இயற்றும் பொழுது, காப்பியங்களில் கூறப்படும் நிகழ்வுறுப்பினரை (பாத்திரங்களை) முதன்மையாகக் கருதாமல், அந்நிகழ்ச்சி பற்றிப் பிறக்கும் சுவையையும், அச்சுவையினால் மக்கள் உள்ளம் எய்தும் திருத்தத்தையுமே முதன்மையாகக் கருதினர். ஆதலின் இல்லதைக் கூறுதலாகிய புனைந்துரைகள் காப்பியங்களில் மிகுதியும் இடம் பெற்றன. அதனால், (1) இல்லோன் தலைவனாகஇல்லது புணர்த்தல் (2) இல்லோன் தலைவனாக உள்ளது புணர்த்தல் (3) உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல்; (4) உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல், என்னும் இவை காப்பிய இலக்கணங்களாகக் கொள்ளப்பட்டன. இவற்றுள் இல்லது கூறலே மிக்கிருத்தல் காணலாம்.

சீவகசிந்தாமணிக் காப்பியமும் இவ்விலக்கணத்தை உடையதே. அக் காப்பியத்தில் ஈடுபட்டிருந்த அநபாயனது உள்ளத்தைத் திருப்பிய சேக்கிழார், அதன் பொருட்டு அவனுக்கு உரைத்த நாயன்மார்களது உண்மை வரலாறுகளை, அவனது வேண்டுகோளின்படியே புராணமாகப் பாடியருள விழையும் பொழுது, அவற்றையும் மக்கள் உள்ளத்தைக் கவரும் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதினார். அங்ஙனம் கருதிச் செய்யுமிடத்து அதற்கு உரியன பலவும் இயற்கையிலே அமைந்தமை திருவருட் செயலேயாகும். அவ்வமைப்பைத் திருவருள் உணர்த்த உணர்ந்து செய்தமையே சேக்கிழார்க்கு உள்ள தனிச் சிறப்பு.

சிந்தாமணிக்கு முதனூல் வடமொழியில் 'வாதீபசிம்மன்' என்பான் காப்பியமாக இயற்றிய, 'க்ஷத்ர சூடாமணி' 'கத்திய சிந்தாமணி' என்னும் நூல்கள், திருத் தொண்டர் புராணத்திற்கு முதல் நூல்கள். இறைவனது திருவருள் பெற்று அவனையும், அவன் அடியார்களையும் தமிழால்

துதித்த பத்தித் திருப்பாடல்களாகிய சுந்தரரது திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பிகளது திருத்தொண்டர் திருவந்தாதி, மற்றும் திருவாசகம், பதினொன்றாந் திருமுறைப் பிரபந்தங்கள் முதலியன. சிந்தாமணி வடநாட்டு வரலாறு போலப் புனையப்பட்ட கதை. திருத்தொண்டர்புராணம் தமிழ்நாட்டில் நிகழ்ந்த உண்மை வரலாறு.

திருத்தொண்டரது வரலாறு, நூல்வடிவில் தோன்றக் காரணமாய் இருந்தவர் நம்பியாரூரர் என்பது முன்பே கூறப்பட்டது. எனவே அவரது வரலாறே எனைய நாயன்மார்களது வரலாறுகளுக்கு மூலமாக இயல்பாய் அமைந்தது. அதனை உணர்ந்த சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் என்னும் பெருங்காப்பியத்திற்கு அவரையே காப்பியத் தலைவராக வைத்துச் செய்தார்.

'காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாதல் வேண்டும்' என்பது இலக்கணம். தன்னிகரில்லாமையாவது, காப்பியத்திற்கு உயிராய் விளங்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைப் பெறுவதில் ஒப்பின்றி விளங்குதல். இத்தன்மை வாய்ந்த தலைவனையே 'நம்பி' என்றல் தமிழ் மரபு. அதுபற்றியே தமிழ்ச் சிந்தாமணி சீவகனை, சீவக நம்பி என்கின்றது. ஆனால் சேக்கிழார் சுந்தரரைத் தாமாகவே, 'நம்பி' என்று கூறவேண்டாதவாறு, அவரது பெயரே 'நம்பியாரூரர்' என அமைந்தது. இதனை அந்நாயனாரை முதல்முதலாக நமக்கு அறிமுகப் படுத்துகின்ற நம்பியாண்டார் நம்பிகள், அவரை அப் பெயரால் பின்வருமாறு கூறுமாற்றால் அறியலாம்.

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ்
சோதி சென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி
எனக்குன் குடி
முழுதும் அடிமை வந்தாட்செய் எனப்பெற்
றவன் முரல்தேன்
ஒழுகும் மலரின்நற் றார்எம்பி ரான் நம்பி
யாரூரனே.

சீவகனது பிறப்பிலும், வளர்ப்பிலும் தோன்றுவது 'சோகரசம்' எனப்படும் அவலச்சுவை; நம்பியாரூரரது வரலாற்றில் அவற்றால் தோன்றுவது மக்கட் செல்வம் பற்றிய உவகைச் சுவை. சீவகன் நாடாளும் அரசனின் மகனாயினும் நாட்டுக் குடிமக்கள் பலருள் ஒருவனாகிய வணிகனொருவன் மகனாய்த் தன்னிலையைத் தான் அறியாது வளர்ந்தான். சுந்தரர் நாட்டுக் குடிகளுள் ஒன்றாகிய ஆதிசைவ அந்தணர் குடிஒன்றில் அவதரித்து, நாடாளும் மன்னனால் ஏற்றுப் பெறப்பட்டு மன்னவ குமாரனாய், மன்னவர் திருவும், தங்கள் வைதிகத் திருவும் ஆகிய இரண்டும் நாடறிய விளங்க வளர்ந்தார். சீவகன் நாட்டில் பகையும் போரும் மலிந்த அரசியல் குழப்பத்தில் வாழ்ந்தான். சுந்தரர் தமிழ்நாட்டு வேந்தராகிய சேரர் சோழர் பாண்டியர் பல்லவர் அனைவரும் அவர்பால் அன்பும் மதிப்பும் கொண்டு அவரை வழிபட்டு நின்றனர்.

செல்வச் சிறப்புடையோர்க்கு வாழ்மனை ஒன்றன்றிப் பல இருந்தாலும், நில உரிமையாக ஓர் ஊர் அன்றிப் பல ஊர் இருத்தலும் பெருமையாக மதிக்கப்படுதல் போல, மனைவியும் ஒருத்தியன்றிப் பலர் இருத்தல் பெருமை தருவதாக அக்காலத்தில் மதிக்கப்பட்டது. அதன் பொருட்டே பண்டை மன்னர்கள் பல மனைவியரை மணம்செய்து கொண்டனர். காப்பியங்களில் ஒரு தலைவனுக்கு நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் மனைவியர் இருந்ததாகக் கூறப்படும். அம்முறையில் சீவகன் எண்மர் மனைவியரை மணந்து கொண்டவனாகக் காட்டப்படுகிறான். கல்வியையும் ஆளும் நாட்டையும் கூட மனைவியர்போலவே ஆசிரியர் கூறுகின்றார். உலகியலில் ஓர் ஆடவனுக்கு இரு மனைவியர் இருத்தல் காணப்படுவதே. அதனால் உண்மைக் காப்பியத் தலைவராகிய சுந்தரர் தாமும் இரு மனைவியரை உடையவராயிருந்தார்.

சீவகன் பல நிகழ்ச்சிகள் நிமித்தமாக யாத்திரை செல்லுதலும், அங்ஙனம் செல்லும் இடங்களில் எல்லாம் அருகக் கடவுளை வணங்கி அக்கடவுளது புகழைப் பாடுதலும், தன்னை அடுத்தவர்கட்கு அக் கடவுள் சொன்ன அறங்களை உபதேசம் செய்தலும் உடையவனாய் இருந்தான் என்று கூறப்படுகின்றது. சுந்தரர் உண்மையாகவே தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்குள்ளவர் அடிபணிந்து வரவேற்க யாத்திரை செய்து, சிவபெருமான் திருக்கோயிலை அடைந்து வணங்கி, அப்பெருமானது புகழைப் பாடியும், அப்பாடல் வாயிலாகவே "பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்று புலவர் முதலாக அனைவருக்குமே அருளுபதேசங்கள் பலவற்றைச் செய்தலையுமே தமக்குக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தமையை, அவரது திருப்பாடல்களே இன்றும் நின்று நிலவிச் சான்று பகர்கின்றன. அவற்றுள் தலையாய உபதேசம் திருத்தொண்டத்தொகை. அதனை நம்பியாரூரர் திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் ஒவ்வொரு நாயனார்க்கும் தனித் தனியே தாம் அடிமை என்பதை அடியார் பலரும் கேட்க அருளிச் செய்தார் என்றால், அத் திருப்பதிகத்தில் குறிக்கப்பட்ட நாயன்மார்களது வரலாற்றை ஓரளவேனும் விளங்கக் கூறி, 'இத்தகைய அடியார்கட்கு அடியாராவதே பிறப்பெடுத்த தன் பயன்' என்பதை அனைவருக்கும் அறிவுறுத்தினார் என்பது தானே பொருள்! அதுபற்றியே சேக்கிழார் நாயன்மாரது வரலாறுகளைச் சுந்தரரது வரலாற்றில்

டையனவாகவே
த்துரைத்தார்.

னவியரை மணந்து
த்தமை, தன் பகை
ஆட்சியை மீட்டுக்
ரசாண்டமை முதலிய
தனது வாழ்நாளை
கொண்ட தவறான
ஒரு சோலையிலிருந்த
ங்குகளின் செயலால்
உ... தவற்றை நினைந்து கழி
விரக்க... னடான். பின்பு வாழ்நாள்
இறுதியில் த... அன்னையால் ஓரளவு நல்லறிவு பெற்றுப் பின்பு, சாரணர் தலைவனால் முற்பிறப்புணர்வும், மெய்யுணர்வும் பெற்றுத் துறவு பூண்டு நோற்றுத் தான் தனியே வீட்டுலகு எய்தினான். நம்பியாரூரர் தம் திருமணக் காலமாகிய வாழ்வின் முதல் நாளிலே இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்று, முற் பிறப்புணர்வும் திருவருட்பேறும் பெற்றுத் திருத்தொண்டு பூண்டு அடியார்க்கடியாராகி இரு மனைவியராற்பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் வாழ்நாள் முழுவதும் மிகப் பயனுள்ள நாட்களாகவே, 'மண்ணிலே வந்த வாலிதாம் பிறவியே இன்பமாய்க் கழிய, முடிவில் இறைவன் இடமாகிய திருமலைக்குக் களையா உடலோடே அவன் அனுப்பி அழைத்த வெள்ளை யானைமேல் தோழராகிய சேரமான் பெருமாள் குதிரையில் உடன்வரச் சென்றருளினார். சீவகன் வரலாற்றை, அவனைச் சுட்டிக்கேட்ட 'சேணிகன்' என்னும் மன்னனுக்குச் 'சுதன்மர்' என்னும் கணத்தலைவர் கூறினார். சுந்தரரது வரலாற்றை அவரது வரவினை இன்னார் வரவென்று அறியாது கேட்ட முனிவர்கட்கு உபமன்னிய முனிவர் கூறினார்.

இனிச் சுந்தரர் வரலாறு கூறும் பெருங் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார், காப்பிய இலக்கணங்கள் பலவும் உரிய இடங்களில் அமைத்து விளங்கச் செய்திருத்தல் வியக்கத்தக்கதாய் உள்ளது. நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்னும் இரண்டில் நகரச் சிறப்பாகத் திருவாரூரில் மனுச்சோழன் வரலாற்றை அமைத்திருத்தல் அரியதொரு செயல்.

சுந்தரர் வரலாற்றிலும், ஞானசம்பந்தர் வரலாற்றிலும் மகப்பேறுற்ற நிகழ்ச்சிகளும், திருமண நிகழ்ச்சிகளும் சிறக்கக் கூறப்படுகின்றன. சுந்தரர் வரலாற்றில் ஊடலும், கூடலும் காணப்படுதல் தெளிவு. புகழ்ச்சோழர் வரலாற்றில் போர் நிகழ்ச்சி பொலிவுறுகின்றது. கண்ணப்பர் வரலாற்றில் வில்விழா எடுத்தலும், உண்டாட்டும், முடிபுனைதலும், வேட்டஞ்செய்தலும் நன்கமைந்துள்ளன. அப்பூதியடிகள் வரலாறு, சிறுத்தொண்டர் வரலாறு, பூம்பாவை வரலாறு இவற்றில் அழுகைச் சுவை சிறிதே தோற்றுவிக்கப்படுகின்றது.

மகளிரைக் கேசாதி பாதம் அழகுபட வருணிக்கும் வருணனைக்குச் சேக்கிழார் தக்க இடத்தை அறிந்து பூம்பாவை உயிர் பெற்றெழுந்த வரலாற்றில் அமைத்திருத்தல் அருமையினும் அருமையாய் உள்ளது. மற்றும் சூரிய சந்திரரது தோற்றம் மறைவுகளின் வருணனை, பெரும்பொழுது, சிறுபொழுதுகளின் வருணனை, நால்வகை நிலத்தொடு பாலை வருணனை, முதலியவற்றின் அழகினை வரையறுத்து உரைத்தல் இயலாது. இவ்வாற்றால் பெருங் காப்பியநிலை பெரிதும் பெற்று விளங்கச் சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணம், பத்திச் சுவையே எங்கும் பரந்து விளங்க, அறம் முதலிய நான்கிற்கும் உயிராய் விளங்கும் இறைவனது அருள் நிலையை உணர்தலையே பயனாகக் கொண்ட அருட்பெருங் காப்பியமாகத் திகழ்கின்றது. அதனை அத்தகைய காப்பியமாக உணர்ந்து சுவைத்துப் பயனைப் பெறுதற்கும் அருளே துணை நிற்கவேண்டும் போலும். இக் காப்பியத்தின் தலைவராகிய சுந்தரரது வரலாறு அறம் முதலிய நான்கும் பெற்று விளங்குதலை,

''சுரர்முனிவர் பரவவுறும்
பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோய்! அறம்முதல்
நால்வகை செய்தோயே''

என்னும் நால்வர் நான்மணி மாலையால் அறியலாம்.

# எம்பெருமானும் யானையும்

மகாவித்வான், பத்ம விபூஷண்
திருமிகு. பி. ப அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதில்இன் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை அமுதை என்னை ஆளுடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

என்பது, திருவல்லிக்கேணி பற்றித் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ள (பெரிய திருமொழி 2-ஆம் பத்து 3-ஆம் திருமொழிப்) பதிகத்தின் இரண்டாம் பாடல். இதன்கண் ''நந்தனார் களிறு'' என எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து குறிப்பிட்டருளியிருக்கின்றார்: ''நந்தகோபருடைய திருமாளிகையில் யானைக் கன்றுபோல் விளையாடினவன்'' என்பது அத்தொடரின் பொருள். இதனால் யானைக்கும் எம்பெருமானுக்கும் பலவகையில் ஒப்புமைப் பண்புஉண்டு என்று தெரிகின்றது. அவற்றுட் சிலவருமாறு:

(1) யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அபூர்வ வஸ்துபோலவேயிருந்து பரமாநந்தத்தைத் தரும் .எம்பெருமானும் ''அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே'' என்னும் படியிருப்பன்.

(2) யானையின்மீது ஏறவேண்டியவன் யானையின் காலைப்பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடம் சென்று சேர வேண்டியவர்களும் அவனது திருவடியைப் பற்றியே சேர வேண்டும்.

(3) யானை தன்னைக் கட்டத் தானே கயிறு கொடுக்கும்; ''எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்'' (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடி எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன். ''மயர்வற மதிநலம் அருளினன்'' என்பது காண்க.

(4) யானையை நீராட்டினாலும் அடுத்த கணத்திலே அழுக்கோடேசேரும்; எம்பெருமான் சுத்த சத்வமயனாய்ப் பரம பவித்திரனாயிருக்கச் செய்தேயும் 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்'' உடைய நம்போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன், வாத்சல்யம் என்னும் பெருங்கருணையினாலே.

(5) யானையைப் பிடிக்க வேண்டின் பெண் யானையைக் கொண்டே பிடிக்க வேண்டும். பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

(6) யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன் பக்கல் வருபவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் ''வேதம் வல்லர்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து'' என்றபடி அடியார்களை முன்னிட்டுப் புகாதவரை அங்கீகரித்தருளான்.

(7) யானையின் மொழி யானைப் பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய மொழி திருக்கச்சி நம்பி போல்வார்க்கே தெரியும். பேரருளாளனோடே பேசுமவரிறே நம்பிகள்.

(8) யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் பாகனிட்ட வழக்கு; எம்பெருமானும் ''கணி கண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா-உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்'' என்றும், ''கிடந்தவாறெழுந்திருந்து பேசு' என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப்பிரான் போல்வார்க்கு இணங்கி, அவர்கள் விரும்பியவாறெல்லாம் இசைந்து ஒழுகுவான்.

(9) யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி, பலகோடி நூறாயிரம் எறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமான் அமுது செய்து எஞ்சிய பிரசாதத்தாலே பலகோடி பக்த வர்க்கங்கள் உய்திபெறக் காண்கிறோமிறே.

(10) யானைக்குக் கை நீளம்; எம்பெருமானும் அலம்புரிந்த நெடுந்தடக்கையனிறே: ''நீண்ட அத்தக்கருமுகிலையெம்மான்றன்னை'' என்பர் ஆழ்வார்.

(11) யானை இறந்தபின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் சாதித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினபின்பும், இதிகாச புராணங்கள் அருளிச்செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றானிறே.

(12) யானைக்கு ஒரு கையே உள்ளது; எம்பெருமானுக்கும் கொடுக்குங்கையொழியக் கொள்ளுங்கை இல்லையிறே.

(13) பாகனுக்கு ஜீவனங்கள் சம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கு அங்ஙனம் செய்தருள்வன். ஆதலால் அவனுக்குக் களிறு முற்றுவமையாம். இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க.

***

# சிற்பக்கலை மாட்சி

திரு. செ. வைத்தியலிங்கன், M.A., M.Litt.,
தமிழ்ப் பேருரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கற்பனையால் உருவான அழகுணர்வும் சிற்ப நூலறிவும் சீலமும் கைவண்ணமும் நிறைந்த சிற்பிகள் ஆர்வத்துடன் உருவாக்கிய சிற்பத்தின் பெருமை அளப்பரிது. இந்தியப் பெருநாட்டிற்கு, அதிலும் சிறப்பாகத் தமிழ்நாட்டிற்கு, மிகுந்த புகழை ஈட்டித்தந்த சிற்பக்கலை பற்றிச் சிந்தை செய்வோம்.

சிற்பம் என்பது உருவச்சிற்பம், கட்டடச்சிற்பம் முதலியவற்றைப் பொதுவாக உணர்த்தும். சிற்பத்தை உருவாக்குவதற்கு மண், மரம், கல், சுதை, மணிகள், கண்டசருக்கரை ஆகிய பொருள்களும், வண்ணப்பொடிகளின் கூட்டுக்கலவையால் அமைந்த தாதுப் பொருள்கள்-சிலாசத்து, கல்நார், மதார்சிங், சாதிலிங்கம்-ஆகியவையும், உலோகங்களும் இடத்திற்கும் தேவைக்குமேற்பப் பயன்படுத்தப்பெறும் என்று சிற்பிகள் கூறுகின்றனர்.

### சிற்பக்கலைப்பொருள்

சிற்பங்கள் படைப்பதற்குப் பத்துமூலப் பொருள்கள் பயன்படுமென்பதைப் பிங்கலந்தை(29)

''கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிலுக் குறுப்பாகும்''

என்றுகூறிக் காட்டும். பல்வகை உருவங்களை முற்காலத்தில் மண்ணால் வனைந்தனர்; பிறகு, மண்ணாலாகிய சிலைகளை அனலில் பக்குவமாகச் சுட்டுச் சுடுமண் பாவைகளாக்கி, நெடுங்காலமிருக்க வழிகோலினர்; இன்றும் சிற்றூர்ப் புறங்களில் சிறு தெய்வங்கள் இவ்வாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

மரத்தாலும் சுதையாலும் உருவங்களைப் படைத்துக் களித்தனர்; அவற்றினும் பல்லாண்டு நிற்கக்கூடிய பாறைக் கற்களைப் பொளிந்து உருவங்களைப் படைத்தனர். அந்நிலையில், கல்லைத் தேர்ந்தெடுக்கும்போது அதன் எந்தெந்தப் பகுதியைக் கழித்தால் நமக்கு வேண்டிய சிற்பம் உருவாகுமென்று கற்பனைக் கண்ணால் திட்டமிட்டிருக்கின்றனர். மேலும், மானுடமனம் கொண்ட கலை வேட்கையால், செம்பாலும் பொன்னாலும் வெள்ளியாலும் கலப்பு உலோகங்களாலும் சிற்பங்களைக் கண்டனர். அவ்வாறான சிந்தனையால் உருவாக்கப்பெற்றனவே பஞ்சலோகச் சிலைகளாகும். பஞ்சலோகச் சிலையில் பட்ட நீர் (அபிடேக தீர்த்தம்) மக்களின் நோய் தீர்க்குமென்ற நம்பிக்கையைப் போல, நவபாஷாணச் சிலைமேல் பட்டநீரும் பஞ்சாமிருதமும் நோய் தீர்க்குமென்று நம்பினர். அவ்வாற்றால் போகர் எனும் சித்தரால் நவபாஷாணச் சிலையாக வடிக்கப்பெற்றதே பழநியாண்டவர் திருமேனியாகும்.

பூம்புகார் அகழ்வாராய்ச்சியில் சலவைக் கல் போன்ற வெள்ளிய கல்லால் ஆன புத்தபீடிகை (புத்தர்பாதம்) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வேழம் நிறைந்த மலைநாட்டில் (சேரநாட்டில்), யானைத் தந்தங்கள் நிரம்பக் கிடைக்கும். எனவே தந்தச் சிற்பவேலை, இன்றும் அங்கு நிரம்ப நடைபெறுதலைக் காணலாம்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருங்குளத்தில் காணப்பெறும் இறைவன் திருமேனி சந்தனத்தால் ஆனதென்பர்; எப்பேர்ப்பட்ட இரசாயன உத்தியால் அதனை நெடுங்காலங் காக்கின்றனர் என்பது சிந்திக்கத்தக்கது. திருவலஞ்சுழியிலுள்ள வெள்ளைவாரணர் (விநாயகர்) திருவுருவம், கடல் நுரையாலானதென்பதும் ஆய்தற்குரியது.

படிகத்தாலும் மரகதத்தாலும் நீலமணியாலும் ஆன திருமேனிகள், திருக்கோயில்கள் சிலவற்றில் வழிபடப்பெறுவதை இன்றும் காணலாம். மரத்தாலான தெய்வ உருவங்களும் வழிபாட்டில் இடம் பெற்றன. 'தேர்ச்சிற்பம்' என்ற அடிப்படையில் சிந்தித்தால், அது விரிந்த ஆராய்ச்சியில் கொண்டு முடியும்.

## சிற்ப வரலாறு

தமிழகத்தில் என்று நடுகல் வழிபாடு தோன்றியதோ அன்றே சிற்ப வரலாறு தொடக்கம் பெற்றுவிட்டது எனலாம். சங்க காலந்தொட்டே கல், உலோகம் முதலியவற்றாலான உருவங்களைப் படைத்து வந்தனர். சிறப்பாகத் தெய்வ உருவங்களை வைத்து வழிபட்டிருக்கின்றனர். வேதியர்களின் இல்லங்களில் நன்கு மெழுகப்பட்ட அறைகளிலே அவர்கள் வணங்கும்பொருட்டுத் தெய்வச்சிலைகளை வைத்திருக்கின்றனர்; இதனைப் பெரும்பாணாற்றுப்படை,

''பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்''
(298).

எனக் கூறிக்காட்டும். படிவம் என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியரும் 'வழிபடு தெய்வங்கள்' என உரை வகுப்பது சிந்தித்தற்குரியது. சங்கம் மருவிய சிலப்பதிகாரம் மணிமேகலை காலத்தில், பல திருவுருவங்களமைந்த கோட்டங்கள் இருந்தமை பற்றி அறியலாம். வீரபத்தினி கண்ணகிக்குச் சேரன்செங்குட்டுவன் சிலையமைத்துப் 'பத்தினிக் கோட்ட வழிபாடு' நிகழ்த்தியதைச் சிலப்பதிகாரத்தால் தெளியலாம்.

இருண்ட காலத்திற்குப் பிறகு தோன்றிய பக்தி இயக்கத்தால், பல்லவர் சோழர் பாண்டியர் காலங்களில், சிற்பக்கலை வளர்ச்சியில் செழுமை உண்டாயிற்று. விசயநகர-நாயக்க மன்னர் காலத்திலும், தஞ்சை மராட்டிய மன்னர் காலத்திலும், குறுநில மன்னர்கள் சமீன்தாரர்கள் காலத்திலும், சிற்ப வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரப்பட்டதை வரலாற்றில் உணரலாம்.

சமணர்களும் பௌத்தர்களும் ஆர்வத்துடன் தத்தம் சிற்பக்கலை வளர்ச்சிக்குத் துணை நின்றபோது, சைவ வைணவ சமயத்தாரும் மிகுந்த வேகத்துடன் தத்தம் சமயத்தினைக் காக்கத் திருக்கோயில்கள் கட்டவும், அவ்வாற்றால் இசை, ஓவியம், நடனம், நாடகம் ஆகியவற்றை வளர்க்கவும் தொடங்கிச், சிறப்பாகச் சிற்பக்கலை வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் செலுத்தினர்.

## சிற்ப மரபுகள்

கவின் கலையுலகத்தில் கலைவல்லுநர்கள் சில கலைமரபுகளைத் தோற்றுவித்து அவற்றைப் போற்றுவதில் பெரிதும் நாட்டம் செலுத்தினர். உயிரோட்டம் மிக்க சிற்பத்தின் மரபுகளும் முறைகளும் நோக்கங்களும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுபடத்தான் செய்யும். நாட்டுக்கு நாடு சிற்ப மரபும், நாடாளும் மன்னர்களும் மரபினர்க்கு மரபினர் சிற்ப மரபும், ஒரே மரபினருள்ளும் மன்னருக்கு மன்னர் சிற்ப மரபும் மாறுபட்டிருக்கின்றன. இவை வரலாறு காட்டும் உண்மை.

வடஇந்தியாவில் குஷானியச் சிற்ப மரபும், அமராவதிச் சிற்ப மரபும், குப்தர் காலச் சிற்ப மரபும் பேசப்படுவதைப் போலத், தென்னிந்தியாவிலும் பல்லவர் சிற்ப மரபும்; சோழர் சிற்ப மரபும், பாண்டியர் சிற்ப மரபும், ஒய்சாளச் சிற்ப மரபும், விசயநகரச் சிற்ப மரபுமாகப் பல கூறப்படுகின்றன.

எடுத்துக்காட்டாகப் பல்லவர் சிற்ப மரபிலும் மகேந்திரச் சிற்பமுறை (கி.பி.600-625), மாமல்லச் சிற்பமுறை (கி.பி.635-574), இராச சிம்மச் சிற்பமுறை (கி.பி. 674-800), அபராசிதச் சிற்பமுறை (கி.பி. 800 முதல்) என வகுத்துரைக்கப்பட்டன.

சாந்து மரம் உலோகம் முதலியவற்றைப் பயன்படுத்தாமல் மலைகளைக் குடைந்து குகைக்கோயில்கள் கட்டிய பெருமை மகேந்திரவர்மனுக்கு உண்டு. திருச்சிராப்பள்ளிமலை, வல்லம், தளவானூர், சித்தன்னவாசல், பல்லவபுரம் முதலிய இடங்களை மகேந்திரவர்மன் கலைத் தொடர்பாகக் காணலாம்.

மாமல்லனாகிய நரசிம்மவர்மன் எடுப்பித்தவை குடைவரைக் கோயில்களும், ஒற்றைக்கற் கோயில்களும் ஆகும். மகாபலிபுரத்திலமைந்துள்ள தேர்க் கற்கோயில்களை இவன் தொடர்பாகக் காணலாம் என்றாலும், இவை இரண்டாம் நரசிம்மனாகிய இராசசிம்மனால் கட்டப்பட்டவை என்றும் கூறுவர். இந்தக் கற்கோயில்களின் வெளிப்புற மாடக்குழிகளில் இந்து சமயத் தெய்வ வடிவங்களைப் புராண அடிப்படையில் காணலாம். இவை அமராவதிச் சிற்பமுறையைத் தழுவியவை என்பர் ஆய்வாளர்கள்.

தருமர் தேரில், திருமால் சிவன் பிரமன் அர்த்தநாரீசுவரர், நரசிம்மவர்ம பல்லவன் முதலியவர்களின் சிற்ப உருவங்கள் தென்படுகின்றன. அருச்சுனர்தேரில் திருமால் இந்திரன் சிவன் கின்னரர் முதலிய வடிவங்கள் உள்ளன. அருகே பெரிய நந்தியும் உள்ளது. திரௌபதிதேரில் துர்க்கை வடிவங்கள் காணப்படுகின்றன; இதன் முற்றத்தில் சிங்கவடிவம் நின்ற அமைப்பில் உள்ளது. சகதேவன் தேரும், பீமன் தேரும் பௌத்தசைத்தியத்தை ஒத்துக் காணப்படுகின்றன.

மாமல்லன் பாறைச் சிற்பங்களையும் உருவாக்கியிருக்கிறான். கோவர்த்தன மலையைக் குடையாகக் கொண்ட கண்ணன் காட்சியும், அருச்சுனனின் தவமும் சிற்ப நேர்த்தி கொண்டவை. திருக்கழுக்குன்றத்தில் உள்ள ஒரு குடைவரைக் கோயில் நரசிம்மவர்மனால் கட்டப்பெற்றிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இராசசிம்ம பல்லவன் பாறைக் கற்களைச் சுண்ணாம்பினால் பொருத்திப் பெருங்கோயில் எடுப்பித்தவன். சிற்பக் களஞ்சியம் எனப் பாராட்டப்பெறும் காஞ்சிக் கைலாசநாதர் கோயிலும், மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோயிலும் இவனால் கட்டப்பெற்றவை. அகக்கோயில் கட்டிய பூசலார் நாயனார் இவர் காலத்தவரென்பர்.

அபராசிதன் காலத்தில், பல்லவர் சிற்ப முறையும், சோழர் சிற்பமுறையும் கலப்புற்று, ஆகம சிற்பநூல்களைத் தழுவிய சிற்ப மரபு ஏற்பட்டது. சைவசித்தாந்தத்திற்குப் பொருந்திய பதி கருவறையிலும், இடபமாகிய பசு (ஆன்மா) முன்மண்டபத்திலுமாக அமைந்திருக்கவும், பலிபீடம் பாசத்தைக் குறித்து அமைக்கப்பெற்றது. அபராசித முறைப்படித் துவாரபாலகர்கள் நான்கு கைகளுடன் அமைக்கப்பட்டனர்.

பொதுவாக நோக்கினால், பல்லவர்கள் சிற்பக்கலைக்குப் புரிந்த அரிய தொண்டுகள் மிகவும் பாராட்டற்குரியன. காஞ்சியில் இராசசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலும், எட்டாம் நூற்றாண்டின் நடுவே ஆண்ட நந்திவர்மன் கட்டியதாகக் கருதப்பெறும் வைகுண்டப்பெருமாள் கோயிலும், மாமல்லபுரத்துச் சிற்பக்கலைக் கூடம் போல விளங்குகின்றன. சிறப்பாக, வைகுண்டப்பெருமாள்கோயிலைச்சுற்றிலுமுள்ள திருச்சுற்றில், பல்லவர் வரலாற்றுச் சிற்பங்கள் அழகுற அமைக்கப்பெற்றமை போற்றற்குரியது. திருவதிகை வீரட்டானத்தில் அமைந்துள்ள சுதைச் சிற்பம், எழில் கொஞ்சும் தகைமையது.

### சோழர் சிற்ப மரபுகள்

செங்கல்லால் கட்டப் பெற்றிருந்த பாடல் பெற்ற கோயில்கள் பலவற்றைச் சோழமன்னர்கள் கற்றளிகளாக மாற்றினர். 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பெற்ற சோழர் கோயில்கள் மிக உயரமாக இல்லாவிடினும் சிற்பக் கவின்கொண்டவை. அதிட்டானமாகிய கோயிலடிப் பகுதியில் இராமாயணம், சிவன்திருவிளையாடல் சார்பான புராண நிகழ்ச்சிகள் அழகுறச் சிற்பக் காட்சிகளாகச் செதுக்கப் பெற்றன. இவ்வாறான சிற்பங்களைக் குடந்தை நாகேசுவரன்கோயில், திருப்புறம்பயம் சிவன்கோயில் பசுபதிகோயில், திருநனிபள்ளி போன்ற இடங்களில்காணலாம். முதற் பராந்தகனால் கட்டப்பெற்ற சீநிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிற்புறச் சுவர்களில் முழு உருவச் சிற்பங்கள் அழகுற அமைந்துள்ளன.

தில்லைப் பொன்னம்பலத்தைச் சுற்றியுள்ள பரிவார தெய்வக் கோயில்களின் அதிட்டானப் பகுதியில் திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகள் சிற்பத்தில் அமைந்துள்ளன. பொன்னம்பலத்து ஆடல்வல்லானைக் காணக் கீழ்ப்பால் ஏறும் படிக்கட்டிற்கு அருகே தெற்கு நோக்கியமைந்த முகப்பில் காணலாகும் காலசம்மார மூர்த்தியின் அழகும், கண்ணப்பருக்கு அருளும் சிவனது கோலமும் கண்டு வியந்து நிற்கலாம். திருச்செங்காட்டங்குடிக் கோயிலில் உள்ள சிற்பங்கள் கலைமாட்சியின் நல்ல எடுத்துக் காட்டுகள் ஆகும்.

பொதுவாக இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் (எழுநிலைக் கோபுரங்கள்) கட்டப்பெறும்மரபு ஏற்பட்டதென்பர். தஞ்சை இராசராசேச்சுரம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய கோயில்விமானம் போலத் திரிபுவனத்தில் மூன்றாம் குலோத்துங்கன் கம்பகரேசுவரர் ஆலயம் கட்டினான். அவ்வாலயத்தினுள் ஒரு பகுதியில் விசயநகரமன்னர் காலத்தில் சரபமூர்த்திக்கு ஒரு கோயில் கட்டப்பெற்றது. அந்தத் திருவுருவமானது தில்லையில் அமைந்துள்ள சரபமூர்த்தியைப் பார்த்து அமைக்கப்பெற்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறான சரப மூர்த்தியின் சுதையுருவம் சோழர்கள் கட்டிய பல கோயிற் கோபுரங்களில் காணப்படுவதும் சிந்திக்கத்தக்கது.

தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்டசோழபுரம் கோயில் புறத்தமைந்த மாடக்குழிகளில் தெய்வ வடிவங்கள் எழிலுடன் அமைக்கப்பெற்றுள்ளன. துவாரபாலகர் சிலைகளும் பெரிய நந்திகளும் சோழர் சிற்பக்கலைக்குக் கட்டியங் கூறுகின்றன. இரண்டாம் இராசராசன் கட்டிய தாராசுரம் கோயிலின் சிற்ப வேலைப்பாடு கங்கைகொண்டசோழபுரக் கோயிலின் சிற்ப வேலைப்பாட்டை அடியொற்றியதே எனலாம். கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள சண்டேச அனுக்கிரக மூர்த்தியும், சூரியன்தேர், அட்டதிக்குப் பாலகர் நவக்கிரகங்களுடன் கூடிய வட்டக் கற்சிற்பமும், தாராசுரத்திலமைந்ததுள்ள இராவணன் தவமும் அழகு முத்திரை கொண்டவை.

### பாண்டியர் சிற்ப மரபு

புதிய திருக்கோயில் கட்டுவதைவிடப் பழைய கோயில்களைச் செப்பனிட்டுஅவற்றுக்கு வானளாவிய கோபுரங் கட்டுவதில் பாண்டியர்கள் நாட்டஞ் செலுத்தினர். சிதம்பரம் திருவண்ணாமலை திருவரங்கம் மதுரை முதலிய ஊர்களில் காணப்படும் பாண்டியர் கோபுரச் சிற்பங்கள் கண்கவர் வனப்புடையவை. பாண்டியர் சிற்ப மாட்சிக்கு ஆவுடையார்கோயிலும், திருமெய்யம் கோயிலும், கழுகுமலைக்கோயிலும், திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயமும், திருவிடைமருதூர்க் கோயிலும், அழகர் கோயிலும்; தில்லைப் பாண்டியநாயகம் கோயிலும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

இராமேசுவரம் உத்தரகோசமங்கை குமரிக்கோயில் ஆகியவை பாண்டியர்களால் அமைக்கப்பெற்று, விசயநகர மன்னர்களாலும் சேதுபதி மன்னர்களாலும் பெரியனவாக ஆக்கப்பட்டன என்பர். கோயிற்கட்டடக்கலையிலும் சிற்பத்திலும் ஈடுபாடு மிகுதியாகக் கொண்டு அவற்றைப் பாண்டியர்கள் எவ்வாறு போற்றி நின்றனர் என்பதற்குப் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1411-1463) சாசனச் செய்யுளொன்றைக் காண்போம்.

''சேலேறிய வயல் தென்காசி
ஆலயம், தெய்வச்செய
லாலே சமைந்த திங்கென்
செயலல்ல; அதனையின்னம்
மேலே விரிவு செய்தே
புரப்பார் அடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன்
பராக்கிரம பாண்டியனே''

**விசயநகர, நாயக்கமன்னர் சிற்பமரபு**

விசயநகர மன்னர் சிற்பமரபைத் தழுவியதே நாயக்கமன்னர்கள் கைக்கொண்ட சிற்பமரபாகும். விசயநகர மன்னர்களுள் சிறந்த கிருஷ்ணதேவராயர் தில்லை காஞ்சி திருவண்ணாமலை முதலிய இடங்களில் மிக உயரமான கோபுரனங்களைக் கட்டியதால் கோபுரப்பணியில் கலைமுத்திரையிட்டார் எனலாம். (தில்லையில்வடக்குகோபுரத்தில் கிருஷ்ணதேவராயர் சிலையிருப்பினும், அந்தக் கோபுரத்தினைச் செப்பனிட்டவரே அவர் என்று திரு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் கருதுகின்றனர்.)

கிருஷ்ணதேவராயரைப் பின்பற்றிச் சிற்ப மாட்சியுடன் மதுரையில் ஒப்பற்ற கோபுரத்தைக் கட்டிக் காட்டியவர் திருமலைநாயக்கர் ;மதுரையில் உள்ள சிற்ப மாட்சி கொஞ்சும் புதுமண்டபத்தைக் கட்டிக் கலையுலகில், அவர் ஒரு தனியிடம் பெற்று உள்ளார்.

விசயநகர மன்னர்கள் காலத்தில் கோயில்களில் அம்மனுக்குத் தனிக்கோயில் ஏற்பட்டது. திருமண மண்டபம் கட்டப்பட்டது. இவை பின்வந்தோரால் பின்பற்றப்பட்டன என்பதை வரலாறு கூறும். நாயக்கர் கால மண்டபங்களில் தூண்சிற்பங்கள் வனப்புற வடிக்கப்பெற்றன. சிறப்பாகக் குதிரை மீதும் யாளிமீதும் அமர்ந்தோட்டும் வீரர்களின் சிற்பங்கள் உயிரோட்டம் உடையவை.

கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்திலே (கி.பி.1563-1573) பாளையங்கோட்டைக்கு அருகில் 9 கி.மீ. தொலைவிலுள்ள கிருஷ்ணாபுரத்தில் அமைந்த சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. கல்லெல்லாம் கதை சொல்லும் பாங்கிலே - இருடிகுமாரனுக்கும் இளவரசிக்கும் ஏற்பட்ட காதல் கதைச் சிற்பம், நடன நங்கைச் சிற்பம், அருச்சுனன் தவக்கோலச் சிற்பம், பாரதப் போரிலே நாகக்கணை தாங்கிய கன்னன் காட்சிச் சிற்பம், வலக்கையில் மலர்ப்பந்தும் இடது உள்ளங்கையில் மாதுளம் பழமுங்கொண்டு நடனமாடும் நங்கையின் சிற்பம் முதலியன கலைக்களஞ்சியமெனலாம்.

சிறப்பாக, ஒரு தூணில் குறவனொருவன் இளவரசியைக் கடத்திச் செல்கிறான்; அவளுக்கு இடப்புறம் ஓர் இளவரசன் ஓடோடி வந்து ஈட்டியால் அக்குறவனது விலாவிற் குத்துகிறான் ; விலாவிலிருந்து செங்குருதி தெறித்துப் பொங்கிப் பெருகுகிறது. குறவன் வலிதாளாமல் துடிதுடித்து நிற்கிறான்; விலா எலும்புகளும் கழுத்து நரம்புகளும் தெரியும்படி நெளிந்துகொடுக்கிறான். அவனுக்கு இடப்பக்கம் மற்றொரு வீரன்வாளேந்திக் குறவன்மீதுபாய்கிறான். குறவன் மீது அமர்ந்துள்ள இளவரசி அவனது குடுமியைப் பிடித்திழுக்கிறாள். தன்னைக்காக்க வீரர் வந்துவிட்டதறிந்து அவள் முகம் நம்பிக்கையால் மலர்ச்சியுறுகிறது. இந்தச் சிற்பத்தில் குருதி பெருகுவது போன்ற காட்சியைப் பார்ப்போர்க்கு உண்டாக்குமாறு சிற்பிகள் சிவப்புத்தாரைகளோடிய கற்களைத் தேர்ந்தெடுத்திருப்பது போற்றுதற்குரியது. இவ்வாறான தூண் சிற்பங்கள் காரணமாக நாயக்கர்கள் தம் தனித்தன்மையைச் சிற்பவுலகில் பொறித்துள்ளனர் எனலாம். நாயக்க மன்னர்களின் சிற்பக்கலைத் திறன் மதுரை மீனாட்சியம்மன்கோயில், கும்பகோணம் இராமசாமி கோயில், திருவில்லிபுத்தூர், திருச்சி; திருநெல்வேலி, திருநாகேச்சுரம் கோயில்களில் கண்டு வியந்து நிற்கலாம்.

மகளிர் சிலையைப் பொறுத்தவரையில் ஒரு நுணுக்கக் குறிப்பு உண்டு. விசயநகர நாயக்கர் காலத்திற்கு முன்பு தமிழகச் சிற்பங்களில் அழகிய நங்கையரின் மார்பகங்கள் திறந்தே காட்டப்பெற்றிருக்கும். இவர்கள் காலத்திலிருந்தே மாதர்களின் மேல்பகுதியை மேலாடை மறைத்திருக்குஞ் சிற்ப மரபு தொடங்கியது.

முடியுடை மன்னர்களைப் பின்பற்றிக் குறுநில மன்னர்களும் சமீன்தாரர்களும் கலைநலம் மலிந்த பொருட் செல்வர்களும் ஆங்காங்கும் சிற்ப எழிலோடு கூடிய திருக்கோயில்களைக் கட்டியுள்ளனர். கொங்கு நாட்டிலுள்ள பேரூர்க் கோயிற் சிற்பங்களும், தாரமங்கலம் கோயிற் சிற்பங்களும் சிற்பவரலாற்றில் சிறப்பிடம் பெறுபவை. திருமுட்டம் கோயில் முன் மண்டபச் சிற்பங்களும், அரியலூர்க் கோயிலின் தசாவதார மண்டபச் சிற்பங்களும், வெங்கனூர் கோயிற் சிற்பங்களும், நகரத்தார் கோயிற் சிற்பங்களும், தமிழக அரசால் பூம்புகாரில் அமைத்த சிற்பங்களும், தமிழகச் சிற்பத்திறனை வாழையடி வாழையாக வளர்க்கும் பான்மையுடையவை.

சிற்பியின் கற்பனையாலும் கைவண்ணத்தாலும் இயற்கையில் காணக்கிடக்கின்ற செடி கொடி மரங்களெல்லாம் சிற்பவுலகிலே புதுப்பொலிவுடன் காட்டப்பெறும். கஞ்சக்குல்லை (கஞ்சா) இலைகள் திராட்சைக்கொடிகள் போன்றவற்றைச் சிற்பங்களில் கொடிக் கருக்குகளாக அமைத்துக் காட்டுவர். தாரமங்கலத்திலும் தாராசுரத்திலும் இவ்வாறான வேலைப்பாடுகளைக் காணலாம்.

பறவையினங்களில் மயில், கிளி, அன்னங்களின் அழகு சிற்பியின் கைகளால் மேலும் சிறப்புற்றுக் கலைப்படைப்பாகும். பொதுப் பார்வைக்குக் கருடன் எளிதாகத் தோன்றலாம். திருமாலுக்குரிய ஊர்தியாகச் சிற்பிகள் அதனைக் காண எண்ணியபோது அழகிய கருடாழ்வாராகக்-கருடசேவைத் திருவிழாவிற்குரியவராக-வடிவங்கொள்ளச் செய்வார்கள்.

விலங்கினங்களில் சிங்கம் காளை யானை ஆடு குரங்கு பன்றி போன்றவை சிற்பத்தில் உருவாகின்றன. மக்களின் கவர்ச்சிக்கேற்ப அவை கலையழகுடன் படைக்கப்படுகின்றன. மாமல்லபுரத்தில் இயற்கையாகத் தோற்றங்கொடுக்கும் குரங்குக் குடும்பத்தின் அமைப்பு வேறு; இராமாயணத்தில் வரும் வாலி அனுமன்சுக்கிரீவன் போன்றோரை-குரங்கினத்தவரைச் - சிற்பத்தில் வடித்துக் காட்டும் பாங்கு வேறு.

மக்களால் வழிபடப் பெறும் பாங்கிலே அனுமார் சிற்பம் ஆங்காங்கும் அமைந்திருத்தலைக் காணலாம். எடுத்துக்காட்டாகச் சுசீந்திரம் கோயிலுள்ள அனுமார் திருமேனியை நினைவு கூரலாம்.

நாகர்கள் புரிந்த நாகவழிபாடு தமிழகத்தில் தோன்றியது; தமிழ்மக்கள் புற்றுக்களிடத்தும் கோயில்கள் எடுத்தனர்; நாகச் சிலைகளை உண்டாக்கினர். நாகர்கோயிலில் சிறப்பாக நாக வழிபாடு காணலாம். பன்றியைப் பார்த்து யாரும் இகழலாம். ஆனால் திருமாலே பன்றியாக-வராகமாக-அவதாரமெடுக்கையில் சமயத்திலும் சரி, கலையிலும் சரி, அவருக்கெனத் தனிப் பெருமை உண்டாகி விடுகிறது.

விலங்கினங்களில் சிங்கமானது கலையுலகில் சிறப்பிடம் பெறும். சிங்கமானது காளிக்கு ஊர்தியாக அமையும், நரசிம்மவர்மனின் சிற்ப மரபினைக் காட்டக் கோயில் தூண்களில் அடிப்பாகத்தில் சிங்கம் அமர்ந்த நிலையில் அமைக்கப்பெறும். மாமன்னர் அமருகின்ற ஆசனத்திலும் இடம்பெற்றுச் சிம்மாசனம் எனக் கூற வைக்கும். மெல்லிய இசைக்கருவியாகிய வீணையின் தண்டு நுனியிலும் சிங்கம், யாளியெனும் பெயரில் தலைப்பாகத்தைக் காட்டும். திருமாலே சிங்கப்பிரானாகக் காட்டும். திருமாலே சிங்கப்பிரானாக வரும் நரசிம்மமாகத் தோற்றங்கொள்ளும் போது - சிங்கத்தின் மதிப்பு உச்சியையடைந்துவிடும்.

பாரதக் கதையிலே கூறப்பெறும் புருஷாமிருகம் என்பது மனிதத்தலையுடன் தோன்றும் விலங்குருவமாகும். இதுவும் கலைப்படைப்பில் இடம்பிடித்துக்கொண்டு திருக்கோயில்களில் அமர்ந்திருத்தலைக் காணலாம். தில்லைக்கோயிலின் கிழக்கு வாயிலின் உட்புறத்து இருமருங்கிலும் புருஷாமிருகச் சிலைகள் உள்ளன. திருவாதவூரில் ஏரிகாக்கும் தெய்வமாகப் புருஷாமிருகச் சிலையமைந்துள்ளது. இவ்வாறாக படிப்படியே வளர்ந்த உருவச் சிற்பமானது, மானுட உருவத்திலே இறைவனைக் கண்டு படைத்த நிலையில் ஓர் எல்லை கண்டது.

## உருவச் சிலை அமைப்பு:

முற்காலத்தில் சிற்பிகள் மக்களுருவத்தைச் சிற்பமாக வடிப்பதில் மிகுந்த நாட்டஞ் செலுத்தவில்லை. தியான சுலோகங்களடிப்படையில் கடவுட் சிலைகளையும் செப்புத்திருமேனிகளையுமே உருவாக்கி மகிழ்ந்தார்கள். தெய்வப் படிமங்களின் திருக்கோலங்களை 'ஆசனங்கள்' என்று அழைப்பர். அவை ஸ்தானகம், ஆசனம், சயனம், ஸ்தானாசனம், சயனாசனம் என ஐவகைப்படும். இவற்றை ஐந்தொழில் என்றும், பஞ்சகிருத்தியம் என்றும் விசுவகர்மீயம் என்ற சிற்பநூல்கூறும்.

'நின்ற கோலத்தை ஸ்தானகம் என்றும், அமர்ந்த கோலத்தை ஆசனம் என்றும், கிடந்த கோலத்தைசயனம் என்றும், நின்ற கோலத்தைச் சார்ந்த பிற சாயல்களைச் சயனாசனம் என்றும், ஐந்து பொதுவகையாக நாம் கூறுகிறோம்' என்பர் திரு. வை. கணபதி ஸ்தபதி,

ஆசனங்களையும் அவற்றின் உட்பிரிவுகளையும் பற்றிய விளக்கங்களைச் சகளாதிகாரம் மயமதம் ஆகிய சிற்பநூல்கள் விரிவாகக் கூறும். என்றாலும் சிற்ப ஆசனங்களில் தெரிய வேண்டிய 'பங்க இலக்கணம்' பற்றிச் சிறிது நோக்குவது நல்லது.

உடலையும் தலையையும் இடப்புறமாதல் வலப்புறமாதல் வளைத்துப் பார்ப்போர் உள்ளத்தில் ரசானுபவம் தோற்றுமாறு சிற்ப ஆசனங்களில் பங்க இலக்கணம் இடம்பெறச் செய்யப்படுகின்றது. உடல் ஒடிவைப் பங்கமென்று நூல்கள் கூறும். பங்கங்கள் மூன்று. அவை முறையே ஆபங்கம், சமபங்கம், அதிபங்கம் ஆகும். ஆபங்கம் சாத்விக பாவத்தையும், சமபங்கம் இராஜசபாவத்தையும், அதிபங்கம் தாமச பாவத்தையும் உணர்த்துவனவாம். இம்மூன்று பங்கங்களையும் சேர்த்துத் திரிபங்கம் என்றும், ஒவ்வொரு பங்கத்திலும்

மூன்று ஒடிவுகள் இருப்பதால் ஒவ்வொன்றையும் பொதுப்படையாகத் திரிபங்கம் என்றும் கூறுவர்.

இவ்வாறான சிற்ப நுணுக்கங்களைப் புரிந்துகொண்டு, சிலைகளைப் பார்த்தால் நம் நாட்டுச் சிற்பம் எத்தகையது என்பது புலப்படும். உடற்கூறுகளை உள்ளதை உள்ளவாறே கலையில் வெளிப்படுத்துகின்ற மேனாட்டார் கலையுணர்விற்கும், உள்ளதை உணர்ந்தவாறே தெய்வ நலத்துடன் கலையில் வெளிப்படுத்தும் இந்திய நாட்டினர் கலையுணர்விற்கும் வேறுபாட்டினையுணர்தல் வேண்டும்.

எவ்வளவோ விலையுயர்ந்த பொருள்களெல்லாம் ஒருபால் இருக்கவும், தெய்வ மூர்த்தங்களைச் சிறப்பாகக் கல்லாலும், செம்பாலும் உருவாக்கிய நம் சிற்பிகளின் கூரிய மதியினை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

உலோகங்கள் எல்லாவற்றிலும் செம்புக்கு மிகுந்த ஆற்றலிருப்பதால்தான் மின்சாரப் பயன்களுக்குச் செம்பைப் பயன்படுத்துகின்றனர். தெய்வச் செப்புச்சிலைகளும் திருவருட் சத்தியை-பக்திஞான மின்சாரத்தை-வாங்கி அடியவர்களுக்கு வழங்கத் துணைநிற்கும் என்று நம்பியே, இவ்வாறு விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையைக் கண்டனரோ எனச் சிந்திக்கத் தோன்றும். கல்லினது ஆற்றல் செம்பினது ஆற்றலைவிடச் சிறந்ததென்பர் அறிவியலோர். திருக்கோயில்களில் பெரும்பாலும் கற்சிலைகளே கருவறையிலிருப்பதும், செப்புத் திருமேனிகளே விழாநிமித்தம் புறப்பாடு கொள்வதும் இந்த அடிப்படையில் பொருத்தமேயாகும்.

**சிற்பக்கலை நுணுக்கம்:**

மக்களாகப் பிறந்த பிறகு சமுதாயத்திலே அவர்கள் கலந்து பழக வேண்டிய சூழலுக்கு ஆட்படுகிறார்கள்; அதனாலும் கலை உலகில் தாக்கம் ஏற்படுகிறது. பௌத்தர்களும் சமணர்களும் தமிழகத்திலே மன்னர்களுடன் தொடர்புகொண்டு தத்தம் மதச் செல்வாக்கினைத் தேடிக் கொண்டனர்; பௌத்த விகாரங்களும் சமணப்பாழிகளும் கோயில்களும் தம் தேவையான அளவிற்கு அமைத்துக்கொண்டனர். அவ்வாறான இடங்களிலே புத்தர் சிலைகளும் சமண தீர்த்தங்கரர் சிலைகளும்தோன்றியதில் வியப்பில்லை. நாகைப் பௌத்த விகாரத்திலிருந்து கைப்பற்றிய பொன்னால் ஆன புத்தர்சிலைகளைக் கொண்டு திருமங்கை மன்னர் திருவரங்கத்திலே விமானம் அமைத்தார் என்பர். இவ்வாறான செய்திகள் சிற்பக்கலை பல்வேறு மதத்தினரிடையேயும் வளர்ந்து வந்ததை உணர்த்தும். பௌத்தர்களையும் சமணர்களையும் வைணவர்களும் சைவர்களும் சிற்பக்கலை காரணமாக ஒருவகையில் பின்பற்றியுள்ளனரோ என எண்ணத் தோன்றும் குறிப்பு உளது.

புத்தர் சிலைகள் நின்ற கோலத்திலும், கிடந்த கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும் அமைக்கப்பெறும்; அவ்வாறான கோலங்களில் திருமால் திருமேனிகளும் அமைக்கப்பெறுவதைச் சிந்திக்க. சமணர் சிலைகள் நின்ற கோலத்திலும் அமர்ந்த கோலத்திலுமே காணப்பெறும்; அவற்றைப் போன்றே சிவன்கோயில் தெய்வத் திருமேனிகளும் அமைந்துள்ளதைக் காணலாம். கவின்கலை ஆராய்ச்சியில்மிகுந்த ஈடுபாடு கொண்ட மயிலை சீனி. வேங்கடசாமி போன்றோர், இவ்வாறான சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

சிற்பிகள் சிவனையும் ஒரு கட்டுக்குள் அடக்கி வைக்க நினைக்காமல், அவனையும் தமிழகத்தில் ஊத்துக்கோட்டை அருகில் சுரட்டபள்ளி என்னும் தலத்தில்பள்ளி கொண்ட பரமனாகக் காட்டியிருக்கின்றனர். அதற்கும் ஒரு கதை தோன்றிவிட்டது! காலகூட நஞ்சினையுண்ட சிவன் தன் வருத்தந் தீரச் சிறிதுநேரம் பள்ளி கொண்டேசுவரனாகக்கிடந்த கோலத்தில் காட்சியளிக்கத் தலைப்பட்டானாம்! என்னே சிற்பவுலகின் விந்தை.

சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையோன் வாக்கினால் திருவரங்கத்திலுள்ள திருமாலின் கிடந்த கோலமும், திருவேங்கடத்திலுள்ள நின்ற கோலமும் இயற்கையுடன் சார்த்தி நேர்த்தியாகக் கூறப்படுதலைக் காணலாம். அங்கங்கும், திருமாலின் அமர்ந்த கோலங்கள் இருந்தமையால் அவன் அவற்றைக் கூறாது விடுத்தானோ என்பதும் சிந்தித்தற்குரியது. பெரும்பாலும், திருமால் கோயில்களிலே பள்ளி கொண்ட பெருமாள் இருக்குமிடமெல்லாம் அமர்ந்த வண்ணச் சிலைகளை அவற்றின் முன்னிடத்தில் வைக்கின்ற மரபு எப்பொழுது தோன்றியது என்பது தெரிந்தால் ஆராய்ச்சிக்கு நல்லது.

ஆடற்கலைக்கு ஓவியநூலறிவு, இசை நூலறிவு தேவை என்பர்; அது போலவே சிற்பக்கலைக்கு ஓவிய நூலறிவும், சிறப்பாக ஆடற்கலை நூலறிவும் மிகவும் தேவையெனலாம். சிற்ப வடிவங்கள் நின்ற கோலத்திலோ, அமர்ந்த கோலத்திலோ, கிடந்த கோலத்திலோ வேறு எந்த அமைதியிலோ இருந்தாலும் அவற்றில் ஆடற்கலை இலக்கணம் ஏற்றவண்ணம் அமைந்திருத்தலைக் கூர்ந்து நோக்கினால் அறியலாம்.

''சிற்பியானவன் ஆடற்கலை இலக்கணத்தை அப்படியே கையாளவில்லை. அதற்கு மாறாக, ஆடற்கலை இலக்கணத்தை நன்கு உணர்ந்து மனத்துள் கொண்டு, வேண்டிய அளவிற்கு அதைத் தழுவித் தன்னுடைய அழகுணர்ச்சியை

யும் புகுத்தி, தான் எப்பொருளில் எவ்விடத்தில் எதற்காக அமைக்கிறானோ அவற்றிற்கேற்றவாறு, சிற்ப வடிவத்தை ஒடித்து, வளைத்து, நெளித்துக் கைகளையும் கால்களையும் பல அமைதிகளில் காட்டி, பார்ப்போர், கலையழகை மட்டுமின்றி அதன் உட்கிடையையும் உணருமாறு செய்துவிடுகிறான். இத்தகைய செயலில் ஈடுபடும்பொழுது உடற்கூறுகளை இயல்புக்கு மீறி மிகையாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதனால், கை முத்திரைகளிலும் ஆசனங்களிலும், உடல் வளைவுகளிலும் தனித்தன்மை உருவாகிறது. அதனால், சிற்பக் கை அமைதி, உடல் அமைதி பற்றிய வரம்புகளை உணர்த்தும் இலக்கண நூல்கள் தோன்றுவதாயின'' என்பர் திரு. வை. கணபதி ஸ்தபதி.

சிற்பிகள் முப்பத்திரண்டு வகை, கை முத்திரைகளில் நாட்டம் செலுத்தித் தேவைக்கேற்பப் பயன்படுத்துவர் ; என்றாலும், தாம் வடிக்கும் தெய்வச் சிலையின் நெற்றி, முகம், கழுத்து, மார்பு, வயிறு, தொடை, முழங்கால், கணுக்கால் ஆகியவற்றின் பரிமாணத்திலே (அளவிலே) வரையறை செய்து கொள்வார்கள்.

சிறந்த சிற்பிகள் தாமும் சீலத்துடன்-நன்னெறியுடன்-வாழ்ந்தார்கள்; பிறரும் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று அவாவினார்கள். எனவே, சிற்றின்பம் என்ற கொம்பிலே தம் சிற்பக்கலையாகிய கொடியைப் பற்றிப் படரவிடாமல், பேரின்பமென்ற வலுவான மரத்தினைச் சுற்றிப் பற்றிப் படருமாறு கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள்.

தியான யோகப் பயிற்சியுடையவர்களாயும், கடவுளிடம் தம் சிந்தனையை வாக்கினைச்-செயலினை அடைக்கலப்படுத்தியவர்களாயும், சிற்பிகள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தார்கள். எனவே அவர்கள் உள்ளுணர்வுடன் உருவாகிய தெய்வச் சிலைகளும் மிகுந்த ஆற்றல் படைத்தனவாய் விளங்கின. இதனைத்தான் மக்கள் 'மூர்த்திகரம்' 'மகிமை' 'சக்தி' என்றெல்லாம் வழங்கினார்கள். அதற்கேற்ப ஞானியர்களும் திருக்கோயில்களில் யந்திர தந்திர மந்திரங்களால் பொலிவூட்டினார்கள். யந்திரம் சில இடங்களில் ஸ்ரீசக்கரமாக அமைந்து ஆற்றலூட்டுவதைக் காஞ்சி காமாட்சியம்மன் கோயில் போன்ற இடங்களில் காணலாம். கோயில்களில்-பொருள் வருவாயைப் பெருகுதற்குக் கருவியாகப் பொருட் கவர்ச்சி யந்திரம் (தனாகர்சன யந்திரம்), பொன் கவர்ச்சி யந்திரம் (சொர்ணாகர்சன யந்திரம்), மக்கள் கவர்ச்சி யந்திரம் (சனாகர்சன யந்திரம்) போன்றவை நிறுவப்பட்டன என்பர்.

எவ்வாறோ சிற்பக்கலையானது விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பாலமாகச்-சமயப் பண்பாட்டின் சாரமாக-நாகரிகத்தின் நல்லடையாளமாக விளங்கி உள்ளதெனப் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.

''மண்ணினுங் கல்லினும் மரத்தினுஞ் சுவரினுங்
கண்ணிய தெய்வங் காட்டுநர் வகுக்க
ஆங்கத் தெய்வதம் அவ்விடம் நீங்காது''

-மணிமேகலை, கந்திற்பாவை வரவு உரைத்த காதை.

—oOo—

# திருப்பாணாழ்வார்

சோழநாட்டில், உறையூரில் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்தில் திருமாலினது ஸ்ரீவத்சத்தின் அம்சமாய்த் தோன்றியருளியவர். இவர் சிறுகுழந்தையாக இருந்தபோது, பாணர் குலத்தில் பிறந்த ஒருவனால் எடுத்து வளர்க்கப் பெற்றமையினால், பாணாழ்வான் (பாண் பெருமாள்) என்னும் பெயர் பெற்றார். இவர் யாழ்ப்பாடலில் தேர்ச்சிபெற்றுத், திருவரங்கம் பெரிய பெருமாள் திருவுள்ளம் உவக்குமாறு பாடல்தொண்டு புரிந்துவந்தார். அதனால் அவர்தம் இன்னருளுக்கு இலக்காகி, அவர் பணித்தருளியபடி லோகசாரங்க மாமுனிகளின் தோள்களின் மேலே ஏறி, அப்பெரிய பெருமாளின் திருக்கோயிலுக்குள் சென்று, அவரைத் திருவடி முதல் திருமுடி வரை தனித்தனியாகவும் ஒருசேரவும் தரிசித்து நன்கு அனுபவித்து, ''என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று நெஞ்சுருகப்பாடி, அவர்தம் திருவடிகளையே சார்ந்தவர். ''அமலன் ஆதிபிரான்'' என்பது இவர் அருளிய திவ்வியப் பிரபந்தமாகும்.

# கம்பரின் காவிய ஓவியம்

'முத்தமிழ்ச் செல்வர்' திரு. ரெ. இராமசாமி, கண்டனூர்.

**காவியமும் ஓவியமும் :**

காவியம் என்பது எது? கவிதைகளால் ஆன நூல்களை எல்லாம் காவியம் என்று சொல்ல இயலாது. தொன்று தொட்டு மக்களால் நன்கறியப்பட்ட கதையொன்றினை மையமாகக் கொண்டு பல வகைப்பட்ட பாக்களாலும் பாவினங்களாலும் உருவாக்கிய இலக்கியமே காவியம் என்பது. காவியம் என்பதில் கதை என்ற பொருளும், அதனின்று வெளியாகும் கலையுணர்ச்சி என்ற கதையை நிகழ்த்தும் எழில் நெறியும் ஒளிவிட்டு மிளிரவேண்டும். உதாரணமாக இராமாயணம் மகாபாரதம் சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி முதலிய நூல்கள் காவிய இனத்தைச் சேர்ந்தவையாகும். பெரிய உருவில் அமைந்த முறையில் இவைகளைப் பெருங்காவியம் என்பர். பெருங்காவியம் என்ன நலங்களுடன், என்ன வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பதைத் ''தண்டியலங்காரம்'' என்ற இலக்கண நூல் எடுத்து இயம்புகிறது.

அனைவரும் விரும்பத்தக்கதான, அழகு கொழிக்கும் தலைசிறந்த கலைகளுள் ஓவியம் ஒரு நிலையான கலையாகும். ஓவியன், எந்த உருவை அல்லது பொருள்களைத் தீட்ட வேண்டுமெனத் திட்டமிட்டானோ, அதன்படி, தன்னை மறந்த நிலையில், தான் அப்பொருளாக அல்லது உருவமாக மாறி, அதனை மிக அழகுறத் தீட்டினால் அது ஒரு முழுக் கலைத் தன்மையோடு நிலைபெற்று நிலவுகிறது. அத்தகு உயர் ஓவியம், காண்பார் கருத்தைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

அதுபோல் கருத்தாழம் மிக்க, கற்பனை நயம் கொழிக்கும், அழகிய சொற்களால் அமைக்கப்பட்டதே சொல்லோவியம் ஆகும். அது, வசனத்தைக் காட்டிலும் கவிதையாக அமையுங்கால், அதன் அமைப்பும் அழகும் ஒரு தனித் தன்மை உடையதாக ஆகி, அதனைப் பயில்வார் உள்ளத்தை அதில் ஈடுபடுத்திப் பாசமுறச் செய்யும். இவ்வாறு கவிதைகளாலான சொல்லோவியங்களின் ஆழ்ந்த கருத்துக்கள் வெளிப்படுமிடத்து, அவைகளைக் கருத்தோவியங்கள் என்கிறோம்.

காவியத்துக்கும் ஓவியத்துக்கும் இயற்கை எழிலே முதற்கண் வழி வகுத்துக் கொடுக்கின்றது. அருமையான அழகு மிளிரும் அருணோதயமும், அந்தி வேளையில் மந்தமாக வீசும் தென்றலும், இதயத்தை இன்புறுத்தும் குயிலின் இன்னிசையும், குளிர் பூஞ்சோலையில் கொழிக்கும் எழிலும், இவை போன்ற இயற்கைக் காட்சிகள் யாவும், எந்த ஒரு ஓவியனையும் அவைகளில் பந்தமடையச் செய்யும் பான்மையுடையன. இதற்கு எடுத்துக் காட்டாக, கம்பராமாயணத்தில் ஓர் இயற்கைக் காட்சியின் எழிலை, கவிச் சக்கரவர்த்தி கம்பர் எப்படி நமக்கு இனிதே காட்டுகிறார் என்பதை ஈண்டுக் காண்போம்.

**இயற்கையின் எழில் ஓவியம் :**

கோசல நாட்டு மருத நிலத்தை ஒரு கோமானாக ஆக்கி, அது பெருமையோடு கொலுவீற்றிருக்கும் அருமைக் கோலத்தை விருத்தக் கவி வடிவில் பொருத்தமுற எடுத்துக் காட்டி, நம் கருத்தைக் கவருகின்றார் மகா கவி கம்பர். அரசன் கொலுவில் அமருங்காலத்து, அவன் அகம் மகிழத் தக்க பல நிகழ்ச்சிகள் குறிப்பாக நாட்டியம், நாடகம் என்ற நற்கேளிக்கைகள் நடைபெறுவது உண்டு. அந்நிகழ்ச்சிக்கு, நாடக அரங்கம், நாட்டியப் பெண்கள், திரை, விளக்கு வீணை, மத்தளம், பாட்டு, கூத்து முதலியனவெல்லாம் வேண்டும் அல்லவா? ஆம் அத்தனையும் இயற்கையிலேயே எப்படி அமைந்திருக்கிறது என்பதைக் கம்பர் மிக அருமையாகக் கூறுகிறார்.

தண்டலை மயில்கள் ஆடத்
　　தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
　　குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
　　தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
　　மருதம் வீற்றிருக்கும் மாதோ!

அழகான காட்சி! அற்புதமான கற்பனை! இங்கு 'தண்டலை' என்னும் குளிர் பூஞ்சோலையே நாடக அரங்கம். சோலையில் ஒயிலாக ஆடும் மயில்களே வாலைக் குமரிகளாம் நடன மாதர்கள். அவைகளின் ஆட்டமே ஆனந்தக்கூத்து. தடாகத்தில் தலை நிமிர்ந்து நிற்கும் தாமரைக் கொடிகளே கொடிபோன்ற இடையுடைய இளம் பெண்கள். தீப்போல் சிவந்த செந்தாமரைப் பூக்களே, அக்கொடி இடையார் தம் கைகளில் உயர்த்திப் பிடித்துக் காட்டும் ஒளி விளக்குகள் கொண்டல்கள் என்னும் மேகங்களே மத்தளம். அம் மேகங்கள் ஒன்றோடொன்று உராயும்போது தோற்றுவிக்கும் உறுமல் ஓசையே அம்மக்கள் இசை. தடாகங்கள் 'அடுத்தது காட்டும் பளிங்கு போல்' அதனை அடுத்துள்ள பொருள்களை நிழலாகக் காட்டி நிற்கும். அதன் தெள்ளிய நீரில் சில சமயம் அலைகள் துள்ளி வரும்போது அந்நிழற் காட்சிகள் மறையுமல்லவா? அதன்படி தடாக அலைகள், அடுத்துள்ள சோலையாகிய அரங்கத்தில் ஆடும் மயில்களை, மறைத்தும் திறந்தும் காட்டும் காட்சி மாற்றத் திரைகளாகத் திகழ்கின்றன.

இவ்வளவுக்கும் மிக முக்கியமாக ஆதார சுருதி என்னும் இன்னிசை வேண்டுமே! ஆம், அதுவும் அச்சோலை மலர்களின் மதுவருந்திய வண்டுகள், தேன் போன்ற இனிய மகரயாழின் இசையை மகிழ்வோடு இசைக்கின்றன. இந்த அற்புத இயற்கை நாட்டியத்தைக் காண அவையோர் வேண்டும் தானே! அவர்களும் அங்கு உளர். அத் தடாகத்தில் உள்ள 'குவளை' என்னும் நீலோற்பல மலர்களே அவையோர்களாக அமைந்து; தம் நீல மலர்த்தழாம் கண்களைச் சாலத் திறந்து கொண்டு, கோலமாக ஆடும் கூத்தினைக் கூர்ந்து நோக்குகின்றனவாம். எனவே, மேகங்கள் மத்தளங் கொட்ட, வண்டுகள் யாழ் வாசிக்க, தாமரைக் கொடிகளாம் தையலார் சிவந்த தாமரை மலர்கள் என்னும் விளக்கினைக் காட்ட, மயில்கள் ஒயிலாக நாட்டியம் ஆட, அவைகளை அலைகளால் திரை, மறைத்தும் திறந்தும் காட்ட, அவையோரம் குவளைமலர்கள் கண் விழித்துக் களிப்புடன் கண்டு நிற்க, மருதம் என்னும் மன்னன், மாட்சிமையோடு கொலுவீற்றிருக்கும் காட்சியை அப்படியே மிக அழகான ஓர் ஓவியமாக நம் கண்முன்னே காட்டுகின்றார் கம்பநாடர்.

கம்பர் பெருமான் தன் கற்பனைத் திறத்தின் அற்புத உத்தியால் பொற்புடை இயற்கைப் பொலிவினை, பெருமை மிக்க நடனக் காட்சியாக உருவகித்துள்ள அருமையான கருத்தோவியத்தைக் கண்டு களித்தோம். இனி, அவர்தம் கவித்துவ வழி கவினுறச்சமைத்துள்ள, உண்மையான நடனம் ஆடப் பெறுகின்ற நாட்டிய சாலையைக் காண்போம்.

**நாட்டிய அரங்கின் நல்லோவியம்:**

மிதிலையர் கோமான் நடத்தவிருக்கும் மேதகு வேள்வியாம் விற்போட்டியைக் காண்பதற்காக இராமனும் இலக்குவனும் விசுவாமித்திரரோடு மிதிலை நகருக்குச் சென்றார்கள். செல்லுங்கால் வழியில் சில பல காட்சிகளைக் கண்டு சிந்தை மகிழ்ந்தார்கள். அவற்றுள் ஒன்றான, அவர்கள் கண்டு மகிழ்ந்த, நாட்டிய மேடையையே இப்பொழுது நாம் காண விருக்கிறோம்.

நெய்திரள் நரம்பில் தந்த
　　மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகர வீணை
　　தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனம் செல்லக்,
　　கண்வழி மனமும் செல்ல,
ஐயநுண் இடையார் ஆடும்
　　ஆடக அரங்கு கண்டார்

ஆகா! அகங்கவரும் அழகிய காட்சி அல்லவா? ஆம், இனிமையாகப் பாடிக் கொண்டே எழிலான அபிநயத்துடன் ஆடுங் காலத்து இணைந்து இயங்க வேண்டியவைகள், ஒருமித்து இயங்கி, இனிமை பயக்கின்ற அருமையை, அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்—பெருமை மிக்க பெருங்கவிஞர். "குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள், மழலைச் சொல் கேளாதவர்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. அந்தக் குழலிசையையும் யாழிசையையும் மிஞ்சுகின்ற இனிமை பயக்கும் குழவிகளின் மழலைச் சொற்களைப் போன்ற இனிய குழலிசை கூடிய பாடல் என்பதைக் குறிக்கவே, "மழலையின் இயன்ற பாடல்" என அழகுறக் கூறினார்.

யாழின் திரிபாகிய வீணையின் இன்னிசையோடும் மத்தளமாகிய மிருதங்கத்தின் தாள இசையோடும், ஒத்திணைந்து இசைக்கும் இனிய வாய்ப்பாட்டின் கருத்துக்குப் பொருத்தமாக, கைகாட்டும் அபிநய முத்திரையைக் கவனித்துக் கண் பேச வேண்டும். அதேசமயம், அப்பாட்டின் உட்பொருளை உணர்ந்து, கண்ணிலும், கை முத்திரையிலும், இன்னும் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றிலும், உடனுக்குடன் பாவ உணர்ச்சியை உள்ளமானது தெள்ளிதில் பாய்ச்ச வேண்டும். இத்தகு இயல்புடன் ஆடும் எழிலார் நடனத்தை ஆடக் கூடியவர்கள், எத்தகு உடம்பினை உடையராய் இருத்தல் வேண்டும் என்பதனையும் இறுதியாக அறுதியிட்டுக்கூறுகிறார். ஆம், பருத்த உடலுடையார் நிருத்தத்திற்குப் பொருத்தமுடையார் அல்லர் என்பதைச் சொல்லுமாப் போல, "ஐயநுண் இடையார் ஆடும்" என்று அழகாகக் கூறியுள்ளார். ஆம். நடன தத்துவத்தின் நல்லதொரு விளக்கமான கருத்தோவியத்தைக் கம்பரின் காவிய வழி கண்டு மகிழ்ந்தோம்.

இனி, அடுத்து, ''அழகுக்கு அழகு செய்த'' அழகுக்காட்சி ஒன்று வருகிறது.

### அழகுக்கு அழகு செய்த அருங்காட்சி:

சீதையின் திருமணத்துக்குப் பணயப் பொருளாக இருந்த, ''சிவதனுசு'' என்னும் வில்லை, விறல் வீரன் இராமன் வெகு விரைவில் முறித்த வெற்றியின் விளைவாக, அவனுக்கும் ஆரணங்காம் சீதைக்கும் திருமணம் நடைபெறவிருக்கிறது. சீதையைத் திருமண மண்டபத்துக்கு அழைத்து வரும் முன்பாக, அவளது அந்தப்புரப் பெண்கள் மணப் பெண்ணான அவளுக்கு, அணிமணிகளை அணிவித்து அழகு செய்கின்றார்கள். அது எவ்வியல்பு உடைத்து என்பதை இதோ கேளுங்கள்.

அமிழ்இமைத் துணைகள் கண்ணுக்கு
அணியென அமைக்கு மாபோல்,
உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை
உருவினை மறைப்பது ஓரார்,
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
அழகினுக்கு அழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞாலம்
ஏழைமை உடைத்து மாதோ

சாதாரணமாக, கண்களை இரு இமைகளும் இமைத்து மூடுங்கால் அக்கண்ணின் வண்ணம் சற்று மறையத்தான் செய்கிறது. மறுபடி இமைகளைத் திறக்கும்போது, அவ்வண்ணம் மீண்டும் தோன்றிவிடுகிறது. இப்படிக் கண்ணை மூடிமறைக்கும் இமைகளைப் போல் ஒளிவீசும் பொன்னாபரணங்களை மின்னரசியாம் சீதையின் மேனியில் பூட்டி, அவளது இயற்கை அழகையே காண முடியாதவாறு மறைத்து விட்டார்கள். ஆம், கொள்ளை அழகு செய்வதாக எண்ணி, உள்ள அழகையே ஒளித்து விட்டார்கள்.

அடடா! இது எப்படி இருக்கிறதென்றால், அதி சுவையுடைய அமிழ்த்தை இன்னும் அதிகச் சுவையூட்ட முயல்பவரின் வியர்த்தச் செயல் போல விளங்குகிறதல்லவா? ஆமாம், அது அவர்கள் தம் அறியாமையையே அறிவுறுத்துகின்றது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சுதானே! பேரெழில்வாய்ந்த கோதை நல்லாள் சீதைக்குக் குறைந்த அழகுடைய அணிகளால் இப்பேதைப் பெண்கள் அழகு செய்ததையே, இரத்தினச் சுருக்கமாக, ''அழகினுக்கு அழகு செய்தார்'' என்றார் கம்பர் பெருந்தகை. அழகினுக்கு அழகாம் ஆரணங்கான சீதைக்கு அழகு செய்த கோலம் எத்தன்மை உடைத்து என்பதைக் கம்பர் தம் கருத்தோவிய வழி கண்டு சுவைத்தோம். இறுதியாக, அவரது உவமை நயம் உணர்த்தும் ஓவியம் ஒன்றைக் காண்போம்.

### கம்பரின் கற்பனை ஓவியம்:

பஞ்சின் மெல்லடிப் பாவையாம் சீதையும், அஞ்சன வண்ணன் இராமனும், ''பஞ்சவடி'' என்னும் பைம்பூஞ் சோலையை நாடிச் செல்லுங்கால், அதனருகே ஓடிக்கொண்டிருந்த கோதாவரி நதியைக் கண்டார்கள். அவர்கள் இருவரும் அந்நதியின் இருமருங்கிலும், சார்ந்திருந்த இயற்கை எழில்களை எல்லாம் ஆழ்ந்து அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். அதுபோது, அந்த ஆற்றின் அருகே உலவிய அன்னங்களையும் யானையையும் கண்ட அவ்வீருவரும், ஒருவரின் நடையை ஒருவர் நோக்கியவாறு மருமமாய்ச் சிரித்த மகிமையை மாண்புடன் கூறுகிறார் மகாகவி. இக் கருத்தோவியம் அமைந்த கம்பர் சித்திரத்தை இதோ காணுங்கள்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்,
மாதவள் தானும் ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.

ஆகா! அற்புதக் கருத்தமைந்த கற்பனை ஓவியம்! இதில், நதியில் அருகே சதிபதி இருவரும் இவ்வாறு அதிமகிழ்வோடு புன்னகை புரிந்ததின் நன்நயத்தை நம் மதிக்கண்ணால் காணுங்கால், அது நம்மையும் அம்மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

ஆற்றங்கரை அருகே இன்பமாக நடமாடித் திரிந்த மென்னடை அன்னப் பேடுகள், என்னவோ அஞ்சி அயலே அகன்று போயின. அதைக்கண்ட இராமன் ''ஏன் இவைகள் இப்படி இடைந்து செல்கின்றன?'' என எண்ணினான். அதே சமயம், தன்னுடன் வந்த நாயகியின் நடையையுங் கண்டான். உடனே, 'ஆகா! இச் செஞ்சீறடி வஞ்சியின் நடையைக் கண்டு, அடைந்த நாணத்தினால்தான் அவ்வன்னங்கள் அஞ்சி அகன்று அப்பால் போயின போலும்!'' எனச் சிந்தை தெளிந்தான். தெளிந்த நிலையில் தன் மனைவியின் உயர்வை, உன்னி உவந்து, புன்னகை பூத்தான். இக் கருத்தையே ஓர் அழகோவியமாக, ''சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்' என்றார்.

இராமன் கண்டு இன்புற்ற நிலை இவ்வாறிருக்க, அதே சமயம், அந்நதியில், அழகிய யானை ஒன்று வந்து நீர் உண்டு மீண்டு சென்றது. அவ்வாறு செல்லுங்கால் அதன் கம்பீரமான பெருமித நடையைக் கண்ட பெண்ணின் நல்லாள் சீதை. உடனே தன் அருகே வருகின்ற நாயகனின் நடையை

நயந்து நோக்கி வியந்தவாறே, அவர் தம் நடை நயம் தெளிந்தாள். ''ஆம், இருகை வீசிப் பெருமிதத்தோடு வருகின்ற தன் நாயகனின் பீடுநடைக்கு ஈடுசெய்ய இய லாமல்தான், அந்த யானை எதிர் நடக்க அருகணுகாது ஒருகை வீசி ஒதுங்கிப் போனது. ஆகா! என் நாயகனின் கம்பீர நடையின் உயர்வுதான் என்னே!'' என் பதை உணர்ந்து உவந்தவாறு தன் உள் ளத்தின் உள்ளேயே, ஓர் இளநகை பூத்துக் கொண்டாள். இக்கருத்தைக் குறிக்கவே, ''போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்'' என்றார் கவிக் கோமான் கம்பநாடர். இயல்பாக ஆண் களின் நடைக்கு யானை நடையையும், பெண்களின் நடைக்கு அன்ன நடையை யும் உவமையாக உரைப்பது புலவர்கள் மரபு என்றாலும் இங்கே, அவைகளின் நடையையும் மிஞ்சி விடுகிறார்கள், கம்ப ரின் காவியநாயகனும் நாயகியும் என்றால், அது கம்பர்தம் உவமை நயங் கொண்ட கற்பனைக் கருத்தோவியத்தின் சிறப்புத் தான் அல்லவா?

சொற்சித்திரமாம் கம்பரின் காவியத் துள்ளே இதுபோன்ற பற்பல அற்புதக் கருத்தோவியங்களைக் கண்டு களிக்கலாம். அன்பர்கள் சமயம் கிடைக்கும் போதெல் லாம் தமிழ்ப் பேரிலக்கியமாம் கம்பரின் மகா காவியத்தைக் கற்றுத் தேர்ந்து, அதில் திளைத்துக் களி கொள்ளுங்கள்.

# திருமழிசையாழ்வார்

சென்னைக்கு அருகே பூந்தண்மலிக்கு அணித்தேயுள்ள திருமழிசை (மகிசாரக்ஷேத் திரம்) என்னும் திவ்விய தேசத்தில், தைம்மாதத்தில் மகநட்சத்திரத்தில், பார்க்கவ முனிவர்க்குப் புதல்வராய்த் திருவாழியின் கூறாகத் திருவதாரம் செய்தருளினார். இவர் அவதரித்தபோது உறுப்பொன்றும் காணப் பெறாமல் பிண்டமாய் இருந்ததனால், இவரைத் தந்தையாரும் தாயாரும் ஒரு பிரம்புப்புதரில் எறிந்துவிட்டுப் போயினர். திருவாளன் என்னும் ஒரு வேளாளன், அக்குழந்தையைக் கண்டெடுத்து, தன் மனைவி பங்கயச் செல்வி யின் பாற் கொடுத்து, அன்புடன் வளர்த்து வந்தான். ஆனால் அக்குழந்தை பால் பருகா மலும், பசி தாகம் கொள்ளாமலும், ''உண்ணும்சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்'' என்றபடி, பரம புருஷனையே அனுபவித்து வளர்ந்து வந்தது.

திருமழிசையில் தோன்றியதனால் இவருக்குத் திருமழிசையாழ்வார் எனப் பெயர் வழங்குகின்றது. உற்ற வயதடைந்ததும் ''சாக்கியம் கற்றோம் சமண் கற்றோம் சங்கரனார் ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்'' என்றபடி, இவர் உலோகாயதம் பௌத்தம் சமணம் மாயாவாதம் முதலிய பல சமயங்களையும் ஆராய்ந்தார். பின்னர்ச் சைவ சமயம் சார்ந்து ''சிவ வாக்கியர்'' என்னும் பெயர்பூண்டு சில காலம் சிவபிரானை வழிபட்டு வந்தார். இவர் பின்னர்ப் பேயாழ்வார் பேரருளால் பரம வைஷ்ணவராய்த் திருந்தினார். அதுமுதல் திருமகள் கொழுநனான நாராயணரையே தியானம் செய்து வந்தார். இவர்தம் பக்தியின் சிறப்பினால், இவருக்குப் 'பக்திசாரர்' என்றும் ஒரு பெயர் வழங்கும். திருச்சந்தவிருத்தம், நான்முகன்திருவந்தாதி என்னும் இரு திவ்வியப் பிரபந்தங்கள், இவரால் அருளிச் செய்யப்பெற்றன. இவர் திருவெஃகாவிலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் இடத்திலும், திருக்குடந்தையில் உள்ள ஆராவமுதப்பெருமாளிடத்திலும், மிகவும் ஈடுபாடு கொண்டவராவர். கணிகண்ணர் என்பவர், இவருக்கு மாணவராக இருந்தார்.

—ஆசிரியர்

# தெய்வ இசைப் பனுவல்கள்

'' பேராசிரியர் ''
திரு. க. வெள்ளைவாரணர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

இயற்கை வனப்பும் தெய்வ வனப்புமாகிய இருவகை வனப்புகளே, இசைப் பாடலுக்குரிய சிறப்புடைப் பொருள்களெனப் பண்டைத் தமிழாசிரியர் கருதினர். இக்கருத்தினாலேயே இசைப் பாடல்கள் யாவும் உலகியற்பொருள்களின் இயற்கையழகினையும், அவற்றின் உடனாய் விளங்கும் தெய்வ அழகினையும், பொருளாகக் கொண்டு பாடப் பெறுவனவாயின.

## தொன்று ஒழுகும் மரபு :

இசையில் வல்ல பாணர் கலை முதலிய செல்வர், தம் இசைத்திறத்தை அவையின் கண் புலப்படுத்தும் பொழுதெல்லாம் இசைப்பாடலுக்குச் சிறப்புடைப் பொருளாய் விளங்கும் முழுமுதற் பொருளைப் போற்றும் தெய்வப் பாடலையே முதன்மையாகப் பாடுவது வழக்கம். பண்டை நாளில் வாழ்ந்த பாணர் முதலியோர், இம் முறையினைத் தொன்றுதொட்டு வரும் இசைமரபாகக் கொண்டு போற்றுதலைத் தமது முதற் கடமையாகக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இச்செய்தியினைப் பத்துப் பாட்டுள் ஒன்றாகிய மலைபடுகடாத்துள்,

''மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்பும் திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த இன்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு விழாஅது
அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி''— (534-539)

எனவரும் அடிகளிற் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் தெளிவாக விளக்கியுள்ளமை காணலாம்.

## தெய்வப் பாடல் :

'வாரம் பாடுதல்' என்பது, இசைப் பாடலாற் கடவுளைப் போற்றி வழிபடுதல் என்ற பொருளில் கடைச்சங்க காலத்தே வழங்கி வந்ததாகத் தெரிகிறது. சிலப்பதிகார அரங்கேற்று காதையிலே,

''தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிரும்
சீரியல் பொலிய நீரல நீங்க
வாரம் இரண்டும் வரிசையிற்பாட''

எனவரும் தொடர்க்கு ''ஆடிமுதிர்ந்தார் ஆகிய மகளிர் நன்மையுண்டாகவும் தீமை நீங்கவும் வேண்டித் தெய்வப் பாடல்பாட'' என அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறியுள்ளார்கள். எனவே, இத்தொடரில் வந்த 'வாரம்' என்ற சொல் 'தெய்வப்பாடல்' என்ற பொருளில், இளங்கோவடிகளால் ஆளப்பெற்றதென்பது நன்கு பெறப்படும்.

## தேவபாணி :

அன்றியும் சிலப்பதிகாரத்திற் கடலாடு காதையில், திருமாலைப் பாடும் தேவபாணியும், இறைவனைப் போற்றுந் தேவபாணியும், வருணப்பூதர் நால்வரையும் பரவும் நால்வகைத் தேவபாணியும், ஞாயிறு திங்கள் என்னும் தெய்வத்தைப் பரவும் தேவபாணியும், கூத்தின்கண் பாடுதற்குரிய தெய்வ இசைப்பாடல்களாகக் கொள்ளப்பட்டன என இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். பாணி என்பது பண்ணோடு கூடிய இசைப்பாட்டு. தெய்வத்தைப் பண்பொருந்தப் பாடிய இசைப் பாடல் தேவபாணி எனப் பெயர் பெறுவதாயிற்று.

## பரிபாடல் :

சங்கத்தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடல், தமிழகத்தில் பண்டை நாளில் இசையுடன் பாடப்பெற்ற தெய்வப் பனுவலாகும். சங்கச் சான்றோர்களால் இயற்றப் பெற்ற எழுபதுபாடல்களைக்கொண்ட இத்தொகை நூலில், இருபத்திரண்டு பாடல்களே இப்பொழுது முழுமையாகக் கிடைத்துள்ளன. திருமால், செவ்வேள், காடுகிழாளாகிய கொற்றவை ஆகிய தெய்வங்களையும், மதுரை நகரத்தையும் வையை யாற்றினையும் போற்றிப் பரவிய இசைநலம் வாய்ந்த பரிபாடல் என்னும்

பாக்களின் தொகுப்பாக அமைந்ததே இத் தொகை நூலாகும். இதன்கண் ஒவ்வொரு பாடலின் கீழும், அப்பாடலின்நுவல் பொருளாகிய கடவுள் வாழ்த்து முதலிய பொருட் பகுதியும், அப்பாடலைப் பாடிய புலவர் பெயரும், அப்பாடற்கு இசையமைத்த இசையாசிரியர் பெயரும், அப்பாடலுக்குரியபண்ணின்பெயரும்,முறையே குறிக்கப்பெற்றுள்ளமை காணலாம். பரிபாடல் என்னும் செய்யுள், நால்வகைப் பாக்களுக்குரிய பலவகை அடிகளையும் ஏற்று, இசைநலம் விளங்கப் பாடுதற் கேற்றவாறு இயற்றப் பெறுவதாகும். பரித்தல்-சுமத்தல், பண்சுமந்த பாடலாதலின் பரிபாடல் என்னும் பெயருடையதாயிற்று. 'பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும் பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்' எனவரும் திருவாசகத் தொடர், இங்ஙனம் இன்னிசையால் தெய்வத்தைப் பரவிப் போற்றும் முறையில் இயற்றப் பெற்ற தெய்வப் பனுவலைக் குறித்தது எனக் கருதுதல் பெரிதும் பொருத்தமுடையதாகும்.

கடைச்சங்க காலத்தையடுத்துத் தோன்றிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் 'திங்களைப் போற்றுதும்', 'ஞாயிறு போற்றுதும்' 'மாமழை போற்றுதும்', 'பூம்புகார் போற்றுதும்' எனவரும் மங்கல வாழ்த்துப் பகுதியும், கானல் வரியில் காவிரியைப் போற்றிப் பரவும் முறையில் அமைந்த வரிப்பாடல்களும், வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என்னும் பகுதிகளில் கொற்றவை, திருமால் முருகன் ஆகிய தெய்வங்களைப் பரவும் முறையில் அமைந்த வரிப்பாடல்களும், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறாண்டுகளுக்கு முன், தமிழகத்தில் இன்னிசையுடன் பாடப்பெற்று வந்த தெய்வ இசைப் பனுவல்களாகும்.

## தேவாரம் :

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சிவபெருமானது திருவருள் பெற்ற செம்புலச் செல்வியாராகிய காரைக்காலம்மையார் திருவாய் மலர்ந்தருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், முறையே நைவளம் (நட்ட பாடை) என்ற பண்ணிலும், இந்தளம் என்ற பண்ணிலும் பாடப்பெற்ற இன்னிசைத் திருப்பதிகங்களாகும்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இறைவன் திருவருள் பெற்ற செம்புலச் செல்வராகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், இவ்விருவர்க்கும் பின்வந்த நம்பியாரூரர் ஆகிய மூவரும் சிவபெருமானது பொருள்சேர் புகழினை இன்சொற்படுத்தியும், இன்னிசைப்படுத்தியும் பாடியருளிய செந்தமிழ்த் தெய்வப் பனுவல்களே, தேவாரம் என்ற பெயராற் போற்றிப் பயிலப் பெறுகின்றன. இத் தேவாரத் திருப்பதிகங்களும் இவற்றின் பண்ணமைதியும் இடைக்காலத்திற் போற்றுவாரின்றி அருகி மறையும் நிலையில் திருநாரையூரிற் பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளின் துணை கொண்டு, தேவாரத் திருமுறைகளைத் தில்லைப் பெருங்கோயிலில் தேடிக் கண்டு தொகுத்துதவியவன் இராசராச அபய குலசேகரன் எனப் போற்றப்பெறும் சோழ மன்னனாவன். திருமுறை கண்ட சோழனாகிய இப்பெருந்தகை, திருவெருக்கத்தம் புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் தோன்றிய பாடினியாரைக் கொண்டு, தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பழைய முறையில் பண்வகுத்தமைத்தனன் எனத் திருமுறை கண்ட புராணம் கூறும்.

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் நன்னோக்கத்துடன் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இப் பெருமக்கள், மூவரும் அருளிய திருப்பதிகங்கள் இறைவனை முன்னிலை, படர்க்கை என்னும் இரண்டிடங்களிலும் போற்றிப் பரவுவனவாதலின், தேவாரம் என்ற பெயரால் வழங்கப் பெறுவனவாயின. இவர்கள் அருளிய திருப்பதிகங்கள், இவர்கள் பாடும் பொழுதே இன்னிசையுடன் பாடப்பெற்றன என்பது, இவர்களது வரலாற்றால் இனிது புலனாகும். வாரம் என்ற சொல்லுக்கு இசையியக்கம் நான்கினுள் ஒன்று என்னும் பொதுப் பொருளும், தெய்வப் பாடல் என்ற சிறப்புப் பொருளும் உரியன வாதலின், அப்பொதுமையினை நீக்கித் தெய்வப் பாடல் என்ற சிறப்புப் பொருளையே, அச்சொல் தருதல் வேண்டிப் பிற்காலத்தார் அதனைத் தேவாரம் என்ற சிறப்புடைய அடைமொழியுடன் சேர்த்து வழங்குவாராயினர். இன்னிசையால் இறைவனைப் பாடிப் போற்றுதலையே பண்டைத் தமிழர் சிறப்புடைக் கடவுள் வழிபாடாகக் கைக்கொண்டொழுகினர். அதனால் தெய்வ இசைப்பாட்டினைக் குறித்த தேவாரம் என்னுஞ் சொல், இறைவனை உளமுருகிப் போற்றும் வழிபாட்டினையும் குறிப்பதாயிற்று.

திருஞானசம்பந்தர் 1,600 பதிகங்களும், திருநாவுக்கரசர் 4,900 பதிகங்களும், சுந்தரர் 3,800 பதிகங்களும் பாடியருளினார்களெனவும், அம்மூவரும் அருளிச் செய்த திருப்பதிகங்களின் தொகை 10300 எனவும், அவற்றின் பாடற்றொகை 103000 எனவும் திருமுறை கண்ட புராணத்தால் இனிது புலனாகும்.

தேவார ஆசிரியர்கள் மூவரும்பாடியன வாக மேற்குறித்த எல்லாத் திருப்பதிகங்களும்பிற்காலத்தார்க்குக் கிடைக்கவில்லை. செல்லரித்துச் சிதைந்தமையால் மறைந்தன போக, எஞ்சிய பதிகங்களையே நம்பியாண்டார் நம்பி, சோழமன்னன் ஆதரவு கொண்டு தில்லையில் தேடியெடுத்து முன் போல் முறைப்படுத்தி, ஏழு தி[illegible]ற

களாகத் தொகுத்தார் எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது.

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் 384-ம் முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் 310-ம் நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகளாகவும், சுந்தரர் தேவாரப் பதிகங்கள் 100-ம் ஏழாந்திருமுறையாகவும், நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பட்டன.

இங்ஙனம் வகுக்கப்பட்ட ஏழு திருமுறைகளும் பண்ணாகிய இசைமுறை பற்றியும், பாவாகிய இயல்முறை கருதியும் முறைப்படுத்தப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது இவற்றிற் காணப்படும் பண்கள் எல்லாவற்றிற்கும் கட்டளையாகிய யாப்பியல்வகை கூறும் திருமுறைகண்ட புராணப்பகுதியால் இனிது புலனாம். சேக்கிழார்நாயனார்க்கு நெடுங்காலத்திற்கு முன்னரே, மூவர்களின் தேவாரத் திருப்பதிகங்களும் பண்முறை பற்றிக் கட்டளைகள் வகுக்கப் பெற்று முறைப்படுத்தப் பெற்றிருந்தன என்பது பெரியபுராணத்தில் மூவர் வரலாறு கூறும் இடங்களில் தேவாரத் திருப்பதிகங்கள் சில வற்றிற்குப் பண்ணமைதியும் (தடுத்தாட்கொண்ட புராணம் செய். 75), கட்டளைக் கூறுபாடும் (திருஞான சம்பந்தர் புராணம் செய்-107) குறிக்கப் பெற்றிருத்தலால் நன்கு விளங்கும். இப்பொழுது வழங்கப் பெற்றுவரும் மூவர் தேவாரப் பதிப்புக்களில், 796-திருப்பதிகங்கள் அடங்கியுள்ளன.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடநாட்டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்பார் தமிழ்நாட்டிற்கு வந்து இங்கு வழங்கிய தேவாரப்பண்களை நன்குணர்ந்து அப்பண்கள் சிலவற்றின்இலக்கணங்களைத் தாம் இயற்றிய 'சங்கீத ரத்தினாகரம்' என்னும் வடமொழி இசை நூலில் பொன்னே போற் போற்றி வைத்துள்ளார்.

## திவ்வியப் பிரபந்தம் :

தேவார ஆசிரியர்கள் காலத்தையொட்டி வாழ்ந்த திருவருட் புலமைச் செல்வர்கள், திருமாலடியார்களாகிய ஆழ்வார்கள் ஆவர். ஆழ்வார்கள் அருளிச் செயலாகிய திவ்வியப் பிரபந்தத்தில் பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் முதலாழ்வார் மூவரும் அருளிய திருப்பாடல்கள் இயற்பா வகையைச் சார்ந்தன. பெரியாழ்வார் அருளிய திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்பனவும், ஆண்டாள் அருளிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பனவும், குலசேகரப் பெருமாள் அருளிய பெருமாள் திருமொழியும், திருமழிசைப்பிரான் அருளிய திருச்சந்த விருத்தமும், தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலையும் திருப்பள்ளியெழுச்சியும், திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதி பிரான் என்னுந் திருப்பதிகமும், திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்பனவும் ; நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழித் திருப்பதிகங்களும் பண்பொருந்தப் பாடுவதற்குரிய இசைத் தமிழிலக்கியங்களாக அமைந்துள்ளன. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பதிகங்கட்குப் பழந்தமிழ்ப் பண்களும் தாளங்களும் குறிக்கப்பெற்றுள்ளன. ஆயினும் அத்திருப்பதிகங்களைப் பண்ணுடன் பாடும் மரபு இடைக்காலத்தில் மறைந்து போயிற்று. எனினும் இக்காலத்தில் பண்ணுடன் பாடப்பெற்று வரும் தேவாரத் திருப்பதிகங்களின் யாப்பமைதியினையும் இசையமைதியினையும் அடியொற்றி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் திருப்பாடல்களையும் பழைய மரபின்படி பண்பொருந்தப் பாடும் முறையினை, இயலிசைப்புலவர் துணைகொண்டு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருதல் இசைத்தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்புடையதாகும்.

திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழிப் பதிகங்கள், மூவர் தேவாரத் திருப்பதிகங்களையொத்த இயலிசையமைப்புடையனவே. எடுத்துக்காட்டாக ஒரு சில பதிக அமைப்பினை இங்குக் குறிப்பிடலாம்.

திருமங்கையாழ்வார் அருளிய திருக்குறுந்தாண்டகம் என்பது, திருநாவுக்கரசர் அருளிய திருநேரிசைப்பதிகங்களையொத்த இயலிசை அமைப்பினையுடையதாகும். திருநெடுந்தாண்டகம் என்பது தாண்டக வேந்தராகிய திருநாவுக்கரசர் பாடியருளிய திருத்தாண்டகப் பதிகங்களையொத்த இயலிசை அமைப்பினைப் பெற்றதாகும். இசைநலம் பொருந்திய மூல இலக்கியங்களாகப் பல இன்னிசைத்திருப்பதிகங்களை அருளியவர் திருஞானசம்பந்தப் பிள்ளையாராவர்.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன் ;
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்று
எமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள்; ஆவடு துறையானே

என நாலடிமேல் வைப்பாகத் திருஞான சம்பந்தப் பிள்ளையார் அருளிய காந்தார பஞ்சமப் பதிகத்தின் இயலமைப்பினையும் இசையமைப்பினையும் பின்பற்றியமைந்தது.

வண்டுணும் நறுமலர்இண்டை கட்டிப்
பண்டைநம் வினைகெட வென்றுஅடிமேல்
தொண்டரும் அமரரும் பணியநின்றங்கு
அண்டமோடு அகலிடம் அளந்தவனே
ஆண்டாயுனைக் காண்பதொ ரருளெனக்
கருளுதியேல்
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர்
மேயவனே.

எனத் திருமங்கையாழ்வார் பாடியருளிய பெரிய திருமொழித் திருப்பதிகமாகும். இதனை '[illegible]லடிமேல் வைப்பு' என்ற தலைப்பிற் பதிப்பித்தலும், மேற்குறித்த காந்தார பஞ்சமப்பண் முறையிற் பாடுதலும் இயலிசையறிஞர் கடனாகும். இவ்வாறே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலுள்ள திருப்பதிகங்களிற் பெரும்பாலானவை, தேவாரத் திருப்பதிகங்களை ஒத்துப் பாடுதற்கேற்ற இயலிசையமைப்புடைய தெய்வ இசைத்தமிழ் இலக்கியங்களாகத் திகழ்கின்றமை காணலாம்.

சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவராகிய மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்துள் அமைந்த திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பூவல்லி, திருக்கோத்தும்பி, திருப்பள்ளியெழுச்சி முதலிய என இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் உரிய தெய்வ அருட்பனுவல் ளயாகும். சேந்தனார் முதலிய அருளாசிரியர் ஒன்பதின்மராற் பாடியருளப் பெற்ற திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய ஒன்பதாந் திருமுறையிலுள்ள திருப்பதிகங்கள், தேவாரத் திருப்பதிகங்களைப் போன்று பண் பொருந்தப்பாடிப் போற்றுதற்குரிய தெய்வப் பனுவல்களாகும்.

பதினோராந் திருமுறையில் திருவெண்காட்டடிகள் பாடியருளிய கோயில் நான் மணிமாலையிலுள்ள சந்தச் செய்யுட்கள், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிற் றோன்றி முருகப்பெருமான் திருவருளை இன்னிசைத் தமிழாற் பரவிப் போற்றிய அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடல்களின் சந்தங்களுக்கு மூல இலக்கியமாகத் திகழ்கின்றன.

## பிற்கால பக்திப் பாடல்கள் :

பக்தி இயக்க காலத்தில் பெருகி வளர்ந்த பக்திப் பாடல்கள், பின்னர்வந்த காலங்களிலும் வற்றாது உயிராறாய் ஓடிக் கொண்டுள்ளன. பட்டினத்தார், கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டில் தோன்றிக் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்னும் சிற்றிலக்கியங்களைப் பாடினார்.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய அருணகிரிநாதர் பாடிய பாடல்கள், திருப்புகழ் எனத் தொகுக்கப் பட்டுள்ளன. சந்த இனிமை மிகுந்த இவர் பாடல்களில், வடசொற் கலப்பு மிகுந்துளது திருவகுப்பு, கந்தரனுபூதி, கந்தரலங்காரம் கந்தரந்தாதி, வேல்விருத்தம் ஆகிய நூல்களையும் இவர் பாடினார்.


தாயுமானவர், மெய்ப்பொருட் சிந்தனையும் பக்தியும் கலந்து பாடியபெரும் புலவராவார். இவர் பாடிய கண்ணிகள் எளிமையும் இனிமையும் உடையவை. இல்லறமேற்றுப் பின் துறவு மேற்கொண்டார். அரச பதவியில் சிலகாலம் இருந்து பின் துறவுபூண்டாரென்பர். இவர் சமரச சன் மார்க்கத்தை வலியுறுத்திப் பாடியுள்ளார்.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்க அடிகளார் மிக எளிய இனிய கவிதைகள் பாடினார். அவை திருவருட்பா எனும் பெயரால் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள. இவரது பாடலை ஏற்றுக்கொள்ளாமல் அவற்றை மருட்பா என்றுபோராடியோரும் உளர். நாயக நாயகி பாவத்திலும், கண்ணி, கும்மி, கீர்த்தனை முதலிய எளிய வடிவங்களிலும் எளிய சொற்களில் பாடல் புனைந்தார். சீவகாருண்யம். சோதி வழிபாடு முதலியவை இவரது முக்கிய குறிக்கோள்களாகும். மனுமுறை கண்டவாசகம், சீவகாருணிய ஒழுக்கம் ஆகிய உரைநடை நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. சமரச சன்மார்க்க நெறியைப் பெரிதும் வற்புறுத்திப் பாடினார்.


பாரதியாரின் பக்திப் பாடல்கள் பக்தி இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்கவையாகும். கண்ணனைப் பல்வேறு கோணங்களில் கண்டு அவர் பாடும் பாடல்களும், சக்தி, முருகன், விநாயகர் ஆகிய கடவுளரைப் பாடும் பாடல்களும், அவரதுபக்தியுணர்வைக் காட்டும். இவரும் சமரச நெறியை வலியுறுத்துகிறார். வேதாந்த நெறி நின்று சமயக் கருத்துக்களையும் விளக்குகிறார். இவரது குயிற்பாட்டு வேதாந்த உட்பொருளுடன் அமைந்ததாகும்.


இசுலாமிய, கிறித்துவ சமயத்தைச் சார்ந்த பக்திப் பாடல்கள், பின்னர்த் தோன்றித் தமிழைப் பக்திமொழி எனப் போற்றுமளவுக்கு உயர்த்தின.





வட ஆற்காடு மாவட்டம், இரத்தினகிரிக்கு அருகில் கீழ்மின்னல் கிராமத்தில், தவத்திரு பாலமுருகன்அடிமை சுவாமிகளால் கட்டித்தரப்பட்ட பள்ளிக்கூடத்தை, அறநிலைய அமைச்சர் **மாண்புமிகு இராம. வீரப்பன்** அவர்கள் திறந்து வைத்தல். திரு. ஏ. கே. அரங்கநாதன், (முன்னாள் எம்.எல்.ஏ.), திரு. ஏ. எம். சேதுராமன், எம்.எல்.ஏ., ஆர்க்காடு ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. தட்சிணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





திருவுத்தரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயிலில் நிறுவப்பெற்றிருக்கும் சேதுபதி சோபன மண்டபத்தில், **மன்னர் இராமநாத சேதுபதி** அவர்களின் திருவுருவச் சிலையை, அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் **மாண்புமிகு இராம. வீரப்பன்** அவர்கள் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்கள். வேளாண்மைத்துறை அமைச்சர் **மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**, எம். ஏ., அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். இராமநாதபுரம் சமஸ்தானத்துத் திருக்கோயில்களின் பரம்பரை அறங்காவலர் திருமதி. டி. இந்திராதேவி, பி. ஏ., திரு. பொ. அன்பழகன், எம். பி., திரு. வி. சத்தியமூர்த்தி, பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., (கடலாடி), திரு. டி. இராமசாமி, எம்.எல்.ஏ., (இராமநாதபுரம்), முன்னாள் எம்.பி., இராசகுமார் திரு. காசிநாததுரை, இராமநாதபுரம் சமஸ்தானத்துத் திவான் திரு. டி. சோமசுந்தரம், பி.ஏ. திரு. ஜி. பெருமாள் பிள்ளை ஆகிய பெருமக்கள் பலர் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (8-2-81).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.